
கல்கி
ALKI 5-5-1957
30 நயா
பைசா



பாருங்கள்! ஒரு அரை வில்லை
சன்லைட் தான்
இவ்வளவு சலவையும்
செய்து முடித்து
விட்டது!
அதன் அதிகப்படியான நுரையே இதைச் சாதித்தது!
SUNLIGHT
பளிச்சென்று
வெண்மையாக
வெளுப்பது
சன்லைட் சோப்
இந்தியாவில் தயாரித்தது

கல்கி பொருளடக்கம்

'' கல்கி ''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

கலைமகள் வெள்ளிவிழா வெளியீடுகள்



தலைப்பிற்கு இருவராகப்
பன்னிருவர் கதைகள்



கிழமைகள் பற்றிய
பரிசுக் கதைகள்



பரிசு பெற்ற
சிறு கதைகள்



மாறுபட்ட தலைப்
புடைய கதைகள்



கதை எழுதிய
வரலாறுகள்



கற்பனைகளில்
புதுமைப் பெண்



ஊர்களின்
வர்ணனைகள்



○★○

ஐம்பது தொகுதிகளின் சாரமே 'கலைமகள் கதம்பம்'

சிறந்த நூல்களைப் படிக்க விரும்பும் ரசிகர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். உங்களுக்குப் பிரியமான எழுத்தாளர்களின் உயர்ந்த சிருஷ்டிகள். கலைமகள் வெள்ளி விழாவை யொட்டி 1-5-'57 முதல் 31-5-'57 வரை வெள்ளி விழா வெளியீடுகளுக்கு 25 சத வீதமும், மற்றக் கலைமகள் வெளியீடுகளுக்கு 20 சத வீதமும் கமிஷன் கிடைக்கும். தபால் செலவு தனி. உங்கள் ஆர்டர்களை விரைவில் அனுப்பி வையுங்கள்.

கலைமகள் த. பெ. 604, சென்னை-4.



மலர் 16 | இதழ் 40

தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

ஹேவிளம்பி சித்திரை 23 உ

அஸ்திவார அதிகாரிகளின் குரல்

பாரதத்தின் உயிர்நாடி பாரத நாட்டில் உள்ள லட்சக்கணக்கான கிராமங்கள் தான் என்று மகாத்மா காந்தி அடிக்கடி கூறி வந்தார். பாரத நாட்டு நிர்வாக மாளிகையின் அஸ்திவாரமாக இருப்பவர்கள் கிராம கர்ணம் என்று புகழ்பெற்ற கிராம அதிகாரிகள்தான் என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஏன், அந்த உண்மையை அந்த அதிகாரிகள்மீது போர் தொடுத்துள்ள சென்னை சர்க்கார்கூட ஒப்புக் கொள்கின்றனர்.

கிராம உத்தியோகஸ்தர்கள்தான் நாட்டின் அஸ்திவாரம், அரசாங்கத்தின் முதுகெலும்பு, நிர்வாகத்தின் ஆணி வேர் என்றெல்லாம் சென்னை சர்க்காரே திருவாய் மலர்ந்து அருளியுள்ளனர்.

கிராம அதிகாரிகளைச் சர்க்கார் வாய் நிறையப் பாராட்டுகின்றனர். ஆனால், வெறும் பாராட்டுதல்களால் என்ன பயன் என்று கிராம அதிகாரிகள் கேட்கிறார்கள். கைந்நிறையச் சம்பளம் தராவிடினும், கடனும் கஷ்டமுமின்றிக் குடும்பத்தை நடத்துவதற்குப் போதிய சம்பளமாவது தர வேண்டாமா என்று அவர்கள் கேட்கிறார்கள்.

பாரதநாடு சுதந்திரம் பெற்ற பின் கிராம அதிகாரிகளின் வேலைப் பளுதான் அதிகமாயிருக்கிறதேயன்றி, சம்பளம் அதிகம் ஆகவில்லை.

பாரத நாட்டில் சென்ற பத்து ஆண்டுகளிலே எத்தனை எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டு விட்டன. விலைவாசிகள் பன்மடங்கு உயர்ந்து விட்டன. எல்லாப் பிரிவினருக்கும் சம்பள விகிதம் உயர்ந்து விட்டது. ஆனால், சென்ற பத்து ஆண்டுகளாக யாதொரு மாறுதலுமின்றி, அன்றிருந்த மேனிக்கு அழிவின்றி இருந்து வருவது கிராம அதிகாரிகளின் சம்பளம்தான்! பத்து வருஷங்களுக்கு முன் அவர்களுடைய சம்பளம் ரூ 23, இன்றும் அவர்களுடைய சம்பளம் இருபத்து மூன்று ரூபாய்தான!

அஸ்திவார அதிகாரிகளின் இன்றையச் சம்பளம் ரூ. 18; பஞ்சப்படி ரூ. 5; ஆக தபால் பில்லைக்கு ஒரு அணா போக மீதி ரூ. 22 - 15 - 0 கிடைக்கிறது. அதாவது ஒரு நாளைக்கு அஸ்திவார அதிகாரிகளின் சம்பளம் ஒரு ரூபாய்க்கும் குறைவாகும்!

இந்த லட்சணத்தில், பல ஆண்டுகளாகக் கிராம அதிகாரிகள், மிராசுதார்கள் போன்ற கிராம மக்களிடமிருந்து பெற்று வந்த வர்த்தனையான உதவியையும் சுதந்திர சர்க்கார் நிறுத்தி விட்டார்கள்.

அவ்விதம் வர்த்தனை வாங்கிய சில அதிகாரிகளை நமது காருண்ய சர்க்கார் வேலையிலிருந்து நீக்கியும் விட்டார்கள்.

சென்ற மார்ச் மாதம் கிராம அதிகாரிகள் இனத்தில் கலந்துகொண்ட எழுபத்து மூன்று கிராம அதிகாரிகளின் சம்பளத்தைக் குறைத்து விட்டார்கள்.

சில கிராம அதிகாரிகளைத் தாற்காலிகமாகவேலையிலிருந்து நிறுத்திவிட்டார்கள்.

ஜமாபந்திக்கு வராமல் இருந்த பல அதிகாரிகள்மீது சென்னை சர்க்கார் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள்.

தங்கள் குறைகள் தீருவதற்காக இரண்டு நாட்கள் உண்ணாவிரதம் இருந்த சில அதிகாரிகள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் பொறுமையுடன் சகித்துக் கொண்டிருந்த கிராம அதிகாரிகள்கூட இப்போது சர்க்காருக்கு இறுதி எச்சரிக்கை விடுத்திருககிறார்கள். சென்னை ராஜ்யத்தில் உள்ள என். ஜி. ஓ.க்களைப்போல் தங்களுக்கும் பஞ்சப்படியை உயர்த்தினாலன்றி, தாங்கள் மே மாதம் பதினைந்தாம் தேதியிலிருந்து வேலை நிறுத்தம்

செய்யப் போவதாகக் கிராம அதிகாரிகள் தங்களுடைய சங்கக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானித்திருக்கிறார்கள்.

அவர்கள் அவசரப்பட்டுக் கொண்டு அவ்விதம் முடிவு செய்து விடவில்லை. தங்கள் குறைகளையும் கஷ்டங்களையும் வெகுகாலமாக எடுத்துக் கூறி வந்தார்கள். தங்கள் மீது கருணை காட்டித் தகுந்த பரிகார முறைகளைக் கைக் கொள்ளும்படி மந்திரிகளைக் கெஞ்சிக் கேட்டுப் பார்த்தார்கள்.

சர்க்கார் யந்திரம் ஒன்றுக்கும் அசைந்து கொடுக்கவில்லை. இறுதியில் தான் அவர்கள் வேறு வழியின்றி வேலை நிறுத்தம் செய்யத் தீர்மானிக்கும்படி நேர்ந்துள்ளது.

* * *

கிராம அதிகாரிகள் விஷயத்தில் கேரள ராஜ்ய சர்க்கார் என்ன செய்திருக்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட வேண்டியது அவசியமாகும்.

அவர்கள் கேரள ராஜ்யக் கிராம அதிகாரிகளின் சம்பளத்தையும் பஞ்சப்படியையும் ஐம்பத்திரண்டு ரூபாயாக உயர்த்தி நற்பெயர் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அவ்விதம் உயர்த்துவதால் ஏற்படக் கூடிய லட்சக்கணக்கான அதிகச் செலவைக்கூடக் கேரள சர்க்கார் லட்சியம் செய்யவில்லை.

குதிரை கீழே தள்ளியதுமின்றிக் குழியையும் பறித்த கதையாக, கிராம அதிகாரிகளின் பஞ்சப்படியை உயர்த்த மறுக்கும் சென்னை சர்க்கார், மேற்கொண்டு அவர்களுக்கு அநீதி இழைக்க முற்பட்டிருக்கிறார்கள்.

சமீபத்தில் ரெவின்யூ மந்திரி திரு மாணிக்கவேலர் அளித்த பேட்டி ஒன்றில், மூன்று அல்லது நாலு கிராமங்களை ஒன்று சேர்த்து அந்தக் கிராமங்களுக்கு ஒரு கிராம அதிகாரியை நியமிக்கச் சர்க்கார் உத்தேசித்திருப்பதாகக் குறிப்பிட்டார். சிக்கனத்தை உத்தேசித்து அவ்விதம் செய்யப் போவதாகவும் அவர் கூறினார்.

செலவைக் குறைப்பதற்காகச் சர்க்கார் மாதம் இருபத்துமூன்று ரூபாய் சம்பளம் வாங்கும் ஏழைக் கிராம அதிகாரிகளின் தலையிலா கை வைக்க வேண்டும்! சர்க்கார் மிகவும் ஆட்சேபகரமான அம்முறையை அமுலுக்குக் கொண்டு வருவார்களாயின், அது சிக்கனமாகாது. அற்பத்தனமாகவே முடியும்.

சர்க்காரின் வருமானத்தில் பெரும்பகுதியை வசூலித்துக் கொடுக்கும் கிராம அதிகாரிகள் அமைதியாக வாழ வழி ஏற்பட்டாலன்றி, அரசாங்க நிர்வாகத்தின் அஸ்திவாரத்துக்குப் பலம் ஏற்படாது.

எனவே, சென்னை சர்க்கார் தங்களுக்கென ஒரு தனி வழி வகுத்துக் கொண்டு அநீதி செய்ய முற்படாமல், கேரள சர்க்காரைப் போல் கிராம அதிகாரிகளின் சம்பளத்தை நியாயமான அளவுக்கு உயர்த்த முன் வருவார்கள் என்று நம்புகிறோம்.

அகில இந்திய ரேடியோவும் அணுகுண்டும்

பம்பாயில் "தனியார் சுதந்திர முயற்சிச் சங்கம்" என்ற புது ஸ்தாபனத்தை ஏற்படுத்தி அதற்குத் தலைவராக விளங்கும் திரு ஏ. டி. ஷராப் அவர்கள் ஒரு முக்கிய விஷயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

சமீபகாலத்தில் அகில இந்திய ரேடியோ நிலையங்களில் சர்க்கார் மேல் உத்தியோகஸ்தர்கள் சர்க்காரின் திட்டங்களையும் கொள்கைகளையும் விளக்கிப் பேசி வருகிறார்கள். இது சரியல்ல என்கிறார் திரு ஷராப்.

அகில இந்திய ரேடியோவை ஆளும் கட்சியினர் தங்கள் கொள்கைகளையும் செய்கைகளையும் பிரசாரம் செய்யப் பயன்படுத்திக் கொள்ளுவது இயல்பு. ஆனால் சர்க்கார் கொள்கைகளைப் பிரசாரம் செய்யும் பொறுப்பு சட்டசபை அங்கத்தினர்களுக்கோ, அல்லது பொது விஷயங்களில் அக்கறை கொண்டுள்ள பிரமுகர்களுக்கோதான் இருக்க வேண்டும். ஆனால் எப்படியோ சமீபகாலத்தில் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், கட்சிக் கொள்கைகளையும் திட்டங்களையும் பிரசாரம் செய்யும் வேலையில் ஈடுபட்டுவிட்டார்கள். இந்த சம்பிரதாயத்தை இன்று ஏற்படுத்திவிட்டால், நாளை மாற்றுக் கட்சியினர் ஆளும் பொறுப்பை ஏற்க நேரும்போது அவர்களுக்காகவும் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் பேச வேண்டியதாகுமல்லவா? சர்க்கார் உத்தியோகஸ்தர்களை இத்தகைய தர்ம சங்கடத்தில் வைப்பது நியாயமாகுமா?

அகில இந்தியா ரேடியோ மிகவும் சக்தி வாய்ந்த ஸ்தாபனம். காங்கிரஸ் சர்க்காரின் கொள்கைகளை உள்நாட்டில் பிரசாரம் செய்வதோடு மட்டுமல்லாமல், மற்றொரு லோகோபகாரமான காரியத்தையும் அகில இந்திய ரேடியோ செய்யலாம்.

சென்ற வாரம் சென்னை லட்சுமிபுரம் இளைஞர் சங்கத்தில் பேசிய பிரிட்டிஷ் தொழிற் கட்சியைச் சேர்ந்த ஸ்ரீமதி மோனிகா பெல்டன் என்ற அம்மையார் அந்தக் காரியத்தை நினைவு படுத்தினார்.

"அணுகுண்டு-ஹைட்ரஜன் குண்டு சோதனைகளை உலக நன்மைக்காக நிறுத்தப்பட வேண்டும்" என்று முதன் முதலில் குரல் கொடுத்தவர் ராஜாஜி அவர்கள்.


இன்று ராஜாஜியின் குரல் உலகெங்கிலும் எதிரொலிக்க ஆரம்பித்து விட்டது. உலகத்துப் பெரிய விஞ்ஞானிகள் எல்லாரும் ராஜாஜி கூறுவதை ஆமோதித்துப் பேசிவருகிறார்கள்.

பொது ஜன விழிப்பைப் பல நாடுகளில் உண்டாக்கி, இந்த அணுகுண்டு சோதனைகளை வல்லரசுகள் நிறுத்தும்படி செய்யவேண்டும் என்று பலதேச அரசியல்வாதிகள் வற்புறுத்தி வருகிறார்கள்.


இந்த விழிப்பை ஏற்படுத்தியது ராஜாஜியின் பிரசங்கங்கள்தான் என்று, ராஜாஜி அவர்களுடைய உரைகளைக் கேட்டவர்கள் சந்தேகமறக் கூறுகிறார்கள்.

அணுகுண்டு சோதனைகளை நிறுத்தும்படி ராஜாஜி செய்த அற்புதமான பிரசங்கங்களை நமது அகில இந்திய ரேடியோ ஒலி பரப்ப வேண்டும். அகில இந்திய ரேடியோவில் வெளி நாடுகளுக்கு ஒலிபரப்புவதற்கென்றே

பிரச்னைகள் தீருமா?



அதிக சம்பளம்
அதிக சம்பளம்
அதிக சம்பளம்
அதிக சம்பளம்
கேரள ராஜ்ய கிராம உத்தியோகஸ்தர்கள்
சென்னை ராஜ்ய கிராம உத்தியோகஸ்தர்கள்
கேரள ராஜ்ய கிராம அதிகாரிகளுக்குக் கிடைத்துள்ள அதிக சம்பளத்தைப்போல் தங்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதற்காகச் சென்னை ராஜ்ய கிராம அதிகாரிகள் வேலை நிறுத்தம் செய்ய உத்தேசித்திருக்கிறார்கள்.



"என்ன! வெட்ட வெட்டத் தலை வளர்ந்து கொண்டே போகிறதே!"
குடிசை வாழ்வோர் பிரச்னை
சென்னை சர்க்கார்
சென்னை நகரசபை
சென்னை நகரசபை குடிசை வாழ்வோரின் எண்ணிக்கையைக் குறைக்க எவ்வளவோ முயன்றும், புள்ளி விவரக் கணக்குப்படி குடிசை வாழ்வோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகித்தான் வருகிறது.

ஒரு பகுதி இருக்கிறது. அந்தப் பகுதியில் ராஜாஜி அவர்கள் அணு சோதனையை நிறுத்த வேண்டியதின் அவசியத்தை வற்புறுத்திக் கூறும் பிரசங்கங்களை ஒலிபரப்ப வேண்டும் என்று மிக வன்மையாக அந்த அம்மையார் கேட்டுக் கொண்டார்.

இது மிகச் சிறந்த யோசனை என்று கருதுகிறோம். மேல் நாடுகளில் உள்ள நமது தூதுவர்கள் அந்த அந்த நாடுகளிலுள்ள பிரமுகர்களை வரவழைத்து அணுசோதனைகள் சம்பந்தமாக ராஜாஜி வெளியிடும் கருத்துக்களை, பாரத தேசத்தின் குரலை, ஆசிய மக்களின் உள்ளக் குமுறலைக் கேட்கும்படி செய்ய வேண்டும். இப்பணியில் நமது பாரத சர்க்காரின் வெளிநாட்டு இலாக்கா உடனடியாக இறங்க வேண்டும். இன்று மேல் நாட்டில் நல்ல சூழ்நிலை நிலவி வருகிறது! நமது அகில இந்திய ரேடியோ இந்த நிலையைப்பயன்படுத்தி உலகத்துக்கு ஒரு மகத்தான தொண்டு புரியச் சிறிதும் தாமதமின்றி முன்வர வேண்டும்.

சிங்கப்பூருக்குச் சுதந்திரம்!

கிழக்கு ஆசியாவிலே பிரிட்டிஷாரின் இராணுவக் கோட்டையாக இருந்து வந்த சிங்கப்பூருக்குச் சுதந்திரம் கிடைக்கப் போகிறது! சென்ற நூற்று முப்பது ஆண்டுகளுக்கு மேலாகச் சிங்கையில் வேரூன்றியிருந்த பிரிட்டிஷாரின் ஆதிக்கம் மறைவதற்கு வழி பிறந்திருக்கிறது. சிங்கப்பூர் பிரதம மந்திரி லிம் யூ ஹாக் தலைமையில் லண்டனுக்குச் சென்று பேச்சு நடத்திய கோஷ்டியாருக்கும் பிரிட்டிஷ் சர்க்காருக்கும் சமீபத்தில் ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தின்படி, பிரிட்டிஷ் காலனியாக இருந்த சிங்கப்பூர் ராஜ்யத்தின் வெளி விவகாரங்கள், தற்காப்பு இவற்றின் நிர்வாக அதிகாரம் மாத்திரம் இனியும் பிரிட்டிஷாரின் கையிலேயே இருந்துவரும். புதிய அரசியல் திட்டத்தின்படி சிங்கப்பூர் சட்டசபையில் ஐம்பத்தொரு அங்கத்தினர்கள் இருப்பார்கள். அவர்கள் யாவரும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்பது ஒப்பந்தத்தின் முக்கிய அம்சமாகும். பிரிட்டிஷார் தயவில் சட்டசபைக்குள் நுழைந்து அவர்கள் சார்பில் கை தூக்கி, அவர்களுக்கு உடந்தையாகச் சுதந்திர உரிமைக்குக் குந்தகம் விளைவிக்கும் நியமன அங்கத்தினர் ஒருவர் கூடப் புதிய சட்டசபையில் இருக்க மாட்டார்.

எதிர்காலத்தில் நெருக்கடியான அரசியல் நிலைமை ஏற்பட்டால், சிங்கப்பூர் சர்க்கார் நிர்வாகத்தை நிறுத்தி வைக்கப் பிரிட்டிஷ் சர்க்காருக்கு அதிகாரம் உண்டு என்ற ஆட்சேபகரமான அம்சமும் ஒப்பந்தத்தில் இடம் பெற்றிருக்கிறது. சிங்கப்பூர் புதிய அரசியல் திட்டத்தின்படி ஏற்படும் முதலாவது சட்டசபையில், ஏற்கெனவே பிரிட்டிஷாரை எதிர்த்து நடந்த பலாத்கார நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களுக்கு, அதாவது கம்யூனிஸ்டுகளுக்கு, இடம் கொடுக்கக் கூடாது என்பது பிரிட்டிஷ் சர்க்கார் விதித்துள்ள மற்றொரு நிபந்தனையாகும். தங்கள் நாட்டின் எதிர்கால நலனை மனத்தில் எண்ணி, மேலே குறிப்பிட்ட நிபந்தனைகளுக்குச் சிங்கப்பூர்த் தலைவர்கள் இசையும்படி நேர்ந்துள்ளது.

சிங்கப்பூர், சீனர், மலாயர், இந்தியர், இலங்கையர் இந்த நாலு சமூகத்தினரும் அடங்கிய ஒரு பிரதேசமாகும். அப்படியிருந்தும் அங்கு அந்தச் சமூகங்களுக்குள் இதுவரையில் துவேஷமோ, பூசலோ, போராட்டமோ இராதது மகிழ்ச்சி அளிக்கக் கூடிய விஷயமாகும். எனவே, மேற்படி சமூகத்தினர் சமயோசிதமாகவும் ஒற்றுமையுடனும் புதிய அரசியலை நடத்துவார்களாயின், சிங்கப்பூர் பிரிட்டிஷாரின் ஆதிக்கம் அறவே மறைந்து பூரண சுதந்திர நாடாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.


சிங்கப்பூரை, பிரிட்டிஷார் தனியாகப் பிரித்துள்ளார்களெனினும், அதை மலாய் நாட்டின் ஒரு பாகம் என்றே கூறவேண்டும். இன்னும் சில மாதங்களில் மலாய் நாடு பூரண சுதந்திரம் அடையப் போகிறது. மலேயா சுதந்திரம் பெற்றபின் பத்து ஆண்டுகள் வரையில், சட்டசபைகளில் தமிழ் மொழியின் உபயோகத்தையும் சீன மொழியின் உபயோகத்தையும் அங்கீகரிக்க வேண்டும் என்று சென்ற வாரம் பினாங்கில் நடைபெற்றுள்ள மலேயா இந்தியர் காங்கிரசில் தீர்மானம் நிறைவேறியிருக்கிறது. சுதந்திர மலேயாவில் சர்க்கார் உத்தியோகங்களில் எவ்வித வேற்றுமையுமின்றி எல்லாப் பிரஜைகளுக்கும் சம உரிமை அளிக்க வேண்டுமென்பதும் மேற்படி காங்கிரசில் நிறைவேறிய தீர்மானங்களில் ஒன்றாகும். இவ்விதம் மலேயா பூரண சுதந்திரத்தின் சகல அம்சங்களுடனும் விளங்குகையில், அடுத்துள்ள சிங்கப்பூரின் பூரண சுதந்திரத்துக்கு மாத்திரம் பிரிட்டிஷார் அதிக காலம் முட்டுக்கட்டை போட்டு வர முடியாது என்பது திண்ணம்.

ராஜாஜி அவர்கள் எழுதும்

கிறிஸ்துவத் துறவி லாரென்ஸ்

என்ற புதிய தொடர் அம்சம்

பதினேழாவது நூற்றாண்டில் பிரான்ஸ் தேசத்தில் வாழ்ந்த லாரென்ஸ் என்ற கிறிஸ்துவ ஞானியின் அருள் வாக்குகளை 12-5-57 கல்கி இதழிலிருந்து ராஜாஜி அவர்கள் தொடர் கட்டுரைகளாக வழங்குவார்


Remy
SNOW
மாடி லக்ஷ்மி
அவள் அழகி...
அவள் உபயோகிப்பது
ரெமி ஸ்னோ
&
பவுடர்

அன்பார்ந்த நேயர்களுக்கு

கல்கியின் விலையை உயர்த்த வேண்டியதின் அவசியத்தை விளக்கி நாம் எழுதியிருந்ததைப் பரிபூரணமாக வரவேற்று நமக்குப் பல நேயர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். தமிழ் மக்கள் அறிவில் சிறந்தவர்கள், நாட்டின் பொருளாதார நிலையை நன்கு உணர்ந்தவர்கள். அவர்கள் தங்கள் சொந்தப் பத்திரிகையான கல்கியைச் சிறந்த முறையில் நடத்துவதற்கு வேண்டிய உற்சாகத்தையும் ஆதரவையும் கொடுக்காமல் வேறு என்ன செய்ய முடியும்? — அவர்கள் மகிழ்ச்சிக்காகவும் நலத்துக்காகவும் பணியாற்றுவது ஒன்றுதானே 'கல்கி'ப் பத்திரிகையின் லட்சியம்.

** ** **

“மாலவல்லியின் தியாகம்” ஆரம்பமான பொழுதில், ஒரு நேயர் “ஏன் இப்படி ஒரு கதையை ஆரம்பித்திருக்கிறீர்கள்? நல்ல விறுவிறுப்பான சரித்திரத் தொடர் கதையைப் போடக்கூடாதா?” என்று எழுதியிருந்தார். இப்போது அவரைப் போன்றவர்களே இரட்டிப்புச் சந்தோஷத்துடன் மாலவல்லியின் கதையைப் பாராட்டிக் குதூகலத்துடன் நமக்குக் கடிதங்கள் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். திரு கி. ரா. கோபாலனின் தெளிந்த நடையும், இலேசான ஹாஸ்யம் பொருந்திய அவர் எழுத்தும் விறுவிறுப்பான கதையின் போக்கும் வாசக நேயர்களைக் கவர்ந்து விட்டதில் வியப்பொன்றுமில்லை.

இன்னொரு சமூகத் தொடர் கதை, 'மலைச் சாரல் மாதவி.' பேராசிரியர் கல்கியின் புதல்வி ஆனந்தி எழுதி வருவது. மலைச்சாரலின் மலர் குலுங்கும் இனிய மணத்துடன் கலந்து திகழும் சுகந்த நவீனம். அழகுக்கு அழகு செய்வது போலச் சித்திரக் கலைஞர் வினுவின் வர்ணச் சித்திரங்கள் கதையை அலங்கரிக்கின்றன. “அதைப் பார்த்துவிட்டாலே போதுமே! படிக்கத் தூண்டி விடுகிறதே!” என்று வியக்கிறார் ஒரு நேயர்.

ஈழ நாட்டுப் பிரயாணக் கட்டுரைகளைப் படித்து விட்டு, “அடேயப்பா! கட்டுரை அபாரமாயிருக்கிறதே! இலங்கையில் இருப்பவர்களின் கண்களில் படாத பல அபூர்வ விஷயங்கள் இந்தப் பரிதனின் கண்களில் பட்டிருக்கின்றனவே! நாங்கள் வீட்டுக்குள்ளிருந்தபடியே எந்த விதமான கஷ்டமும் இல்லாமல் இலங்கைத் தீவைச் சுற்றுப் பிரயாணம் செய்வதுடன் அதன் காட்சிகளையும் அனுபவித்து வருகிறோம். எங்களை இன்னும் எங்கெல்லாம் அழைத்துச் செல்லப் போகிறாரோ?” என்று கேட்டு அதிசயப்படுகிறார்கள் ஈழத் தீவிலேயே வசித்து வருபவர்கள்கூட.

** ** **

கல்கியில் இப்பொழுது வரும் தொடர் கதைகள், உயர்தரமான சிறு கதைகள், இலக்கிய,வைத்திய, பிரயாணக் கட்டுரைகள், வண்ணச் சித்திரங்கள் எல்லாம் ஒருபுறம் இருக்க, நேயர்களுக்கு இன்னொரு மகிழ்ச்சிகரமான செய்தியையும் தெரிவித்து விடுகிறோம்.

அடுத்த வாரத்துக் கல்கி, “சர்வோதய விசேஷ இதழாக” மலரப் போகிறது. சென்ற ஆண்டு பூமிதான முனிவர் வினோபாஜி அவர்கள் தமிழ் நாட்டுக்குள் அடி எடுத்து வைத்த அடுத்த வாரத்தில் சர்வோதய விழா நடைபெற்றது. நடமாடும் தெய்வமாக விளங்கி வரும் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள் இருக்கும் காஞ்சியிலே நடைபெற்றது. இந்த ஆண்டு கேரள நாட்டில் நடைபெறுகிறது. கேரள நாட்டில் வினோபாஜி அடி எடுத்து வைத்த சில வாரங்களிலேயே நடைபெறுகிறது. காஞ்சி காமகோடி பீடம், சிருங்கேரி பீடம் போன்ற புனிதமான ஸ்தாபனங்களை ஆரம்பித்து வைத்த ஆதி சங்கரர் அவதரித்த புண்ணிய பூமியான காலடியில் நடைபெறப் போகிறது. சரித்திரப் பிரசித்தி பெறப்போகும் இந்த சர்வோதய விழாவை ஒட்டி வெளியாகும் மே 12ந் தேதி கல்கி இதழ் விசேஷ சர்வோதய இதழாக வெளிவருகிறது. இந்த இதழில் ஆர்ட் காகிதத்தில் பகவான் ஆதிசங்கரரின் மூவர்ண திருவுருவப் படம் முகப்புச் சித்திரமாகத் திகழும்.

இந்த சர்வோதய கல்கிஇதழில் வழக்கமான தொடர் அம்சங்களுடன் புண்ணிய பூமியான காலடியின் சிறப்புக்களைக் கூறும் விசேஷக் கட்டுரை ஒன்று வெளியாகிறது. அத்துடன் இன்றையதினம் உலகத்தின் கவனத்தையே கவர்ந்திருப்பது கேரள ராஜ்யம்' அல்லவா? அந்த ராஜ்யத்தில் பாரத நாடு சுதந்திரம் பெற்ற பிறகு இப்பொழுதுதான் ஒரு நிலையான மக்கள் ஆட்சி ஏற்பட்டிருக்கிறது. அங்கு இதுவரை இருந்து வந்த ஜனாதிபதி ஆட்சியை அப்புறப்படுத்திவிட்டு, பதவி ஏற்றுள்ள கம்யூனிஸ்ட் கட்சியின் மந்திரிகளைப் பேட்டி காணுவதற்காக நமது உதவி ஆசிரியரும், சித்திரக்காரரும் திருவனந்தபுரத்துக்குச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் எழுதும் விசேஷ கட்டுரையும் சித்திரங்களும் இந்த விசேஷ இதழில் இடம் பெறுகின்றன.

இவைகளுக்கெல்லாம் மேலே இந்த இதழுக்குச் சிகரமாக விளங்கப் போவது ராஜாஜி அவர்கள் எழுதும் புதிய தொடர். பதினேழாவது நூற்றாண்டில் வாழ்ந்த பிரான்ஸ் தேசத்துப் பரம ஞானியான லாரன்ஸ் என்ற மகானின் தியாக வாழ்க்கையையும் அவரது அருமையான உபதேசங்களையும் கிறிஸ்துவத் துறவி லாரன்ஸ் என்ற தலைப்பில் கல்கி நேயர்களுக்கு ராஜாஜி அவர்கள் தொடர் கட்டுரைகளாக வழங்கப் போகிறார்.

இவை தவிர 'மனப் புயல்' என்ற சமூகச் சித்திரத் தொடர்கதையும், விளையாட்டுக் கலையில் தலைசிறந்து விளங்கும் நிபுணர்களை அவ்வப்போது அறிமுகப்படுத்தும் “விளையாட்டு மன்னர்கள்” என்ற புதிய பகுதியும் இதே இதழில் ஆரம்பமாகின்றன என்பதையும் நமது நேயர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். வணக்கம். —ஆசிரியர்



தளதளக்கும் ஈனோ வயிற்றுக் கோளாறுகளிலிருந்து எட்டே விநாடிகளில் நிவாரணமளிக்கிறது!

அஜீர்ணம், நெஞ்செரிச்சல், அல்லது வாயுப் பொருமல் இவைகளில் எதையும் ஈனோ நிவர்த்திக்கிறது!

ஒரு கிளாஸ் தளதளக்கும் ஈனோ ப்ரூட் ஸால்ட் சாப்பிட்டால் எட்டே விநாடிகளில் வயிற்றுக் கோளாறுகள் சீரா கின்றன. மிதமாக பேதி ஏற்பட விரும்பினால் வெறும் வயிற்றில் சிறிது பெரிய 'டோஸ்' ஈனோ அருந்தினால் போதும். எப்பொழுதும் உங்கள் வீட்டில் ஒரு பாட்டில் ஈனோ வைத்திருங்கள்.

ஈனோ 'ப்ரூட் ஸால்ட்'

அமித அமிலங்களை அடக்கும்
தளதளக்கும் பானம்

'ஈனோ' மற்றும் 'ப்ரூட் ஸால்ட்' என்ற வார்த்தைகள்
ரிஜிஸ்தர் செய்யப்பட்ட டிரேட் மார்க்குகள்



ஈனோ
இந்த சீதோஷ்ண
ஸ்திதிக்கு
விசேஷமாக ஏற்றது
(2 சைஸ்களில் கிடைக்கும்)

நேருஜியின் இலங்கை விஜயம்

கொழும்பு - 26உ

பாரதப் பிரதம மந்திரி நேருஜி மே மாதம் 17ம் தேதி இலங்கைக்கு விஜயம் செய்கிறாரென்ற செய்தி இலங்கை மக்கள் அனைவருக்கும் அளவு கடந்த சந்தோஷத்தைக் கொடுத்திருக்கிறது. நேருஜியை வரவேற்று உபசரிப்பதில் அகில இலங்கை பௌத்த மண்டலமும் அரசாங்கமும் ஸ்தல ஸ்தாபனங்களும் போட்டி போடுகின்றன. இலங்கையில் இதற்கு முன் வேறு எந்தத் தலைவருக்கும் எந்தக் காலத்திலும் அளிக்கப்பட்டிராத முறையில் பிரமாதமான வரவேற்பளிக்க முஸ்தீபுகள் நடந்து வருகின்றன. நேருஜிக்கே இலங்கையில் இதற்கு முன் கிடைத்திராதபடி அவ்வளவு பிரமாதமானதாக இருக்கும் இம்முறை அவரை மகாஜனங்கள் வரவேற்கும் முறை என்று பத்திரிகைகள் எழுதியிருக்கின்றன.

நேருஜியின் இந்த விஜயம் அரசியல் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு அல்ல. அதைவிட முக்கியமான நல்லெண்ணத் தூது என்றும் நல்லெண்ணமும் பரஸ்பர நம்பிக்கையும் உறுதியாக ஏற்படுமானால் அதன் முன்னிலையில் மற்றப் பிரச்னைகள் தாமாகவே தீர்ந்துவிடுமென்றும் 'வீரகேசரி' என்ற கொழும்பு தினசரி எழுதியிருக்கிறது. சென்ற 1954ம் வருடம் நேருஜி இலங்கைக்கு வந்தபொழுது இங்கு பிரதம மந்திரியாயிருந்த ஸர் ஜான் கொத்தலாவலையும் அவரது யு. என். பி. கட்சியும் இந்தியாவைப் பகைத்துக் கொள்ளுவதில் முழுமூச்சுடன் ஈடுபட்டிருந்தனர். மேற்கத்திய வல்லரசுகளுக்குப் பக்கமேளம் தட்டும் முறையில் சகல விஷயங்களிலும் இந்தியாவைக் கேலி செய்து கொண்டும் எதிர்த்தும் வந்ததோடு எந்த நிமிடமும் இந்தியா படையெடுத்து ஆக்கிரமிக்குமென்று பூச்சாண்டி காட்டி மக்கள் மனத்திலும் இந்தியத் துவேஷத்தை வளர்த்து வந்தார்கள். இன்று இலங்கையில் நிலவும் நிலைமை முற்றிலும் வேறு. இந்திய அரசாங்கத்துடன் சகல சர்வதேசப் பிரச்னைகளிலும் தோளோடு தோள் சேர்ந்து ஒத்துழைக்கவும், இந்தியாவுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்ளவும் ஆவலுடன் இருக்கும் ஒரு அரசாங்கம் இப்பொழுது இலங்கையில் ஏற்பட்டிருக்கிறது. இந்த அரசாங்கம் பதவிக்கு வந்ததென்ற ஒரு வருடத்துக்கிடையில் சீர்குலைந்து போயிருந்த இலங்கை இந்திய உறவு வெகுதூரம் சீர்ப்பட்டுப் பரஸ்பர நல்லெண்ணமும் நம்பிக்கையும் வேகமாக வளர்ந்து வருகின்றன. இந்த நிலைமையில் நேருஜி இப்பொழுது இலங்கைக்கு விஜயம் செய்வது பல வகையிலும் பொருத்தமானதென்பதோடு இலங்கை இந்தியர்களின் பிரச்னைகளுக்கு நல்ல முடிவு காணலாம்.

நேருஜி இங்கு வரும் மே மாதம் 17ம் தேதியன்றுதான் கண்டியில் இலங்கை ஜனநாயக காங்கிரஸின் வருடாந்திர மகாநாடும் நடைபெறுகிறது. 1954ம் ஆண்டிலும் இதே போல நேருஜி விஜயத்தின் பொழுது காங்கிரஸ் மகாநாடு நடைபெறுகையில் இந்தியத் தொழிலாளர்களின் மத்தியில் நேருஜி தோன்றுவதைக் கொத்தலாவல விரும்பவில்லை. ஆகையால் எளிய தோட்டத் தொழிலாளர்களை நேருஜி சந்திக்க முடியாமல் போயிற்று. இம்முறை அப்படியில்லாமல் விரிந்த மனப்பான்மையுடைய இலங்கைப் பிரதமர் திரு பண்டாரநாயகாவே நேருஜியை காங்கிரஸ் மகாநாட்டுக்கும் தோட்டப் பகுதிகளுக்கும் அழைத்துச் செல்லுவார் என்றும் காங்கிரஸ் மகாநாட்டுக்கு நேருஜி சமுகம் அளிக்கலாம் என்றும் எதிர்பார்க்கின்றனர்.


* * *

மைக் வில்சன், ஆப்ரே கிளார்க் ஆகிய இரு பிரிட்டிஷ் நிபுணர்கள் திருகோணமலைக்கு அருகிலுள்ள கடலில் இப்பொழுது நடத்தி வரும் ஆராய்ச்சிகள் பயனளிக்கும் பட்சத்தில் சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் ராவணன் சிவ வழிபாடு நடத்தியதாகக் கருதப்படும் கோணேசர் ஆலயத்தைப் பற்றிய பல அதிசயமான உண்மைகள் வெளியாகலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. அங்குள்ள சுவாமிமலை மீது பாடல் பெற்றதும் சரித்திரமுக்கியத்துவம் வாய்ந்ததுமான கோணேசர் ஆலயம் இருந்தது. அதைக் கடல் கொண்டு போன பின்னர் செங்குட்டுவன் காலத்தில் அந்த ஆலயம் புதுப்பிக்கப்பட்டது. பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் போர்ச்சுகீசியர்கள் அந்த ஆலயத்தை இடித்துத் தரைமட்டமாக்கிவிட்டனர். நல்லவேளையாகப் பழைய ஆலயத்தின் படம் ஒன்று போர்ச்சுகீசியத் தலைநகரில் இருந்தது. அதை டாக்டர் டபிள்யூ. பாலேந்திரா கண்டு பிடித்துக் கொண்டு வந்தார். அந்தப் படத்தை ஆதாரமாக வைத்துக் கொண்டும் இலங்கை இந்தியச் சிற்பிகளின் உதவியைக் கொண்டும் முன்னிருந்த மாதிரி புதிய ஆலயம் இப்பொழுது கட்டப்பட்டு வருகிறது.

மைக் வில்சன், ஆப்ரே கிளார்க் என்ற இரு பிரிட்டிஷ் நிபுணர்களும் சென்ற வருடம் திருகோணமலைக் கடலில் ஆராய்ந்து ஆழ் கடலுக்கு அடியில் புகைப் படம் பிடித்ததில் கோணேசர் ஆலயம் கடலுக்கு அடியில் சிதைவுறாமல் இருப்பதைக் கண்டு பிடித்தார்கள். அது சுமார் 4500 வருடப் பழமை வாய்ந்ததாயிருக்க வேண்டும் என்றும் அறிவித்தார்கள். நவீன உபகரணங்கள் இல்லாததால் அவர்களுடைய ஆராய்ச்சி அப்பொழுது தடைப்பட்டது. இப்பொழுது புதிய உபகரணங்களுடன் இராவணன் வழிபட்ட கோயிலைக் கடலுக்கு அடியில் படம் பிடித்துத் திரைப்படமாக்க ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள்.

சுவாமி மலைப் பகுதியைப் புண்ணியக்ஷேத்திரமாகப் பிரகடனப் படுத்தி அதன் நிர்வாகத்தை மதத் தலைவர்களின் கையில் ஒப்படைக்கப் பிரதமர் திரு பண்டாரநாயகா தீர்மானித்திருக்கிறார்.

— ரஜனி



...நாகரிகத்தை விரும்பினான் ராமதுரை. ஆனால் முடிவில்...

நல்ல நாகரீகம்!

கு. ப. சேது அம்மாள்

மோட்டார் சைக்கிள் வாசலில் வந்து நின்ற சத்தம் கேட்டதும் எழுந்து வந்து கதவைத் திறந்தாள் சரோஜா.

சைக்கிளை வெளி வராந்தாவில் நிறுத்தி விட்டுப் பின் ஸீட்டில் கட்டியிருந்த காகிதப் பொட்டலத்தை அவிழ்த்து எடுத்து ராமதுரை உள்ளே வந்ததும் அதைக் கையில் வாங்கியபடி, "ஜவுளிக் கடைக்குப் போய்வருகிறீர்களா! ஏதடா, மணி ஐந்தரையாகிறது. இன்னும் காணோமே என்று பார்த்தேன்" என்று கூறி மேஜையின்மீது வைத்து விட்டுச் சமையலறைக்குச் சென்றாள் சரோஜா.

ராமதுரை உடைகளை மாற்றிக் கொண்டு முகம், கை கால்களைக் கழுவிக்கொண்டு வந்து அமர்ந்ததும், துவாலை யெடுத்துக் கொடுத்து விட்டு, டீபாயை நாற்காலிக்கு முன் எடுத்துப் போட்டு, சிற்றுண்டியும் காப்பியும் வைத்தான். பிறகு "ஷர்ட் துணி வாங்கும்போது மல் கூட வாங்குங்கள் என்றேனே, வாங்கினீர்களோ?" என்று கேட்டுக் கொண்டே அந்தக் காகிதப் பார்ஸலை அவிழ்க்கத்தொடங்கினாள்.

அவனுடைய ஏமாற்ற முக பாவத்தை ரஸிக்க விரும்பி, குறும்புச் சிரிப்புடன் அவன் கேள்விக்குப் பதில் சொல்லாமல் சிற்றுண்டி சாப்பிடுவதில் முனைந்திருந்தான் ராமதுரை.

பார்ஸலுக்குள் இருந்தவைகளைப் பார்த்து, பரக்க விழித்தாள்! ஷர்ட் துணி, மல்லுக்குப் பதிலாக கிரேப் 'ஸில்கி'ல் பவள நிறப் பைஜாமா, வைலட் கலர் ஜிப்பா, மக்மல் துணி ஆகிய மூன்றும் இருந்ததைக் கண்டு, "ஐயையோ, யாருடைய பார்ஸலையோ தவறிப் போய் உங்களிடம் கொடுத்திருக்கிறார்கள்!" என்றாள் சரோஜா.

"யாருடையதுமில்லை. நம்முடையதுதான்! இன்று ரோமியோ அண்ட் ஜூலியட் சினிமா. பிரமாதமாயிருக்கும், போகலாமா?"

"சினிமா நாளைக்குப் பார்ப்போம். இன்று ஆடி வெள்ளிக் கிழமை. அதுவும் கடைசி. கற்பகாம்பிகைக்கு அர்ச்சனை செய்துகொண்டு வரவேண்டும். அர்ச்சனைக்குச் சாமானெல்லாம் கூட வாங்கி வைத்திருக்கிறேன்.."

"அர்ச்சனையெல்லாம் அடுத்த வெள்ளிக் கிழமை செய்து கொள்ளலாம்; கற்பகாம்பிகை எங்கும் ஓடிப் போய்விட மாட்டாள்! படம் நாளைக்கு ஓடிப் போய்விடும். முகம் கழுவிப் புத்தாடை அணிந்து கொண்டு வா, சீக்கிரம்" என்று அந்தப் பார்ஸலை எடுத்து அவள் கையில் கொடுத்தான் ராமதுரை.

வியப்பினால் கண்கள் விரிய, "இதைப் போட்டுக் கொண்டா வரச் சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டாள் சரோஜா.

"பஞ்சாபி உடையில் உன்னைப் பார்க்க வேண்டும் என்று ஆசை..."

"ரொம்ப சந்தோஷம், போட்டுக் கொள்ளுகிறேன்—ஆனால் இந்த வேஷத்துடன் சினிமாவுக்கு வர மாட்டேன்!"

"வேஷமா!" என்று கண்களை உருட்டி விழித்தான் ராமதுரை.

"பழக்கமில்லாத ஒன்றைச் செய்து கொண்டால் வேஷம் போட்ட மாதிரி இருக்குமே என்றநினைவில் இவ்வாறுசொல்லிவிட்டேன்!" என்று தப்பித்துக் கொண்டாள் சரோஜா.

"சே! நீ நினைப்பது தவறு, சரோ! உன் அழகுக்கு இந்த உடை என்ன ஜோராக இருக்கும் தெரியுமா?"

நாணத்தினால் தலை கவிழ, "ஐயைய, நான் மாட்டவே மாட்டேன்" என்றாள் உறுதியாக.

"மாட்டாயா!" என்று சொட்டையாக விழித்தான் ராமதுரை.

ஆசாபங்கம் அவனுடைய குரலில் நன்கு பிரதிபலித்தது!

கணவனுடைய மனநிலையைக் கண்டதும் சுதாரித்துக்கொண்டு, "கோபித்துக்கொள்ளாதீர்கள். போனவாரம் நீங்கள் வாங்கி வந்த ஜாதா ஸில்க் புடவையை உடுத்திக் கொண்டு வருகிறேன். வந்ததும்..." என்று இழுத்தாள்.

"வேண்டவே வேண்டாம். இனிமேல் உன் இஷ்டப்படி, கோயில், குளம், புராணம், கதை என்று எங்கு வேண்டுமானாலும் போ. நான் என் இஷ்டப்படி இருந்து கொள்கிறேன். எம். ஏ. படித்து விட்டு இப்படிப் பட்டிக் காட்டுத் தனமாக நீ இருக்க வேண்டாம்" என்று கூறிவிட்டு விர்ரென்று வெளியேறி விட்டான் ராமதுரை.

அவ்வளவையும் கேட்டுக் கொண்டு நின்ற சரோஜாவுக்கு, கணவனுடைய உதாசீனச் சொற்களும், பழிப்பும் தாக்கி அவளை அயரச் செய்தன. கண்கள் நீரைக் கக்க அப்படியே தரையில் அமர்ந்து சிந்தனையில் மூழ்கினாள்.

ராமதுரை படிப்பில் நல்லமுற்போக்குள்ள வனாக—அதிலும், பௌதிக சாஸ்திரத்தில் மேதையாக இருந்ததால் அரசாங்கம் அவனை ஐரோப்பிய நாடுகளுக்கெல்லாம் அனுப்பிப் பயிற்றுவித்தது!

அதன் விளைவாக ஏழு ஆண்டுகளில் நாகரிகப் பழக்க வழக்கங்களில் ஊறியிருந்தான். தாய்நாடு திரும்பியதும், அவனுக்கு வேலை காத்திருந்ததுடன் பெற்றோர்கள் பார்த்து வைத்திருந்த கல்யாணமும் காத்திருந்தது.

சரோஜா, நல்ல அழகி. பிரசன்னமான முகம், ஒளி வீசும் கண்கள், மிருதுவான பேச்சும், புன்சிரிப்பும் பார்ப்போர் நெஞ்சை அள்ளும் சக்தி படைத்தவை! பகட்டில்லாத உடை, மிதமான அலங்காரம், கல்வியறிவினால் கிடைத்த அடக்கம், நிதானம் ஆகிய இந்த உன்னத உயர்வு பெற்று அவற்றின் பலத்தால் நவநாகரிகப் பித்தனான ராமதுரையின் மனப்பீடத்தில் அமர்ந்து ஆட்சி செலுத்திவர முடிந்தது!

அன்னிய மோகமும், ஆடம்பர வாழ்க்கையும் அடியோடு விரும்பாத சரோஜா—அவற்றின் உறைவிடமான ராமதுரையிடம் தெய்விகப் பிரேமை செலுத்தி, அவன் கட்டளைகளுக்குப் பணிவது போலப் பணிந்து அவனைத் திருப்தி செய்வாள்!

ராமதுரையின் சுந்தர ரூபமும், முல்லைச் சிரிப்பும் அவள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டிருந்தன! அவனுடைய அறிவும், ஆராய்ச்சியும் அவள் சிந்தனைக்கு விருந்தாக அமைந்தன. அனைத்திலும் தன்னை வெற்றி கொண்ட கணவனுடைய அசம்பாவித நாகரிக மோகத்தை அகற்ற அரும்பாடுபடும்போது அதி ஜாக்கிரதையுடன் அவற்றைக் கையாண்டாள்!

ஆனால் இன்று?....

தன் அன்பு மணாளனுடைய கோபமும், வெறுப்பும் அவளை வதைத்தன. 'அடடா, அவசரப்பட்டு அப்படி மறுக்காமல், அவர் விருப்பப்படி இரண்டாவது காட்சிக்காவது போயிருந்திருக்கலாமே! ஒரு தடவை அவர் இஷ்டத்தைப் பூர்த்தி செய்து விட்டுப் பிறகு மறுத்திருந்தால், அதை லட்சியம் செய்ய மாட்டார். இப்போது என்ன வழி...? அவர் போக்கில் அவரை விட்டுத்தான் பிடிக்க வேண்டும் - அவருடைய தாயார் சொல்லுவதுபோல! நல்ல வேளையாக அவருக்கு மனசில் வர்மம் கிடையாது. அவர் திரும்பி வருவதற்குள்...' என்று சிந்தனைக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டு எழுந்து முகம் கழுவி முக அலங்காரத்தை முடித்துக் கொண்டாள். பைஜாமா, ஜிப்பாவை எடுத்து அணிந்து இரட்டைப் பின்னல் போட்டுக் கொண்டு கணவன் வரும் வழியில் விழி வைத்துக் கொண்டு நெஞ்சம் துடிக்க உட்கார்ந்திருந்தாள்.

வீட்டை விட்டு வெளியேறிய ராமதுரை கால் போன திக்கில் நடந்தான். இரவு ஒன்பது மணி வரையில் எங்கு போய்ப் பொழுதைத் தொலைப்பது என்று ஆராய்ந்து கொண்டிருந்த போது பத்தாம் நம்பர் பஸ் வந்து நின்றது.

சரி, குமார் ஊரிலிருந்து வந்திருப்பான், பார்த்து விட்டு வரலாம் என்ற நினைவுடன் பஸ்ஸில் ஏறினான். மென்னியைப் பிடித்தது கூட்டம்! கைப்பிடியைப் பிடித்துக் கொண்டு நின்றான் ராமதுரை.

'டிக்கெட்'டைக் கொடுக்க வந்த கண்டக்டர், "இதோ இடமிருக்குதே உட்காருங்க சார்!" என்று சுட்டிக் காட்டி விட்டுச் சென்றதும் திரும்பிப்பார்த்தான் ராமதுரை. 'நான்தான் நவநாகரிகம்' என்று ஒரு பெண் உட்கார்ந்திருந்தாள் அங்கே. ஏனோ அவள் அருகில் அமரக் கூசினான் ராமதுரை. அந்தப் பெண் சும்மா இருக்க வில்லை. "பரவாயில்லை உட்காருங்கள் சார். பஸ் பிரயாணத்தில் அவ்வளவு பார்த்தால் முடியுமா?"

அவளுடைய பேச்சும், பேச்சில் பொதிந்திருந்த கருத்தும் ராமதுரையைத் திடுக்கிடச்

அயல் நாடுகளிலுள்ள அருங்கலைச் செல்வங்கள் அனைத்தும் தமிழ் நாட்டில் கொணர்ந்து தர வேண்டும்என்றுவிரும்பினார் மகாகவி பாரதியார். ஆயகலைகள் அறுபத்து நான்கில் இப்பொழுது அறுபத்தைந்தாவது கலையாகச் சிறந்து விளங்குவது விளம்பரக் கலை. இந்தக் கலையின் நுணுக்கங்களை யெல்லாம் நன்கு கற்றுத் தேர்ச்சியடைவதற்காக இங்கிலாந்து செல்கிறார் திரு சி.எம். சங்கரலிங்கம். பர்மா ஷெல் சென்னைக் கிளையில் பொதுநலத் தொடர்பு அதிகாரியாயிருக்கும் இவர் விளம்பரக்கலையில்பலதுறைகளை



முறைகளையெல்லாம் கையாண்டு வெற்றி பெற்றவர். இவரது இங்கிலாந்துப் பிரயாணம் விளம்பரக்கலையின் அபிவிருத்திக்குப் பெரிதும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

செய்தன. "சே! இதற்கா உபயோகப்படுகிறது இந்த நாகரிக மோஸ்தர்?" என்று வியந்து கொண்டிருக்கையில் பஸ் நின்றது. அந்தப் பெண் எழுந்து சர்வசாதாரணமாக எல்லோர் மீதும் இடித்து மோதிக் கொண்டு இறங்கிச் சென்றதும் ராமதுரைக்கு மனத்தை என்னவோ செய்தது!

அடுத்ததாக நுங்கம்பாக்கம் 'ரவுண்டானா'வில் இறங்கினான் ராமதுரை. அந்த ஸ்டாப்பில் தனது ஆபீஸ் நண்பன் நின்று கொண்டிருந்ததும் இரண்டொரு வார்த்தை பேசிக் கொண்டு நின்ற சமயம் பஸ்ஸுக்காக நின்ற ஒரு பெண்மணியைக் கண்டான்.

அழகான பெண்! படித்த பெண் என்பதை அவள் கையிலிருந்த ஆங்கிலப் புத்தகம் அறிவித்தது. ராமதுரை எந்த உடையலங்காரத்தைச் சரோஜாவுக்கு அணிவித்துப் பார்க்க ஆசைப்பட்டானோ அதே பஞ்சாபி உடையும், இரு பகுதியாக ரிப்பன் முடித்த விரி கூந்தலும், உதடுகள், நகங்களில் சாயப் பூச்சும் தானுமாக அங்கு மிங்கும் நடந்து தனது அவசரப் புறப்பாட்டை அறிவித்துக் கொண்டிருந்தாள். கையிலிருந்த கடிகாரத்தைப் பார்ப்பதும், பஸ் வரும் வழியைப் பார்ப்பதுமாகத் தவித்துக் கொண்டிருந்த அவளருகில் 'சர்'ரென்று ஒரு கார் வந்து நின்றது. காரிலிருந்த வாலிபன் முகத்தை வெளியே நீட்டி, "பஸ்ஸுக்குக் காத்திருக்கிறீர்களா?" என்றான் மரியாதையாக.

"ஆமாம். அரை மணி நேரமாக நிற்கிறேன். பஸ் வருகிற வழியைக் காணோம். என்ன பஸ் நிர்வாகம், சட்!" என்று தனது சலிப்பையும், வெறுப்பையும் சிந்தினாள் அந்தப் பெண்மணி.

அவளுடைய தவிப்பையும் அவசரத்தையும் கண்டு, "உங்களுக்கு எங்கே போக வேண்டும்?" என்று கேட்டான் யுவன்.


"திருவல்லிக்கேணியில் 'குடும்பத்தைப் பராமரிப்பது எப்படி?' என்பதைப் பற்றி மாதர் சங்கத்தில் ஆறு மணிக்குப் பிரசங்கம் இருக்கிறது. எனக்கு இப்பொழுது ஐந்து ஐம்பதாகி விட்டது...."

"ஏறுங்கள், நான் கொண்டு போய் விட்டு விட்டுப் போகிறேன்..,.." என்று கூறிப் பின்ஸீட் கதவைத்திறக்க இறங்கினான் அவன்.

ஆனால் அவன் எதிர்பாராத அதிசயமாக முன்புறக் கதவைத் திறந்துகொண்டு டிரைவர் ஸீட்டுக்கு அருகில் ஜம்மென்று அமர்ந்து கொண்டாள் அந்தப் பெண்மணி! அவன் ஒரு விநாடி மலர விழித்து விட்டுப் பிறகு வண்டியிலேறி ஸ்டீரியங்கைப் பிடித்தான். வண்டி காற்றாகப் பறந்தது!

இந்த நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டு நின்ற ராமதுரைக்குக் குப்பென்று வியர்த்து

நிகழ்ச்சிச் சித்திரம்



விட்டது! 'குடும்பப் பராமரிப்பைப் பற்றிப் பேசப்போகிறவளின் தோரணையைப் பார்த்தாலே தெரிகிறதே, குடும்பம் நடத்துகிற லட்சணம்!' என்று சபித்தான் ராமதுரை.

இதுகாறும், அவனுடைய நல்ல மனத்தை மறைத்திருந்த நாகரிக மோகம் என்னும் திரை பட்டென்று அறுந்து விழுந்தது!

அதற்கப்பால், பெண்மையின் பூரணத்துவத்துடன், அன்பும், அமரிக்கையுமே உருவான சரோஜாவின் உருவெளி தென்பட்டது. அவன் அகக்கண் முன்! அவன் மனம் பாகாய் உருகியது. ஓடிச் சென்று சரோஜாவை அணைத்து ஆறுதல் அளிப்பதற்குத் துடித்தன அவன் தோள்கள்!

ஆயினும் நண்பனுடைய வீட்டு வாசல் வரையில் வந்து விட்டோமே என்று குமாரின் வீட்டுக்குள் பிரவேசித்தான் ராமதுரை.

முன் வராந்தாவிலிருந்த 'அல்சேஷியன்' கம்பீரமாக எழுந்து நின்று உறுமியது!

''யாரது?'' என்று எட்டிப் பார்த்த குமார் ''அடடே, வா! உன்னைத்தான் நினைத்துக் கொண்டிருந்தேன்!'' என்றான்.

''ஆமாம். அதுதான் குடும்பம் வைத்த பிறகு ஒரு தடவைகூட அழைப்பு இல்லை. என்ன நெடி. தலைவலி மருந்து தடவி யிருக்கிறாயா? ஜலதோஷமா?'' என்றான் ராமதுரை.

''உம், ஜலதோஷம். தலைவலி - குளிருகிறது...'' என்றான் அவன்.

''அடடா, உன் மனைவி? கலியாணத்தின் போது கூடப் பார்க்கவில்லையே நான்!'' என்றான் ராமதுரை குதூகலமாக.

குமார் அதற்குப் பதில் கூறாமல் பையனை அழைத்து, ''நாராயண கபேயில் இரண்டு ஸெட் டிபனும், காப்பியும் வாங்கி வா'' என்று சொன்னான்.

''ஏன், உன் மனைவி இல்லையா வீட்டில்?'' என்று அக்கறையுடன் நண்பன் கேட்ட பிறகு ''இல்லை!'' என்று பசையற்ற குரலில் பதில் சொன்னான் குமார்.

''என்னப்பா இது, உனக்கு உடம்பு சரியில்லை என்று தெரியுமோ இல்லையோ?''

''திவ்யமாகத் தெரியும்! 'ஜுரம் வருகிற மாதிரி இருக்கிறது, படுக்கை போடு' என்றேன். தனக்கு மாதர் சங்கத்தில் பிரசங்கம் இருப்பதாகக் கூறிப் பையனைப் படுக்கை போடச் சொல்லிவிட்டு, டிரஸ் பண்ணிக் கொண்டு கிளம்பி விட்டாள். இந்த லட்சணத்தில், கார் ரிப்பேர், டாக்ஸி நான் கொண்டு வரவில்லை என்று வேறு கோபம்!''

ராமதுரைக்குத் தூக்கிவாரிப் போட்டது! தன் சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொள்ள நினைத்து, ''பிரசங்கத்துக்கா போயிருக்கிறாள்? என்ன விஷயத்தைப் பற்றிப் பேசப் போகிறாள்?'' என்று கேட்டான்.

– விஜி



குமார் மனத்தில் எழுந்த எரிமலையைப் பக பகவென்று சிரித்து ஆற்றிவிட்டு, "விஷயமா? 'குடும்பத்தைப் பராமரிப்பது எப்படி?' என்று இவள்மாதிரி அதைப் பண்ணத் தெரியாத பாமரப் பெண்களுக்கு உபதேசம் பண்ணப் போயிருக்கிறாள்!" என்றான்.

"அடபாவி! எவ்வளவு ஆசைப்பட்டு அவளை மணந்து கொண்டாய்..."

"அதன் பலனை ஆனந்தமாக அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்!"

ராமதுரையின் மனம் பச்சாத்தாபத்தால் துடித்தது. பரிவு நிரம்பிய குரலில் "குமார், உன்னை நாளைக்கு வந்து பார்க்கிறேன். நன்றாகத் தூங்கு!" என்று கூறிப் புறப்பட்டான்.

"டிபன் சாப்பிட்டுவிட்டுப் போ."

"பசியில்லையப்பா!" என்று கூறிக் காப்பியைப் பகிர்ந்து நண்பனுக்குக் கொடுத்து, தானும் அருந்திவிட்டு அவசரமாக விடை பெற்றுக் கொண்டான்.

கடிகாரம் எட்டு எண்ணியது.

ராமதுரையின் மனம் பஸ்ஸுக்குக் காக்கும் நிலையில் இல்லை. எனவே வாடகை மோட்டாரைப் பிடித்துக் கொண்டுவந்து இறங்கிக் கதவைத் தட்டினான். சரோஜா வந்து கதவைத் திறந்தாள்.

அவன் விரும்பிய விதம் அலங்கரித்துக் கொண்டு நின்ற சரோஜாவை நிமிர்ந்து பார்க்கக்கூடக் கூசின அவன் கண்கள்.

சரோஜா அருகில் வந்து, "ஏதோ அவசரப் புத்தியில் உளறி விட்டேன். அதற்காகக் கோபித்துக் கொண்டு போய் விட்டீர்களே? உங்கள் இஷ்டப்படி இனிமேல் நடந்து கொள்கிறேன். இன்னும் கோபம் தீரவில்லையோ என்மேல்..." என்றாள்.

"கோபமே யில்லை சரோ. நீ போய் முன்னால் இந்த உடையை மாற்றி, வேறு புடைவை உடுத்திக் கொண்டுவா!"

கண்கலங்க, "குற்றத்தை ஒப்புக் கொண்டால்கூட மன்னிக்க மாட்டீர்களா நீங்கள்?" என்று உதடுகள் துடிக்கக் கேட்டாள் சரோ.

அவள் கண்ணைத் துடைத்து, "அடி பைத்தியமே! என் மனம் மாறி விட்டது சரோ. நவ நாகரிகத்தின் போர்வைக்குள்ளிருந்து அழுகும் ஆபாசம் என் மயக்கத்தை அழித்து விட்டது. அறிவு விலாசத்துக்காக, நல்ல பொழுதுபோக்குக்காகத்தான் படிக்க வேண்டும் என்ற படிப்பினைக்கு உவமை நீதான்! இல்லா விட்டால், கணவனுடைய சந்தோஷமே தனது வாழ்வின் பயன் எனக் கருதி, உன் விருப்பு, வெறுப்புகளை விட்டுக் கொடுத்து எனக்கு மதிப்பளிக்கும் உன் உயர்வை இன்றுதான் நான் தெரிந்து கொண்டேன். எப்படி என்று சாப்பிட்டுக் கொண்டே பேசுவோம். போய், முதலில் புடைவை கட்டிக் கொண்டு வாயேன். இந்த கோரம் பார்க்கச் சகிக்கவில்லை எனக்கு!" என்றான்.

ராமதுரையின் மனம் இவ்வளவு துரித காலத்தில் மாறும் என்று கற்பனை செய்து கூடப் பார்த்திராத சரோஜா, அம்பிகையின் எல்லையற்ற கருணையை நினைத்துப் பக்திப் பரவசத்தில் ஆழ்ந்து விட்டாள்.

மணியான சேவை

— ஸோமாஸ் —

" அவர் அரிய நண்பர்; பெரிய வக்கீல்; உயர்ந்த மனிதர்; சிறந்த நீதிபதி...." இத்தகைய புகழ்ச் சொற்களுக்கு உண்மையில் யாரேனும் பாத்திரமாக முடியுமா என்று எல்லோருக்கும் ஐயம் உண்டாவது இயல்பு.

சென்னை, உயர் நீதிமன்றத்துப் பிரதம நீதிபதி ஸ்ரீ பி. வி. ராஜமன்னார், ஸர் எஸ். வரதாச்சாரியார், ஸ்ரீ கே. ராஜாவய்யர், ஸ்ரீ வி. வி. கோபால்ரத்தினம் முதலியவர்களெல்லாம் சேர்ந்து அப்படிக் கூறினால் அதற்கு ஐயம் ஏது. 'அப்பீல்' தான் ஏது?

அவ்விதப் பாராட்டுக்கு உரிய உத்தமர் யார் என்ற ஐயத்தை விரைவில் போக்கிவிட வேண்டும் அல்லவா?

திருப்புகழ் மணி டி. எம். கிருஷ்ணஸ்வாமி ஐயர் அவர்கள் ஐம்பது ஆண்டுகள் சென்னை, உயர் நீதி மன்றத்தில் வழக்கறிஞராகச் சேவை புரிந்து வந்திருப்பதை நீதிபதிகளும் வக்கீல்களும் பாராட்டிப் பேசினர்.

"...கிருஷ்ணசாமி ஐயரை, சிறந்த வக்கீலாக மட்டும் கூறமுடியாது. பொது வாழ்விலும் அவர் தம்மை அர்ப்பணித்துக்கொண்டு உன்னத ஸ்தானம் வகிக்கிறார். குன்றாத ஆர்வம், குறைவற்ற சேவை, புனிதமான மனிதப் பண்பு இவைதான் அவர் உள்ளத்தில் இடம் பெற்று ஒளி வீசுகின்றன" என்று பிரதம நீதிபதி ஸ்ரீ பி. வி. ராஜமன்னார் கூறியது மறுக்க முடியாத உண்மை.



"ஐம்பது ஆண்டுகளாக நீதி மன்றத்தில் வழக்கறிஞரா யிருந்து பெற்ற அநுபவத்தையும் அறிவையும் அவர் தம்மிடம் வரும் இளம் வக்கீல்களுக்கு வழங்க என்றுமே தயங்கியதில்லை" என்று ஸர் எஸ். வரதாச்சாரியார் மிக மிக அழகாக எடுத்துச் சொன்னார்.

ஸ்ரீ திருப்புகழ் மணி அவர்கள் மேற்கூறிய பாராட்டுரைகளுக்கு எல்லா விதத்திலும் தகுந்தவர். "தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்" என்ற அப்பர் பெருமானின் வாக்கை உன்னன்போடு கடைப்பிடித்து வரும் திருப்புகழ் மணி டி. எம். கிருஷ்ணஸ்வாமி ஐயர் அவர்களை ஆஸ்திக உலகம் மட்டும்தான் நன்கு அறியும் என்பதில்லை. சிறந்த வழக்கறிஞரான அவரை அந்தத் துறையில் உள்ளவர்கள் யாவரும் நன்கு அறிவார்கள். சென்னை உயர்நீதி மன்றத்து வழக்கறிஞரான அவர், அநுதினமும் அறுமுகன் பெருமையைப் பாடிப் பரவி வருவதோடு, நீதிமன்றத்திலும் தம் திறமையை நன்கு வெளிப்படுத்தி வந்திருக்கிறார். வெறும் வழக்கறிஞராக மட்டும் பணியாற்றியவர் அல்ல அவர்; திருவிதாங்கூர் நீதிமன்றத்தில் பிரதம நீதிபதியாகவும் இருந்து மிகத் திறமையுடன் பணியாற்றி யிருக்கிறார்.

அவர் நெற்றியில் விபூதியும், கழுத்தில் உருத்திராட்ச மாலையும் தரித்து, கையில் தாளம் எடுத்து, பக்திச் சுவை நனிசொட்டச் சொட்ட, குமரப் பெருமானின் திருப்புகழை இன்னிசையுடன் ஓதி வருவதினால், பக்தி உணர்வும், இறை வழிபாட்டு முறையும் தனி அந்தஸ்தைப் பெற்று விட்டன. இதனால் நாகரிக வாழ்க்கையை மேற்கொண்டவர்களுக்குக் கூட, இறை வழிபாட்டில் உற்சாகமாக ஈடுபடுவதற்குத் துணிவு பிறந்தது.


ஐயரவர்களுக்கு முருகப் பெருமானிடம் எத்துணை ஈடுபாடு உண்டோ அத்துணை ஈடுபாடு தமிழ் மொழியினிடமும் உண்டு. தமிழ் என்றால், முருகன், முருகன் என்றால் தமிழ் எனக் கொள்பவர் திருப்புகழ் மணி. நட்புக்கு உரிய நல்லன்பு பூண்டவர். தமிழர்களின் சொந்தப் பத்திரிகையாகிய "கல்கி"யின் முதல் சந்தாதாரர்! வெற்றி வடிவேலனின் புகழைப் பாடும் பணியே பணியாகக்கொண்ட பரம பக்தராகிய அவரது நல்லாசியுடன்தான் 1941-ம் ஆண்டு "கல்கி" பத்திரிகை பிறந்தது. அல்லும் பகலும் அனவரதமும், "நீலச் சிகண்டியில் ஏறும் பிரான் எந்த நேரத்திலும் கோலக் குறத்தியுடன் வருவான்" என்ற நம்பிக்கையை அழுத்தமாக இதயத்திலே கொண்டவர் திருப்புகழ் மணி. ஆகவே, வளரும் பத்திரிகைக்கு வளம் தந்தது அவருடைய இதய பூர்வமான ஆசி.

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 31-ந் தேதியன்று திருத்தணிகை மலையில் பல்லாயிரக் கணக்கான மக்கள் திரளாகக் கூடி உள்ளமும் உடலும் குளிர, தெய்வ பக்தியில் திளைக்கும் வண்ணம் செய்து, பக்திச் செல்வத்தைப் பரப்பி வருகிறார். அன்றைய தினம் திருத்தணிகை பக்தி உணர்ச்சியின் பிரபாவத்தினால் தனி ஒளியுடன் சிறப்புற்று விளங்குகிறது.

முதுமையின் தளர்வை முழுதும் மறந்து, முருகன் வழிபாட்டில் முழுமூச்சுடன் ஈடுபட்டுத் தொண்டாற்றி வரும் ஸ்ரீ திருப்புகழ் மணி அவர்கள், முருகன் அருளால் தமிழ் மொழி உள்ள வரையிலும், திருப்புகழும் திருத்தணியும் உள்ள வரையிலும் வாழ்ந்திருக்க வேண்டும் என வாழ்த்துகிறோம்.





தேயிலைத்



ஒரு ரசமான சிறு கதை. சில நூற்றாண்டுகளுக்கு முன்னால் நம்முடைய பாரத நாட்டில் ஒரு யோகி இருந்தார். அவர் இடைவிடாமல் தவம் செய்து கொண்டிருந்தார். தவத்தின் மத்தியிலே பல இடையூறுகள் ஏற்பட்டன. எல்லாவற்றையும் தம்முடைய மன உறுதியினால் வென்றார். ஆனால் 'அவள் பெண்மையைக் கண்டு' மயங்கி விட்டார். உடனே அவருடைய தலை கிறங்க ஆரம்பித்து விட்டது. இந்தச் சமயத்தில் அவர் தம்முடைய இக்கட்டான நிலையை உணர்ந்தார். மீண்டும் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு கடுமையான தவத்தில் ஈடுபட்டார். அப்போதும் அந்த மாதரசி வந்து கண்ணின் மணிகளை மூட ஆரம்பித்தாள். அவருக்கு வந்த கோபத்தில் இன்னது செய்வதென்று தெரியவில்லை. கருவிழிகளின் இமைகளையே கத்திரித்துப் போட்டு விட்டுத் தவம் புரிந்தார். மறுபடியும் அந்த மோகனாங்கியின் தொல்லை தான் அவருக்கு ஏற்பட்டது. அவளுடைய மோகக் கிறுக்கிலிருந்து மீள முடியாமல் தவித்தார். எல்லாவற்றையும் துறந்து தவக்கோலம் பூண்ட அந்தத் துறவியையே சொக்க வைத்த அந்தப் பெண்மணி வேறு யாரும் இல்லை. உலகில் உள்ள எல்லாரையும் மயக்கித் தனக்கு அடிமையாக்கிக் கொள்ளும் சாட்சாத் நித்திரா தேவிதான்! நித்திரா தேவியின் தொல்லையிலிருந்து விடுபடுவதற்குத் தவயோகி மேற்கொண்ட எல்லா முறைகளும் பயனற்றுப் போய்விட்டன. அவ்வணங்கின் மாயப் பிடியிலிருந்து மீள வழி தெரியாமல் தவியாய்த் தவித்தார். இந்தச் சமயத்திலே தான் அவருக்கு ஒரு பச்சிலை உதவி செய்தது. காட்டில் கந்த மூலங்களைச் சாப்பிட்டு வந்த தவயோகி ஒரு நாள் ஏதோ ஒரு செடியின் இலைகளைப் பறித்துச் சாப்பிட்டார். என்ன ஆச்சரியம்! தம்மைப் பிடித்து ஆட்டி வந்த மாய யோகினி ஒதுங்கி மறைந்து விட்டாள். தூக்கம் கலைந்து விட்டது! நித்திரா தேவி யோகியை விட்டே போய்விட்டாள். அந்தப் பச்சிலையின் தயவால் தம்முடைய தவத்துக்கு இடையூறு செய்து வந்த நித்திரா தேவியை விரட்டி விட்டு வெற்றி கொண்டார்.

அந்த மகான் கண்டு பிடித்த பச்சிலைதான் தேயிலை. பிற்காலத்தில் மக்கள் எல்லாரும் இந்த இலையைச் சாப்பிட்டு வந்தார்கள். வெறும் இலையைத் தின்று இன்ப மயக்கத்





தோட்டத்திலே



தைப் பெற்று வந்த முறை மாறித் தேயிலையிலிருந்து தேநீர் தயாரித்துச் சாப்பிட ஆரம்பித்தார்கள். தேயிலையைக் கண்டு பிடித்தது பாரத நாடாக இருந்தாலும் அதற்கு அடிமையாகாமல் இருந்து வந்தது. வெள்ளைக்காரர்கள் நம்மை ஆண்ட காலத்தில் இந்தத் தேநீர் குடிக்கும் வழக்கம் நமக்குச் சற்று அதிகமாயிற்று. நமக்கு வேண்டிய நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் தேநீர் விருந்து வைத்தே உபசரிக்கத் தலைப்பட்டோம்.

இந்தியாவிலும் ஈழத்திலும்தான் அதிகமாகத் தேயிலை பயிராகிறது. ஆனாலும் இங்கிலாந்து, சைனா, ஜப்பான், ருஷ்யா ஆகிய இந்த நான்கு தேசங்களும்தான் தேயிலையை அதிகம் உபயோகப்படுத்துகின்றன. இந்த நாலு நாடுகளின் தேசிய பானமாகத் தேநீர் இருந்து வருகிறது. உலகின் பல பாகங்களிலும் கோடிக் கணக்கான மக்கள் தேநீர் அருந்துகிறார்கள். தேநீர் அருந்தாவிட்டால் வாழ்வின் சுவையே போய் விட்டதாகக் கருதுகிறார்கள். ஜப்பான் தேசத்தில் தேநீர் அருந்துவது ஒரு சமுதாய வழக்கமாக இருந்து வருகிறது. இதற்காகப் பெரிய கட்டுப்பாடும் சில சம்பிரதாயங்களுமே அவர்கள் ஏற்படுத்தி யிருக்கிறார்களாம்.

ஜப்பானியப் பெண்கள் தம் வீட்டுக்கு வரும் விருந்தினர்களை வரவேற்று வணங்கியதும் தேநீர் தயாரிப்பார்களாம். அவ்வாறு வணங்கி உள்ளேசென்று தேநீர் தயாரிப்பது வரை ஒவ்வொரு காரியமும் அபூர்வ கலை நயத்தோடு விளங்குமாம். பீங்கான் பாத்திரங்களைச் சுத்தம் செய்வது, அடுப்பு மூட்டுவது, பாத்திரத்தின் மூடியை விலக்குவது, கொதி நீரில் தேயிலைத் தூளை விடுவது, சற்று நேரம் மூடி வைப்பது, பிறகு அந்தத் தேநீரைக் கோப்பைகளில் சாய்ப்பது, அதிலிருந்து தனித்தனி கிண்ணங்களில் ஊற்றி விருந்தினர்களுக்கு வழங்குவது ஆகிய இந்த ஒவ்வொரு பணியிலும் அழகு மண்டிக் கிடக்குமாம். தேநீர் அருந்தும் பீங்கான்களும் மதிப்பிட முடியாத சிற்பச் சிறப்புடன் விளங்குமாம். இவ்வாறு எவ்வளவோ அருமையாகத் தேநீர் வழங்கும் கலையைப் பாதுகாத்து வருகிறார்களாம்.


ஜப்பான் தேசத்தில் தேநீர் வழங்குவது எப்படியாவது இருந்துவிட்டுப் போகட்டும். நமது நாட்டிலேயே தேநீர் குடிப்பது என்பது சர்வ சாதாரணமாகி விட்டது. நித்திரா தேவியை வெல்லுவதற்கு மட்டுமல்ல, மனத்துக்கு உற்சாகம் ஏற்படுவதற்காகவே தேநீர் அருந்த வேண்டிய நிலை ஏற்பட் டிருக்கிறது.

''இந்த அதிசயமான மூலிகை எங்கு கிடைக்கிறது? எந்த மரத்தில் காய்க்கும்? மரத்தில் டின் டின்னாகவே காய்த்துத் தொங்குமா? இல்லை, பொட்டலமாகவே தொங்குமா?'' என்றெல்லாம் கேட்டுக் கேலி செய்துகொண்டே வந்தார் எங்களுடன் வந்த நண்பர்.

''அப்படி யில்லை. மரத்திலும் காய்க்காது. டின்னாகவும் தொங்காது. அது தோட்டத்தில் செடியில் விளைகிறது'' என்றார் சிறிதும் முகம் கோணாமல், நுவரேலியா பெட்ரோ தேயிலைத் தோட்டத்துத் தொழிலாளர் நல அதிகாரி திரு தனுஷ்கோடி அவர்கள்.

''ஐயா, தனுஷ்கோடி அவர்களே! நாங்கள் தேயிலைத் தோட்டத்தைப் பார்த்தாக வேண்டுமே! அதற்கு ஒழுங்கு செய்ய முடியுமா?'' என்றேன்.

''முதலில் இந்தத் தேநீரைச் சாப்பிடுங்கள். பிறகு தேயிலைத் தோட்டத்துக்கும் போகலாம். தேயிலைத் தொழிற்சாலைக்குள்ளும் போகலாம்'' என்று கூறி விட்டு ஒருகோப்பை சூடான



பகீரதன்

தேநீர் வழங்கினர் திரு தனுஷ்கோடி. அடாடா! தேநீர் என்றால் இதுவன்றோ தேநீர்! தேநீரைச் சாப்பிட்டதும் இதுவரை எங்களைச் சிரமப்படுத்திக் கொண்டு வந்த நுவரேலியா குளிர்கூட எங்களை விட்டுச் சென்று விட்டது. திடீர் என்று உற்சாகம் பிறந்துவிட்டது. புது மனிதர்களாகவே மாறி விட்டோம். தேயிலைத் தோட்டத்துத் தொழிலாளர் நல அதிகாரி திரு தனுஷ்கோடியும் உற்சாகமாகத் தேயிலைத் தோட்டத்தைப் பற்றிக் கூறிக்கொண்டே எங்களைத் தேயிலைத் தோட்டத்துக்கு அழைத்துச் சென்றார்.

ஈழ நாட்டின் செல்வமே இந்தத் தேயிலைத் தோட்டம்தான். தமிழ் நாட்டின் இரண்டு ஜில்லா விஸ்தீரணம்கூட இல்லாத ஈழ நாட்டில் விளையும் தேயிலையின் அளவு உலகத்தின் இரண்டாவது ஸ்தானத்தில் இருக்கிறது என்றால் ஈழநாட்டின் தேயிலை வளத்தை ஒருவாறு கற்பனை செய்து கொள்ளலாம்.

தேயிலைச் செடி செழித்து வளருவதற்கு உயரமான மலைப் பிரதேசமே பொருத்தமானது. மூவாயிரம் அடியிலிருந்து ஆறாயிரம் அடி உயரம் வரை உயர்ந்திருக்கும் மலைப் பிரதேசங்களில் தேயிலைச் செடி நன்றாக வளரும். தேயிலைச் செடிக்கு நல்ல மழை வேண்டும், நிலம் எப்போதும் ஈரமாக இருக்க வேண்டும். ஆனால் நீர் தங்கி நிற்க முடியாமல் நிலம் சரிவாக இருக்க வேண்டும்.

''ஈழ நாட்டில் அப்படிப்பட்ட இடங்கள் நிறைய இருக்கின்றனவோ?''

''ஆமாம். நுவரேலியா, கண்டி, ஹட்டன், பதுளை, ரத்தினபுரி, ரத்வாளை முதலிய இடங்களிலெல்லாம் தேயிலைத் தோட்டங்கள் அதிகமாக இருக்கின்றன'' என்றார் தனுஷ்கோடி.

ஈழ நாட்டில் உள்ள ஒவ்வொரு தேயிலைத் தோட்டமும் பல நூற்றுக்கணக்கான ஏக்கர் விஸ்தீரணம் கொண்டது. சுமார் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட தேயிலைத் தோட்டங்கள் இங்கு இருக்கின்றன. இந்தத் தோட்டங்களில் பல வெள்ளைக்காரர்களுக்குச் சொந்தமானவை. இப்பொழுது சில தோட்டங்கள் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் சொந்தமாக இருக்கின்றன. வெள்ளைக்காரர்களின் தேயிலைத் தோட்டங்கள் எல்லாம் கூட்டுறவு முறையில் நடைபெற்று வருகின்றன. தமிழர்கள் சிங்களவர்கள் தோட்டங்களோ சிறு சிறு பகுதிகளாகச் சிதறிக் கிடக்கின்றன. தமிழர்களுடைய தோட்டங்களின் தலைவர்களைப் பற்றித் திரு தனுஷ்கோடி சொன்னவை ரசமாகவும் அதிசயமாகவும் இருந்தன. ஆகவே நம்ப முடியாததாகவும் இருந்தன. ஆனாலும் அவர் கூறியவை அத்தனையும் உண்மை என்று அறிந்தேன்.

கையில் காலணா இல்லாமல் கங்காணிகளின் உதவியினால் தேயிலைத் தோட்டத்துக்குக் கூலியாளாக வந்தவர்களில் சிலர் தங்களுடைய இடைவிடாத முயற்சியின் காரணமாகத் தேயிலைத் தோட்டத்துக்கு அதிபராகி யிருக்கிறார்கள். இவர்களுடைய வாழ்க்கை நாம் படித்திருக்கும் கதைகளில் வரும் கதாநாயகர்களுடைய வாழ்க்கையைவிட அதிசயமானது. இப்படி ஒரு சில தமிழர்கள் தோட்ட அதிபர்களாகவும், தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களிடம் வேலை வாங்கும் கங்காணிகளாகவும் உயர்ந்திருக்கிறார்கள்.

தெய்வத் தமிழ் நாட்டில் இருந்து இலங்கைத் தேயிலைத் தோட்டத்துக்குச் சென்ற பல லட்சம் தமிழ் மக்களில் இப்படி விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சில தமிழர்களைத் தவிர மற்றவர்கள் எல்லாம் வெறும் கூலி ஆட்களாகத்தான் இருக்கிறார்கள். இந்த லட்சக்கணக்கான தமிழ் மக்களின் உழைப்புத்தான் இலங்கையின் இன்றையப் பொருளாதார உயர்வுக்கே மூலகாரணமானது. தமிழ் மக்களின் உழைப்பு மட்டும் இல்லாமல் போயிருந்தால் இலங்கை வெறும் காட்டு மிருகங்கள் உலவும் பயங்கரக் காடாகத்தான் இருந்திருக்கும். காட்டு மிருகம் உலாவும் வனத்தைச் செல்வம் கொழிக்கும் பொன்னாடாக மாற்றிய இந்தத் தமிழர்களை ''மலைநாட்டுத் தமிழர்கள்'' என்று அன்போடு அழைத்து வருகின்றனர். புத்தபிரானின் அன்பு வழியைக் கடைப்பிடிக்கும் கருணை உள்ளம் கொண்ட சிங்கள அரசாங்கம் இந்த மலைத் தமிழருக்குப் பெருந்தன்மையோடு வழங்கிய சட்டம்தான் உலகப் பிரசித்தமான பிரஜா உரிமைச் சட்டம்! இவர்களுக்கு அளித்திருக்கும் இன்னொரு கௌரவம் தமிழை அரசியல் அந்தஸ்திலிருந்து இறக்கியதாகும்!

''என்ன ஐயா! இப்படியும் நடக்குமா?'' என்று நேயர்கள் கேட்டது காதில் விழுகிறது. இது அத்தனையும் உண்மை. ஒரு புறத்தில் மேல் நாட்டு ஏகாதிபத்தியங்கள் அணுகுண்டைப் போட்டு மக்களைக் கொல்லுகிறது. அதற்கு வசதி இல்லாத ஈழ நாட்டுச் சிங்கள ஏகாதிபத்தியம் தமிழ் மக்களுக்கு உள்ள அரசியல் உரிமையையும்,மொழி உரிமையையும் பிடுங்கிக் கொண்டு கொடுமைப் படுத்துகிறது. காலம் இப்படியே செல்லுமா? மாறித்தானே தீர வேண்டும்.

இவ்வாறு பல விஷயங்களைப் பற்றி விவாதித்துக் கொண்டிருக்கும்போதே, ''இதோ பாருங்கள்! இதுதான் தேயிலைத்தோட்டம்'' என்றார் தொழிலாளர் நல அதிகாரி.

இயற்கை வளம் மிக்க மலைகளில் வரிசை வரிசையாகக் குத்துக் குத்தாக அழகாகக் கத்திரித்து விடப்பட்ட செடிகள் கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் பச்சைப் பசேல் என்று காட்சி அளித்தன.

''இவ்வளவும் தேயிலைச் செடிகள்தானா?''

''ஆமாம். இதுதான்தேயிலைத்தோட்டம்.''

''இதை எப்படிப் பயிரிடுகிறார்கள்?''

''காடும் மேடுமாக இருக்கும் இதுபோன்ற மலைப் பிரதேசங்களில் காட்டை வெட்டி நிலத்தைப் பண்படுத்துவார்கள். பிறகு தண்ணீர் தங்காமல் ஓடுவதற்கு வசதியாகச் சிறு சிறு வாய்க்கால்கள் அமைப்பார்கள். மூன்று அடிக்கு ஒன்றாகக் குழிகள் வெட்டி அதில் பசும்தாள் உரம் போடுவார்கள். உரம் மக்கி மண்ணோடு மண் ஆனதும் தேயிலைக்கன்றை நடுவார்கள். சில சமயங்களில் தேயிலை விதைகளையும் ஊன்றுவதுண்டு. தேயிலைக்கன்றுகள் மூன்று அல்லது நான்கு அடி வளர்ந்ததும் அதன் நுனிகளைக் கத்திரித்து விடுவார்கள்.''

''ஏன் கத்திரிக்க வேண்டும்?''

''அப்பொழுதுதான் செடிகள் ஓங்கி வளராமல் படர்ந்து வளரும். செடிகளில் ஏராளமான துளிர்கள் வரும்.''

''எப்பொழுது தேயிலே பறிப்பார்கள்?''

''ஒரு தேயிலைச் செடி, தேயிலைக் கொழுந்து எடுப்பதற்கு வேண்டிய பக்குவம் அடையச் சுமார் மூன்று வருடங்கள் பிடிக்கும். இதற்குள் இந்தச் செடிக்கு நூறு முதல் நூற்று ஐம்பது ரூபாய் வரை செலவாகிவிடும்.''

''ஒரு செடிக்கா நூற்று ஐம்பது ரூபாய்? அப்படியானால் இந்தத் தேயிலைத் தோட்டத்திலேயே ஆயிரக்கணக்கான செடிகள் இருக்கின்றனவே! இதற்கே ஏராளமான ரூபாய்கள் செலவாகி யிருக்கும் போலிருக்கிறதே!''

''ஆரம்ப காலத்தில்தானே இந்தச் செலவு. மூன்று ஆண்டுகளுக்குப் பின்தான் செடியிலிருந்து கொழுந்து எடுக்க ஆரம்பித்திருக்கிறார்களே! அந்தச் செடியே பணம் கொடுக்க ஆரம்பித்து விடுகிறதே!''

''ஒரு தேயிலைச் செடியில் எவ்வளவு காலத்துக்குக் கொழுந்து பறிக்கலாம்?''

''நாற்பது ஐம்பது ஆண்டுகள் வரை கொழுந்து பறிக்கலாம். ஆனால் இடையில் செடியைக் காப்பாற்றி வர வேண்டும்.''

''அதற்கு என்ன செய்ய வேண்டும்?''

''செடிக்கு உரம் போட வேண்டும். களை எடுக்க வேண்டும். இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கம்மாத்துச் செய்ய வேண்டும்.''

''கம்மாத்துச் செய்வதா? என்ன ஐயா வேடிக்கை பண்ணுகிறீர்.''

''கம்மாத்து என்றால் செடியின் முனைகளை அப்படியே நறுக்குவது. அதாவது 'கிராப்' செய்து விடுவது.''

''ஏன் அப்படிச் செய்ய வேண்டும்?''

''அப்பொழுதுதான் தேயிலைச் செடியில் கொழுந்துகள் நன்றாக வளரும்.''

''அது என்ன 'கொழுந்து' 'கொழுந்து' என்று விடாமல் சொல்லுகிறீர்கள்?''

''தேயிலையே கொழுந்துதானே! செடியின் ஒவ்வொரு கிளையிலும் துளிர்க்கும் ஒரு மொட்டையும் இரண்டு கொழுந்தையும் சேர்த்துக் கொய்ய வேண்டும். இவ்வாறு கொய்யும் தேயிலைக் கொழுந்துகளில் இருந்துதான் தேயிலை தயார் செய்வது!''

''கொழுந்து இல்லாமல் இலையையும் பறித்து விட்டால், என்ன செய்வீர்கள்?''

''முற்றிய பச்சை இலைகளில் தேயிலையின் காரம் மணம் ஒன்று மிருக்காது.''

''ஒரு மொட்டையும் இரண்டு துளிரையும் மட்டும் கொய்கிறார்கள் என்பதை எப்படிக் கண்டு பிடிப்பது?''

''தேயிலைக் கொழுந்து கொய்யும் போது அவர்கள் மத்தியில் கங்காணி நின்று கவனித்துக் கொண்டே இருப்பான். பிறகு கொய்த தேயிலைக் கொழுந்துகளை நிறுத்து வாங்கும் போது கவனிப்பார்கள். இதையும் மீறி விட்டால் தேயிலைக் கொழுந்தைப் பாடம் செய்யும் இடத்தில் பார்த்து எடுப்பார்கள். அதையும் தாண்டி விட்டால் தேயிலைத் தூளிலேயே பார்த்துப் பொறுக்கி விடுகிறார்கள்.''

''தேயிலைக் கொழுந்தை கொய்த பிறகு இவ்வளவு வேலை இருக்கிறதா?''

''ஆமாம்; அது தொழிற்சாலையில் நடப்பது. பிறகு அதையும் பார்க்கலாம்.''

"சரி. தொழிற்சாலைக்குள் செல்வதற்குள் இன்னும் சில விஷயங்களையும் சொல்லி விடுங்கள். தோட்டத்தில் தொழிலாளர்கள் எத்தனை மணி நேரம் வேலை செய்கிறார்கள்? அவர்கள் வேலைமுறை எப்படி?"

"பெரிய தேயிலைத் தோட்டங்களில் காலை ஐந்தரை மணிக்கே சங்கு ஊதும். சில தோட்டங்களில் 'தப்பு' கொட்டித் தொழிலாளர்களைத் துயில் எழுப்புவார்கள். தொழிலாளர்கள் எழுந்து அரை மணி நேரத்துக்குள் காலைக்கடன்களை முடித்துக் கொண்டு ஆறு மணிக்கெல்லாம் தொழிற்சாலைக்கு அருகில் உள்ள மைதானத்துக்கு வந்து குழுமி விடுவார்கள். இந்த இடத்துக்குப் 'பிரட்டுக்களம்' என்று பெயர். பிரட்டுக்களத்துக்கு வந்திருக்கும் தொழிலாளர்களைப் பெரிய கணக்குப் பிள்ளை பதிந்து கொண்டு, 'இன்னாருக்கு இன்ன வேலை' 'இன்னாருக்கு இன்ன வேலை' என்று இனம் பிரித்துக் கொடுப்பார். பெண்களுக்குப் பெரும்பாலும் கொழுந்து கொய்யும் வேலையே கிடைக்கும். ஆண்களுக்கு 'கான் வெட்டல்' 'வாது வெட்டல்' 'கவாத்து வெட்டல்' முதலிய வேலை தரப்படும். பதினன்கு வயதுள்ள சிறுவர் சிறுமியர்களுக்குக் களை பறிக்கும் வேலை தரப்படும்.

"தேயிலைக் கொழுந்துகளைக் கொய்த பின்னர் தொழிற்சாலைக்குக் கொண்டு செல்வார்கள். அங்கு கொழுந்துகளை நிறுத்துக் கணக்குப் புத்தகத்தில் பதிந்து கொள்வார்கள். தினம் ஒவ்வொருவரும் இருபத்தெட்டு ராத்தல் கொழுந்து பறிக்கவேண்டும். அதற்கு மேல் ஒரு ராத்தலுக்கு ஆறு சதம் அதாவது ஒரு அணு வீதம் அதிகம் கிடைக்கும். அவர்கள் சம்பளத்தைவிட அதிகமாக அவர்கள் கணக்கில் வரவு வைப்பார்கள். ஈழநாட்டில் நாள் ஒன்றுக்கு எண்பது ராத்தல் கொய்யக் கூடிய தமிழ்ப்பெண்கள்கூட இருக்கிறார்கள்."

"அது என்ன தமிழ்ப் பெண்கள் என்று அழுத்திச் சொல்கிறீர்கள்?"

"ஆமாம் தமிழ்ப் பெண்கள்தான் நன்றாக வேலை செய்வார்கள். சிங்களப் பெண்கள் எல்லாம் சொகுசுக்காரிகள். இருபத்தெட்டு ராத்தல்கூடக் கொய்ய மாட்டார்கள்."

"மழை பெய்தால் என்ன செய்வது?"

"மழை பெய்தாலும், குளிர் அடித்தாலும் கொழுந்து கொய்தே ஆகவேண்டும். அந்தச் சமயத்தில் கொழுந்துகளைக் கொய்யாவிட்டால் முற்றிவிடும். பிறகு பயன்படாது."

"தோட்டத்தில் தேயிலைக் கொழுந்துகளைக் கொய்வதைப் பார்க்கலாமா?"

"நாம் அங்கேதானே போகிறோம்" என்று சொல்லிப் பக்கத்திலிருந்த தேயிலைத் தோட்டத்துக்கு அழைத்துச் சென்றார்.

அடாடா! தேயிலைத் தோட்டத்துக்குள் நுழைந்ததும் திடீரென்று விசித்திரமான நாட்டிய உலகுக்கு வந்து விட்டது போன்ற பிரமை ஏற்பட்டது. வரிசை வரிசையாக இளம் பெண்கள் நின்று கொண்டிருக்கிறார்கள். அந்த அழகிகளின் தலையிலிருந்து நூல் கயிற்றின் உதவியால் முதுகில் ஒரு கூடை தொங்குகிறது. தேயிலைச் செடிகளுக்கு முன்னால் நின்றவண்ணம் தங்கள் முத்துப் பற்கள் தெரிய முறுவலித்துக் கொண்டு கொழுந்து கொய்கிறார்கள். பெண்மணிகளின் தளிர்க்கரங்கள் வெகு வேகமாகத் தேயிலைத் தளிர்களைக் கொய்து தங்கள் முதுகில் இருக்கும் கூடைக்குள் போடுகின்றன. இது ஏதோ அபிநயம் பிடிப்பது போலிருக்கிறதே ஒழிய, தேயிலை கொய்வது போலவே இல்லை. தேயிலைச் செடிகள்மீது அந்தப் பெண்களின் விரல்கள் மேவும் அழகைச் சொல்வதா? கண்மூடிக் கண் திறக்கும் நேரத்துக்குள் கொழுந்தைக் கொய்து கூடையில் போடும் பாவத்தைச் சொல்வதா? எதைச் சொல்வது என்றே தெரியவில்லை. தேயிலைத் தோட்டத்தில் கொழுந்து கொய்யும் காட்சியே, காட்சி! தங்க விக்கிரகம் போன்ற அந்தப் பெண்கள் தோட்டத்தில் நின்று தேயிலைக் கொழுந்தையா கொய்கிறார்கள்! இல்லை. தேயிலைச் செடி தன் கொழுந்திலே வைத்திருக்கும் தங்கத்தை யல்லவா கொய்கிறார்கள்!

தேயிலைக் கொழுந்தெடுக்கும் இந்த அற்புதமான காட்சியைப் பார்த்துவிட்டுத் தேயிலைத் தொழிற்சாலைக்குள் செல்வோம்.

தேயிலைத் தொழிற்சாலைக்குள் நடக்கும் விந்தைகளையெல்லாம் இன்னும் சில மணி நேரத்தில் பார்க்கலாம். (தொடரும்)



அகில இந்திய கைத்தறி வாரம்

1957 மே 5 முதல் 11 வரை

இவ்வாரமும்,
எவ்வாரமும்,
எக்
காரியத்திற்கும்

பாரதம் பேணி வளர்க்கும் குடிசைத் தொழில்களிலேயே தலைசிறந்த, இருபது லட்சத்திற்கு மேலான கைத்தறிகள், இன்று பாரதத்தின் பொருளாதாரத்தில் மாபெரும் பாகம் வகிக்கின்றன. கைத்தறியையே நம்பி வாழும் 75 லட்சம் நெசவாளர்கள், தங்கள் திறமையாலும் கைநுட்பத்தாலும் கண்கவரும் துணிகளைப் படைத்து பாரதத்தின் பரம்பரைப் பெருமையை பாதுகாத்து வருகிறார்கள்.

கைத்தறித் துணிகளையே

வாங்குவதாய் சபதம் செய்யுங்கள்

நீடிப்பு • அலங்கரிப்பு • வகைச் சிறப்பு

1. தங்கம், வெள்ளி ஜரிகை இழைகளுடன் கண்கவர் நிறங்களிலும் டிசைன்களிலும் பட்டிலும் பருத்தியிலும் செய்யப்பட்ட மாதர் அணியும் ஆடைகள், புடவைகள்; மஷ்ருக்கள், ஹிம்ருக்கள், கிம்காப்கள், புரோகேடுகள்.

2. சூட்டிங்குகள், ஷர்ட்டிங்குகள், பல நிறங்களிலும் 'செக்' மோஸ்தர் துணிகள், லுங்கிகள், கைலிகள், சாரங்குகள், கம்பாய்கள், சென்னை கைக்குட்டைகள்.

3. அலங்காரணத் துணிகள், சித்திர வேலைப்பாடுள்ள திரைத் துணிகள் போன்றவை; பொருத்தமான டிசைன்களில் மேஜை விரிப்புகள், சிறு டவல்கள்; கவர்ச்சிகரமான செக், கலர் மோஸ்தர்களில் பெட் ஷீட்டுகள், படுக்கை விரிப்புகள்.

4. பரம்பரை மற்றும் நவீன தேவைகளுக்கு ஏற்ற நானாவிதமான ஜமக்காளங்கள், தரிகள்.

கைத்தறித் துணிகள்

நேர்த்தியான
நெசவு
கலர்
டிசைன்

ALL INDIA HANDLOOM BOARD

DA 57/13


"உங்கள் பற்களை பாதுகாருங்கள்!"
விஸ்டம் பல் வைத்தியர் எப்படி என்று கூறுகிறார்
முடியுமானால் உங்கள் 'விஸ்டம்' டூத்ப்ரஷை கூடவே எடுத்துச் சென்று சாப்பிட்டானதும் உபயோகியுங்கள். இது எப்பொழுதுமே முடியாதென்றாலும் இந்த குறிப்புகள் உங்கள் பற்களை பாதுகாக்க உதவும்.
உங்கள் உணவுக்குப் பிறகு கொட்டைகள் அல்லது ஒரு ஆப்பிள் சாப்பிடுங்கள். இவை சுத்தி செய்யும் தன்மை வாய்ந்ததால் ஈறுகளுக்கும் நல்லது.
நீங்கள் துப்புரவாக துலக்க முடியாமல் போனால் சுத்தமான ஜலத்தால் வாயைக் கொப்பளியுங்கள். இது பற்கள் மீது தேங்கியுள்ள சர்க்கரையையும் உணவுத் தூள்களை நீக்க உதவும்.
பற்கள், ஈறுகளுக்கு நாசி ஏற்படுத்தும் ஊசி, ஆணி இவைகளால் பற்கள், ஈறுகளை குத்த வேண்டாம். சுத்தம் செய்ய வேறெதுவும் கிடைக்காவிட்டால், இயற்கைக் கருவிகளான நாவையும் உதடுகளை உபயோகியுங்கள்.
உங்கள் பற்களை ஆரோக்கியமாய் வையுங்கள்: இரவிலும் காலையிலும் விஸ்டம் ப்ரஷால் துலக்குங்கள். துலக்க சுலபமாயிருக்க அதன் சிறிய தலை மற்றும் வளைந்த கைப்பிடியமைப்பால் வாயில் மூலை முடுக்குகளிலும் புகுத்தலாம்; அதன் விரும்பான நைலான் குச்சுகள் பல இடுக்குகளில் நுழையும். பொருத்தமான வடிவம் கொண்ட விஸ்டம் டூத் ப்ரஷை உபயோகியுங்கள்!
காலாகாலத்தில் உங்கள் பல் வைத்தியரை காணுங்கள்
Wisdom REGD.
நீடித்து உழைக்கும் டூத் பிரஷ்

மாதர்குல திலகங்கள்



நாடு சுதந்திரம் பெற்ற சமயத்தில் உள்நாட்டில் வகுப்புக் கலவரங்களும், சமஸ்தானாதிபதிகளின்கிளர்ச்சிகளும் எவ்வளவு தலைதூக்கி நின்றதென்பதை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். பாகிஸ்தானிலிருந்து ஆயிரம் ஆயிரமாக அகதிகள் பாரதத்தின் எல்லையைக் கடந்து ஓடி வந்து கொண்டிருந்தார்கள். வட இந்தியப் பெரிய நகரங்கள் எல்லாம் வகுப்புக் கலகங்கள் தோன்றியிருந்தன. போதாக் குறைக்குச் சமஸ்தானாதிபதிகள் இந்திய அரசியலுடன் இணைய மறுத்துக் கிளர்ச்சி புரிந்து வந்தார்கள்.

▸ இந்தியாவிலேயே மிகப் பெரிதாக விளங்கிய ஹைதராபாத் சமஸ்தானத்தில் அப்போது 'ரஸாக்கர்கள்' என்னும் வகுப்புவாதிகள் அதிகாரத்தைத் தங்கள் கையினுள் போட்டுக் கொண்டு, பாரத சர்க்காருக்கு எதிராகவும், ஹிந்து சமூகத்தினருக்கு எதிராகவும் போராட்டம் நடத்தினார்கள். போராட்டம் என்பதற்குப் பதிலாக அதைப் பேயாட்டம் என்று கூறும்படி ரஸாக்கர்கள் புரிந்த அட்டூழியங்களை இன்று நினைத்தாலும், நினைப்பவர் குலைநடுங்கச் செய்யும். ரஸாக்கர்களின் வேட்டைக்கு இலக்கான கிராமங்களில் ஒன்று மச்சிரெட்டிபள்ளி. அந்தக் கிராமத்தில் ரஸாக்கர்கள் பலருடைய வீடுகளைச் சூறையாடியதோடு ஸ்திரீகளை அவமானப் படுத்தவும் துணிந்தனர். இந்தச் செய்தி கேட்டு அக்கம் பக்கத்து கிராமமக்கள் ஓடி ஒளிந்து கொண்ட போது மிகத் தைரியமாகக் கட்டை வண்டியில் கரடு முரடான பாதைகளின் வழியாகக் கதர் ஆடை தரித்த ஒரு பெண்மணி அந்தக் கிராமத்துக்கு வந்து, ''எங்கே அந்தப் படுபாவி ரஸாக்கர்கள்? எங்கே ஊரிலுள்ள ஆண் மக்கள்? எங்கே கிராம அதிகாரிகள்?'' என்று அதட்டிக் கேட்டாள். அந்த வீரப் பெண்மணிதான் இப்போது மேற்கு வங்காளத்து கவர்னர் பதவி வகித்து வரும் திருமதி பத்மஜா நாயுடு. ஹைதராபாத் ரஸாக்கர்கள் கலவரத்தின்போது பத்மஜா நாயுடுவின் தைரியத்தைப் பாராட்டி இந்திய மாதர் சமூகம் அவரைக் கொண்டாடியது.

பத்மஜா நாயுடுவின் தாயார் சரோஜினி தேவி அப்போது ஐக்கிய மாகாணத்தில் கவர்னராயிருந்து வந்தார். ரஸாக்கர்களின் கொடுமைகளை எதிர்த்துப் போராடுவதில் தமது புதல்வியின் துணிவையும் தொண்டாற்றும் குணத்தையும் எண்ணிப் பெருமிதம் கொண்டாள் தாயார். தமது புதல்வியும் நாட்டுப் பணியில் கீர்த்தியுடன் விளங்குவாள் என்று சரோஜினி நம்பிக்கை கொண்டது வீண் போகவில்லை.

பத்மஜாநாயுடு குழந்தைப் பருவத்தில் எப்போதும் தாயாருடனே இருந்து வந்ததால், தேசத் தலைவர்கள், அறிவாளிகள் முதலியவர்களிடம் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. ஹைதராபாத்திலுள்ள 'மஹ்பூபியா பெண்கள் உயர் நிலைப் பள்ளி'யில் கல்வி கற்றதற்கு மேல் பத்மஜாநாயுடு பட்டப் படிப்புகள் எதுவும் படிக்கவில்லை. எனினும், தாயாருடன் இருந்து, தேசத் தலைவர்களுடன் பழகியதால் ஏற்பட்ட அநுபவங்களே அரிய கல்வியாக அவரிடம் அமைந்தது. காந்திஜியின் செல்வக் குழந்தைகளில் பத்மஜாவும் ஒருவராக விளங்கி வந்தார்.

இந்தியக்குடியரசின் ஜனாதிபதி வருஷத்துக்கு ஒரு முறை தென்னிந்தியாவில், தமது உத்தியோக முறையில் வந்து சில வாரங்கள் தங்கினால்தான் தென்பகுதி மக்களுடன் தொடர்பு வலுவாகும் என்று வற்புறுத்தியவர்களில் திருமதி பத்மஜாநாயுடுவும் முக்கியமானவர். அவர்களுடைய முயற்சி வீண்போகவில்லை. ஹைதராபாத்தில் ''ராஷ்டிரபதி நிலையம்'' உருவாகி ஜனாதிபதி அவர்கள் அங்கு வந்து தங்கிச் செல்வதைப் பார்க்கிறோம். ராஷ்டிரபதி நிலையத்தை அழகான முறையில் அமைத்துத் தரும் பொறுப்பைத் திருமதி பத்மஜா அவர்களிடம் இந்திய சர்க்கார் ஒப்படைத்தனர். எல்லோரும் பாராட்டும் வகையில் அந்த மாளிகையைப் பத்மஜா அவர்கள் மேற்பார்வை செய்து அழகுற அமைத்துத் தந்திருக்கிறார்கள். கவி தாகூர் கலையரசு செலுத்திய வங்காளத்தில் கலையரசியின் குமாரி கவர்னராகப் பதவி வகிப்பது மிகப் பொருத்தமானதுதான். பத்மஜா நாயுடு அவர்கள் எப்போதும், சுறுசுறுப்பு மிக்கவர். ஐம்பது வயது நிறைந்தும், குழந்தைப் பருவத்துச் சுறுசுறுப்பு துளியும் குன்றாமல், பணியாற்றி வருகிறார். ''தாமரை என்று பெயர் கொண்ட செல்வியே, தாமரை மகள்! இலக்குமி யென விளங்குவாய் நீ...!'' என்று கவியரசி சரோஜினி, பத்மஜாவுக்கு எழுதி அனுப்பிய பாட்டு ஒன்றில் வருணித்திருக்கிறார். வங்காளத்தின் அதிர்ஷ்டம், அங்கு லக்ஷ்மி அரியாசனத்தில் அமர்ந்திருப்பதாகவே கூறலாம்.



கூந்தல் மற்றும் மூளை அபிவிருத்திக்கான தைலம்

செழுமையாகக் கூந்தல் வளர உதவுகிறது. வழுக்கையைத் தடுப்பதுடன் கேசம் உதிர்வதையும் நிறுத்துகிறது. ஞாபக சக்தியை அதிகரித்து ஆழ்ந்த நித்திரையை அளிக்கிறது. எல்லோருக்கும் எக்காலத்திலும் ஏற்றது.

பெரிய பாட்டில்	ரூ.	3 - 50
சிறிய பாட்டில்	ரூ.	2 - 00

எங்கும் கிடைக்கும்

ஆயுர்வேத மருந்து

ராம்தீர்த்

பிரம்மி எண்ணெய்

ராம்தீர்த் யோகாஷ்ரமம்

பம்பாய்-14. (C. Ply)

ஆரோக்கியமாகவும், திடமாகவும் இருக்க [illegible] ரூ. 1-98, [illegible]

சென்னை டெப்போ :

4/441, தங்கசாலைத் தெரு, சென்னை

பாதி விலைக்கும் குறைவு

15 நாட்களுக்கு மட்டும்

எல்லாக் கெடிகாரங்களும் புகழ் பெற்ற தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டவை

பத்து வருஷங்களுக்கு உத்தரவாதம்

இலவசம் - 3 கைக்கெடிகாரங்கள் ஒரே சமயத்தில் வாங்குபவர்களுக்கு ஒரு கைக்கெடிகாரமும், இரண்டு வாங்குவோருக்கு ஒரு பாக்கெட் கடிகாரமும், ஒன்று மட்டும் வாங்கினால் ஒரு பவுண்டன் பேனாவும் இலவசம்.




பாக்கெட் கெடிகாரம்	~~28/-~~ 13/-
ரேடியம் பாக்கெட் கெடிகாரம்	~~32/-~~ 15/-
ஜெர்மனி டைம்பீஸ்	~~32/-~~ 15/-
உயர்தர அலாரம்	~~36/-~~ 17/-

No. 994 — SIZE 9 3/4



21 ஜு. வாட்டர்புரூப் குரோம்	~~80/-~~ 39/-
21 ஜு. ,, ரோல்டு கோல்டு	~~86/-~~ 42/-
15 ஜுவல்ஸ் வாட்டர் புரூப்	~~75/-~~ 36/-

No. 995 — SIZE 8 3/4



21 ஜு. வாட்டர்புரூப் குரோம்	~~88/-~~ 42/-
21 ஜு. ,, ரோல்டு கோல்டு	~~95/-~~ 45/-
17 ஜுவல்ஸ் வாட்டர் புரூப்	~~76/-~~ 37/-

No. 996 — SIZE 7



15 ஜு. ரோல்டு கோல்டு	~~73/-~~ 35/-
15 ஜு. ,, 10 மைக்ரோன்ஸ்	~~76/-~~ 38/-

PIONEER WATCH CO.

POST BOX No. 11428 - CALCUTTA-6



மாலவல்லியின் தியாகம்

கி. ரா. கோபாலன்

அத்தியாயம் 19

பூமி சுழன்றது

தேனார்மொழியாளின் வீட்டை விட்டு வெளியேறிய பூதுகன் வீதியில் அதி வேகமாக நடந்தான். அப்பொழுது அவன் எங்கே கிளம்பினான், எங்கே போகிறான் என்பது அவனுக்கே தெரியாதிருந்தது. தேனார்மொழியாளின் மனநிலையை அறிந்த பூதுகன் எப்படியாவது அவளுடைய வீட்டை விட்டு வெளியேறுவதுதான் நலம் என்று கருதினான். அவன் தன்னுடைய வாலிபத்தைப் பற்றியோ கட்டுத் தளராத உடல் அழகைப் பற்றியோ இதுவரை சிந்திக்கவில்லை. அதிலும் அபாயம் இருக்கிறது என்பதை இப்பொழுதுதான் உணர்ந்து கொண்டான். சில நிமிஷ நேரங்கள் பழகுவதற்குள் தேனார்மொழியாளுக்குத் தன் மீது தவறான இச்சை ஏற்பட்டு விடும் என்று அவன் நினைக்கவே யில்லை. ஆரம்பத்தில் அவளுடைய இனிய வார்த்தைகள் அவனுக்கு மிகவும் அனுகூலமுள்ளவை போலத் தென்பட்டன. ஆனால் அவள் கோபங் கொண்டபோது சொல்லிய வார்த்தைகள் அவளால் எப்பொழுதேனும் துன்பம் நேருவதற்குக் காரணமுண்டு என்பதைத்தான் அவனுக்கு எடுத்துக் காட்டின. தேனார்மொழியாள் மிகவும் அழகுடையவள் தான். சொல்லப் போனால் வைகை மாலையை விட வயதில் மூத்தவளாக இருப்பினும் அவளை விட மிகவும் அழகு





உடையவள் என்பதை உணர்ந்து கொண்டான். அது மட்டுமல்ல; அவளுடைய இசை மிகவும் சிறந்ததாகத் தான் இருந்தது. ஆனால் அவைகளெல்லாம் அவன் மனத்தைக் கவர்ந்து விடவில்லை. அவன் தன்னுடைய மனத்தைத் திடத்தோடுவைத்துக் கொள்ள நினைத்தான். தன்னை நம்பியிருக்கும் வைகை மாலைக்குத் துரோகம் செய்ய விரும்பவில்லை. நாட்டுப் பற்றுள்ள அவனுடைய லட்சியம் ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை நிலைநிறுத்துவதாக இருந்தாலும் அதற்காக உள் அந்தரங்கமான துரோகம் செய்ய விரும்பவில்லை. மறுபடியும் தேனார் மொழியாளின் வீட்டைப் பற்றியே நினைக்கக் கூடாது என்ற திட சங்கற்பத்தோடு அவன் வேகமாக நடந்தான்.

அன்று மாலை அவன் வந்ததிலிருந்து மாலவல்லியைப் பற்றி அவனுக்கு எதுவுமே தெரியவில்லை. பூம்புகார் புத்த விஹாரத்தில் ரவிதாசனைக் கொன்றவர்கள் யார் என்ற விவரமும் அவனுக்குத் தெளிவாகத் தெரியவில்லை. மாலவல்லி எங்கே சென்றிருப்பாள்? அவளாகச் சென்றிருப்பாளா? அல்லது அவளை யாரேனும் கடத்திக் கொண்டு போயிருப்பார்களா? வீரவிடங்கன் என்று தன் பெயரை மாற்றி வைத்துக் கொண்ட கங்க நாட்டு இளவரசன் பிரதிவீபதி திடீரென்று எங்கே மறைந்தான்? இவைகளையெல்லாம் தெரிந்து கொள்ளத் தானே அவன் காஞ்சிமா நகர் வந்தான்? இவைகளையெல்லாம் தெரிந்து கொள்வதற்கு அனுகூலமாகத்தானே தேனார் மொழியாளின் வீட்டைத் தேடியடைந்தான்? அவளும் அவனுக்கு அனுகூலமாகத் தானே இருந்தாள்? திடீரென ஏன் துரதிர்ஷ்டவசமாக அவளுடைய விரோதம் அவனுக்கேற்பட வேண்டும்? இனிமேல் அவள் வீட்டுக்கே போவதில்லை என்று சங்கற்பம் செய்துகொண்ட அவன், இனிமேல் எப்படி யார் மூலமாகத்

தன் காரியத்தைச் சாதித்துக் கொள்ளப் போகிறான்? இத்தகைய பிரச்னைகளெல்லாம் அவன் மனத்தில் அப்பொழுது எழுந்து ஒரு முடிவுக்கும் வர முடியாத வண்ணம் குழப்பத்துக்குள்ளாக்கியது.

குழப்பமான நிலையிலிருந்த அவன் மனம் திடீர் என்று ஒரு முடிவுக்குவந்தது. காஞ்சி மாநகரில் புத்ததேரித் தெரு என்றொரு தெரு உண்டு. அந்தத் தெருவில் கால நங்கை என்னும் புத்த பிக்ஷுணி ஒரு புத்தப் பள்ளி ஏற்படுத்தியிருந்தாள். தேரிகள் என்று சொல்லப்படும் பிக்ஷுணிகளுக்குள்ளேயேகுணத்தாலும், கொள்கையாலும், நடத்தையாலும் சிறந்தவளாக அவள் விளங்கினாள். அவள் மிகவும் படித்தவள். தமிழ் நாட்டிலேயே புத்த சமயத்தினரின் பெரு மதிப்புக்குப் பாத்திரமானவள். அடக்கமும் சீலமும் கொண்ட அவளிடம் புத்த பிக்ஷுணியாக விளங்க நினைக்கும் அனேக பெண்கள் தர்ம விதிகளைக் கற்றுக் கொண்டிருந்தனர். பூம்புகாரிலிருந்து திடீரென்று மறைந்த மாலவல்லி காலநங்கையிடம் வந்து அடைக்கலம் புகுந்திருக்கலாமோ என்று எண்ணினான் பூதுகன். அதனால் இரவுவேளையாயினும் புத்ததேரித் தெருவிலுள்ள புத்தப் பள்ளியில் போய்ப் பார்க்கலாமென்ற எண்ணம் அவனுக்கு உண்டாயிற்று. உடனே எதிரில் வந்த மனிதரை நெருங்கிப் புத்த தேரித் தெரு எங்கே இருக்கிறதென்று விசாரித்துக் கொண்டு அந்தத் தெருவை நோக்கி வேகமாக நடந்தான்.

பாவம்! அந்த இரவில் அவனைப் பின்தொடர்ந்து ஒளிந்து ஒளிந்து ஒரு உருவம் வருவதை அவன் கவனிக்கவில்லை. பல வீதிகளைக் கடந்து புத்ததேரித் தெருவை யடைந்தான். அந்தத் தெருவில் சுமார் பத்து பதினைந்து வீடுகள் இருந்தன. அந்த வீடுகளெல்லாம் ஒரே மாதிரி காட்சி யளித்தன. தெருக் கோடியில் ஒரு பெரிய கட்டடம் இருந்தது. அதைப் பார்த்ததுமே



அதுதான் புத்தப் பள்ளியாக இருக்க வேண்டும் என்ற தீர்மானம் அவனுக்கு ஏற்பட்டது. அவன் அந்தக் கட்டடத்தை நெருங்கிய போது அந்தக் கட்டடம் மிகுந்த அமைதி நிறைந்த நிலையில் இருந்தது. சிறிது நேரம் அந்தக் கட்டடத்தின் வாசலில் நின்று யோசித்தான். அந்தக் கட்டடத்தின் வாசற் கதவு தாளிடப்பட்டிருந்தது. முற்றிலும் பெண்களே இருக்கும் அந்த புத்தப் பள்ளியில் அந்த வேளையில் கதவை இடிப்பது உசிதமா என்ற எண்ணம் அவனுக்கு ஏற்பட்டது. அவன் எதையோ எண்ணி அங்கு வந்துவிட்டான். அங்கிருந்து எதையும் அறிந்து கொள்ளாது திரும்புவது உசிதமாகப் படவில்லை. மெதுவாகப் படிகளிலேறி, கதவைத் தட்டினான். உள்ளிருந்து யாரோ பேசும் குரல் அவனுக்குக் கேட்டது. அது யாரோ ஒருபெண் மற்றொரு பெண்ணிடம் பேசும் குரல்தான் என்பதையும் தெரிந்து கொண்டான். சிறிது நேரத்தில் கதவு திறக்கப் பட்டது. வாசற்படியருகே ஒரு வயதான பிக்ஷுணி நின்று கொண்டிருந்தாள். இரவு நேரத்தில் தாங்கள் இருக்கும் ஆசிரமம் போன்ற அந்த இடத்துக்கு ஒரு ஆண்பிள்ளை வந்தது அந்த பிக்ஷுணிக்குச் சிறிது ஆச்சர்யத்தை யளித்தது போலிருக்கிறது. அவள் வியப்போடு பார்த்து, "தாங்கள் யார்? இங்கு வந்த காரணம் என்ன?" என்று கேட்டாள்.



அவன் மிக்க மரியாதையோடும் வணக்கத்தோடும், "நான் சோழ நாட்டைச் சேர்ந்தவன். காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து வருகிறேன்" என்றான்.

அந்த வயதான பிக்ஷுணி "அப்படியா? தாங்கள் இங்கு வந்த காரணம்...?" என்று வினவினாள்.

"சமீபத்தில் காவிரிப்பூம்பட்டினத்திலுள்ள புத்த சேதியத்தில் ஒரு பிக்ஷு கொலை செய்யப்பட்ட விஷயம் தங்களுக்குத் தெரிந்திருக்கலாம்" என்று தயங்கியபடியே சொல்லி நிறுத்தினான்.

இதைக் கேட்டதும் அந்த பிக்ஷுணி கலக்கமடைந்தவள் போல், "எனக்கு அவ்விவரங்கள் தெரியாது. நீங்கள் சொல்வதிலிருந்து தான் தெரிகிறது. புத்த சேதியத்தில் கொலையா? என்ன அநியாயம்? இத்தகைய தீய காரியம் ஒரு புத்த சேதியத்தில் நடந்ததென்பதைக் கேட்கத்தான் மனம் பொறுக்கவில்லை. அதன் விவரத்தையறிய நான் ஆசைப்படுகிறேன்" என்றாள்.

"அதன் விவரத்தைத் தங்களுக்குச் சொல்ல வேண்டுமென்பதுதான் என் விருப்பம். அதோடு தங்களிடமும் சில விஷயங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவலில்தான் இரவு வேளையில் இந்த இடத்துக்கு வரலாமாகூடாதா என்பதையும் ஆலோசிக்காமல் வந்தேன், மன்னிக்கவும். இதைப் பற்றி இங்கு நின்று பேசுவது சிலாக்கியமில்லையென்று நினைக்கிறேன். நான் உள்ளே வர அனுமதியுண்டா?" என்று கேட்டான் மெதுவாக.

"தாராளமாக வாருங்கள்" என்றாள் அந்தக் காலநங்கையென்னும் புத்த பிக்ஷுணி. பூதுகன் அவளைப் பின்தொடர்ந்து உள்ளே சென்றான். உள்ளே அகன்ற சதுரமான கூடம். சுற்றிலும் தீபங்கள் எரிந்து கொண்டிருந்தன. புத்தபெருமானின் பூர்வபிறவிக் கதைகளைச் சித்திரிக்கும் அழகான ஓவியங்கள் சுற்றிலும் உள்ள சுவர்களில் எழுதப் பட்டிருந்தன. கூடத்தின் நடுவே ஒரு உயர்ந்த ஆசனம் போடப்பட்டிருந்தது. அதைச் சுற்றிலும் போடப்பட்டிருந்த கோரைத் தடுக்குகளில் கையில் ஓலைச்சுவடிகளை ஏந்தியவண்ணம் பல புத்த பிக்ஷுணிகள் அமர்ந்திருந்தனர். பூதுகனோடு உள்ளே வந்த காலநங்கை அவர்களுக்கு ஏதோ சமிக்ஞை காட்ட அவர்களெல்லாம் வணக்கம் செலுத்திவிட்டு மெதுவாக எழுந்து சென்றனர். அந்த இடத்தில் தூய அமைதியும் தெய்வீக மணமும் கமழ்ந்து கொண்டிருந்தது என்றுதான் சொல்ல வேண்டும்.

க்ஷண நேரத்தில் பூதுகன் யாவற்றையும் உணர்ந்து கொண்டான். அந்தப் புத்த பிக்ஷுணிகளுக்குள் வயதிலும் அனுபவத்திலும் சிறந்தவளாக விளங்கும் அந்தக் காலநங்கை மகா தேரியாக

நீங்கள் செய்யும் தொழில் என்ன?

வியாபாரம் . . . தச்சுவேலை . . . எலக்டிரிஷியன் . . .


மெகானிக் . . . இஷ்டமான பொழுது போக்குத்தொழில்?


எதுவானாலும், இதுவரை விற்பனை செய்யப்பட்டதிலும், ஒவ்வொருவரும் வாங்கக்கூடிய விலையில், கச்சிதமான, சக்தி நிறைந்த 'உல்ப் கப்' ¼" எலக்டிரிக் டிரில், உங்களுக்கு மிகவும் அத்தியாவசியம்.

முதன் முதலில் 'உல்ப் கப் டிரிலுடன்' தொடங்கி, உங்கள் தொழிற்சாலை முழுவதும், மின்சார சக்தியால் செலுத்தப்படும் ஆயுதங்களால் பூர்த்திப்பு செய்யுங்கள்.

இதுவரை கை ஆயுதங்களால் செய்யப்பட்டுவரும், துவாரமிடுதல், பாலிஷ் செய்தல், ரம்ப அறுப்புபோன்ற ஜோலிகளிலுள்ள பிரயாசம், தாமதம். இவைகளை 'உல்ப் கப்' ஏற்கொண்டு, உங்களுக்கு சௌகரியத்தை அளிக்கும். இலகுவாய் திருப்பக்கூடியதும் மட்டுத்தன்மையில் இலேசானதும் கூட. மிகவும் சுலபமாக வேலை செய்யலாம்.

சிரமமின்றி உங்களால் அதிகப்படியான வேலைகள் செய்யமுடியும்.





ராலிஸ் இன்டியா லிமிடெட்,

320, லிங்கச்செட்டித் தெரு, மதராஸ். பம்பாய் • கல்கத்தா • டெல்லி


இருந்து புத்ததரும உபதேசங்களைக் கற்பித்துக் கொண்டிருந்தாள் என்பதை எளிதாக உணர்ந்து கொண்டான். அதோடு அவனது பார்வை அங்கிருந்து சென்ற புத்த பிக்ஷுணிகளின் முகத்தை ஒரு கணத்தில் பார்த்துத் தெரிந்து கொண்டது. அவனுடைய கவலையெல்லாம் மாலவல்லி அங்கு இருக்கிறாளா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதுதானே? ஆனால் அவள் இங்கு இல்லையென்பதைச் சில விநாடிகளுக்குள்ளேயே உணர்ந்து கொண்டு விட்டான். அவள் அங்கு இருந்தால் அவளும் தருமோபதேசங்களைக் கேட்க அங்கு வந்திருக்க மாட்டாளா? அவள் அங்கு இல்லை என்பதை யூகித்துக் கொண்டதும் அவன் தன் காரியம் முடிந்துவிட்டதாகக் கருதி விடவில்லை. புத்த பிக்ஷுணியாகிய காலநங்கையோடு பேசி அவளுடைய மன நிலையையும் அறிந்து கொள்ள விரும்பினான். காலநங்கை அங்கு போடப்பட்டிருந்த ஆசனத்தில் அமர்ந்து அவனையும் பக்கத்தில் அமரும்படி கை காட்டினாள். பூதுகன் மிகவும் அடக்கத்தோடு அவள் எதிரில் உட்கார்ந்தான்.

காலநங்கை ஆழ்ந்த மன வருத்தத்தோடு, ''சிறந்த ஞானியாகிய அக்க மகாதேரர் எழுந்தருளி யிருக்கும் பூம்புகார் புத்த சேதியத்தில் இப்படியொரு காரியம் நடந்தேறியதைக் கேட்டதும் மிகுந்த மன வருத்தம் ஏற்படுகிறது. இந்தச் சமயத்தில் மிகுந்த சீலரான அவருடைய மனம் எப்பாடு பட்டிருக்கும் என்பதை நினைத்தால் மனத்தில் சங்கடம் ஏற்படுகிறது. ஒன்றுமாத்திரம் உண்மை. ஒரு துறவி தன்னைத்தானே காத்துக் கொள்வதைத் தவிர வெளியார்களின் தூய்மையையும் காக்க முற்பட்டானானால் அவன் உலகச் சுழலில் சிக்கித் தடுமாறத்தான் வேண்டியிருக்கிறது. ஆயினும் இந்தக் கொலையைப் பற்றிச் சிறிது விவரம் அறிந்து கொள்ள விரும்புகிறேன்'' என்றாள்.

''பூம்புகார் புத்த சேதியத்தில், இந்தக் காஞ்சிமா நகரிலிருந்து வந்த புத்தபிக்ஷுவான ரவிதாசர் என்பவர் தான் கொல்லப்பட்டார். அவரைப் பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்கலாம்'' என்றான் பூதுகன்.

புத்த பிக்ஷுணி ஒரு பெருமூச்சு விட்டாள். ''ரவிதாசரா.........? சீவர ஆடையணிந்து புத்த சங்கத்தில் சேருவது மகா கடினமானதென்று சொல்லுவார்கள். ஆனால் அதுவே சில சமயத்தில் மனிதர்களை உத்தேசித்தும் அதிகாரச் சலுகையினாலும் மிகச் சுலபமாக நிறைவேறி விடுகிறது. ரவிதாசர் ஜைன மதத்தில் இருந்தவர். அவர் புத்த தருமத்தை எவ்வளவு தூரம் கற்றுத் தெரிந்தவர் என்று எனக்குத் தெரியாது. ஆனால் அவர் திடீரென்று புத்த சங்கத்தில் சேர்ந்ததும், சேர்த்துக் கொள்ளப்பட்டதும் ஏதோ அதிகாரச் சலுகையால்தான் என்பதை நான் உணர்ந்தேன். அரசாங்க அதிகாரம் உள்ளவர்களெல்லாம் சில சமயம் சமய நிர்வாகங்களுக்குள்ளும் வந்து புகுந்து குழப்பத்தை ஏற்படுத்துகிறார்கள்........'' என்றாள் காலநங்கை.

பூதுகன் அடக்கமான குரலிலேயே, ''உண்மை. அதைப்போல சமயப்பணி செய்பவர்களும் அரசியல் அதிகார ஆசைக்குட்பட்டு அதில் புகுந்து அரசியலையும் குழப்புகிறார்கள்'' என்றான்.




''எப்படியோ அரசியல் செல்வாக்கின் காரணமாக மதத்தைப் பரப்ப வேண்டு மென்று நான் சொல்லவில்லை. அதனால் மதத்தின் பெருமைக்குத்தான் இழுக்கு ஏற்படும்.....'' என்றான்.

பூதுகன் சிரித்தான். ''ஒரு உண் மையை நீங்கள் மறுக்க முடியாது. அரசின் தயவை எதிர்பார்க்காமல் இந்த நாட்டில் எந்த மதமும் முன் னேறியதில்லை. புத்த பெருமான் பரி நிர்வாணம் அடைந்த பல நூற்றாண்டு களுக்குப் பின்னால் அசோகன் தோன்றிப் பௌத்த தரும சங்கங்களை ஒழுங்கு படுத்தி இம் மதத்தை உலக மெங்கும் பரப்பலானான். போகட்டும். உங்க ளுக்கு புத்த பிக்ஷுணியாகிய மாலவல்லி யைப் பற்றி ஏதேனும் தெரியுமா?'' என்று கேட்டான்.

இதைக் கேட்டதும் காலநங்கை பூது கனை வியப்போடு பார்த்துக்கொண்டே, ''மாலவல்லியா...? நல்லபெண். ஆனால் புத்த சங்கத்தில் சேரும் அருகதை அவளுக்கு இல்லை. அவள் மிகவும் மன்றாடிக் கேட்டுக் கொண்டதன் பேரில் அவளை நான் சங்கத்தில் ஒரு பிக்ஷுணியாகச்சேர்த்துக்கொண்டேன். ஆனால் அவள் பௌத்ததருமத்தை மீறிச் சில காரியங்களில் ஈடுபடுகிறா ளென் பதை யறிந்ததும் மனம் வருந்தினேன். அவள் இங்கு இந்தக் காஞ்சியில் இருந்தால் அவளுடைய புனிதமான வாழ்க்கை பாதிக்கப்படும் என்று நான் தான் அவளைப் பூம்புகாருக்கு அனுப்பி னேன். அவளைப் பற்றி நீங்கள் கேட் கும்போது எனக்கு அனேக சந்தேகங்கள் எழுகின்றன. அவளைப் பற்றி ஏதே னும் விவரமுண்டா?'' என்றான்.

''அவளுடைய அந்தரங்கமான வாழ்க்கை விவரங்களைத் தெரிந்து கொண்ட உங்களுக்கு நான் என்ன சொல்வது? காஞ்சியிலிருந்து காவிரிப் பூம்பட்டினம் வந்து விட்டால் ஆசை அகன்று விடுமா? இளம் பெண்ணின் வாழ்க்கையில் இது எதிர்பார்க்கக் கூடி யதா? இயற்கையாகவிளைந்தபேரழகைச் சீவர ஆடையைக் கொண்டு போர்த்தி விட்டால் மறைந்து விடுமா? மன்னித் துக் கொள்ளுங்கள். அழகிய சிறந்த இளம் பெண்கள் சீவர ஆடையை அணிந்து கொண்டால் அதுவும் ஒரு அழகாய்த்தான் இருக்கிறது. மாலவல்லி யின் காதலனுக்கு அவள் காஞ்சியி லிருந்தாலும் ஒன்றுதான், காவிரிப் பூம் பட்டினத்தில் இருந்தாலும் ஒன்று தான். கங்கபாடியிலிருந்து குதிரை ஏறிக் காஞ்சிக்கு வந்து கொண்டிருந்த அவன், காவிரிப்பூம் பட்டினம் வந்து கொண்டிருந்தான், அவ்வளவுதான் வித்தியாசம். வாழ்க்கையில் எதைத் தவிர்த்தாலும் இந்த மோகத்தைத் தவிர்ப்பது என்பது சிறிது கடினம் தான்.,.'' என்றான் பூதுகன்.

பிக்ஷுணி காலநங்கை ஒரு பெரு மூச்சு விட்டு, மிகவும் வருத்தம் நிறைந்த குரலில், ''உண்மையாகவே இந்த உலகத்தில் பெண்களாய்ப் பிறந் தவர்கள் துறவறத்துக்கு அருகதையற்ற வர்கள் என்றுதான் தோன்றுகிறது. ஏனென்றால் அவர்களை ஆபத்து எப் பொழுதும் சூழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. ததாகதர் பெண்களைச் சங் கத்தில் சேர்ப்பதை முதலில் விரும்ப வில்லை. பகவர் நியக்குரோதி வனத் தில் தங்கியிருந்த போது அவருடைய



சிற்றன்னை கௌதமி அவரை யணுகித் தான் தரும விதியை முறைப்படி யறிந்து, வீட்டைத் துறந்து, பிக்ஷுணி யாக வேண்டு மென்று அனுக்கிரகிக்க வேண்டினாள். 'துறவு மார்க்கத்தில் பெண்கள் ஆசை வைக்க வேண்டாம்' என்று பகவர் சொல்லி மறுத்து விட்டார். இரண்டு மூன்று முறைகள் கௌதமி மன்றாடிப் பார்த்தும் பயனில்லாமல் போயிற்று. அவள் சோகத்தோடுஅழுதுகொண்டே சென்று விட்டாள். பெண்கள் பிக்ஷுணியாவதற்குப் பெருமான் நெடுநாள் வரையில் இசையவில்லை. ஆனால் அவருடைய சிற்றன்னை கௌதமி மனங் கலங்காது உறுதியோடு பல விரதங்களைக் கைக் கொண்டுஎப்படியேனும் துறவு வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும் என்று உறுதி பூண்டு வாழ்ந்து வந்தாள். புத்தர் வைசாலியில் இருப்பதை யறிந்து அன்னை கௌதமி தன் கூந்தலை யகற்றிக் காவி உடை யணிந்து தன்னைப் பின்பற்றித் துறவுவாழ்க்கையை உறுதிபூண்ட அனேகம் பெண்களுடன் பகவரின் சன்னிதானத்தை யடைந்தாள். தீவிர விரதம் பூண்டு அங்கு வந்திருக்கும் கோலத்தைக் கண்டதும்தான் பெருமானின் மனம் சிறிது இளகியது. அவர் பெண்கள் பிக்ஷுணிகளாவதற்கு வேண்டிய எட்டு விதிகளை ஏற்படுத்தி அவர்களையும் சங்கத்தில் சேர்த்துக் கொள்ள அனுமதி யளித்தார். அன்னை கௌதமியும் அவளைப் போன்ற இன்னும் சில பெண்களும் ததாகதரின் வழியைப் பின்பற்றி நடந்திருக்கலாம். ஆனால் எல்லாப் பெண்களும் அப்படியிருக்க முடியுமா? இதை உத்தேசித்துத்தான் பகவர் பெண்களைச் சங்கத்தில் சேர்த்துக் கொள்ளும் விஷயத்தில் நெடு நாட்கள் வரையில் யோசித்தாரென்று தெரிகிறது. மாலவல்லி போன்ற பெண்களால் புத்த தருமமே சங்கத்துக்கு இழுக்கு ஏற்படுவதை எண்ணி நான் மிகவும் வருந்துகிறேன். நீங்கள் சொல்வதிலிருந்து மாலவல்லிக்கும் புத்தசேதியத்தில் நடந்த கொலைக்கும் ஏதோ சம்பந்தம் இருப்பது போலல்லவா தோன்றுகிறது?'' என்றான்.

''அவளுக்கும் அந்தக்கொலைக்கும் சம்பந்த மிருக்குமென்று நான் நினைக்கவில்லை. ஆனால் அவள் கொலை நடந்த அன்றே அந்தப் புத்தசேதியத்திலிருந்து மறைந்து விட்டாள். அதனால் அவளுக்கும் அக்கொலைக்கும் ஏதோ சம்பந்தம் இருக்குமோ என்ற வதந்திதான் ஏற்பட்டிருக்கிறது. அவள் எங்கிருக்கிறாள் என்பதை அறியத்தான் நான் முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். ஒருவேளை இங்கிருப்பாளோ என்று அறிந்துகொள்ளத்தான் இங்கு வந்தேன்.''



'' எனக்கொன்றும் அதுபற்றித் தெரியாது. இவ்விஷயம் என்மனத்தைமிகவும் கலக்கத்துக் குள்ளாக்கியிருக்கிறது. இதைப் பற்றிய பேச்சை இதோடு நிறுத்திக் கொள்ள விரும்புகிறேன். இதைப் பற்றி நினைப்பது கூட என்னுடைய துறவு வாழ்க்கைக்கு இழுக்கை ஏற்படுத்து மென்று நினைக்கிறேன். இப்படிப் பட்ட விஷயங்களையெல்லாம்மறந்து, என் மனத்தைத் ததாகதரின் திருவடி நிழலில் ஒதுக்கிக் கொள்ள விரும்புகிறேன். தாங்கள் தயவு செய்து சென்று வருகிறீர்களா?'' என்றாள்.


பூதுகன் அதற்கு மேலும் பேசப் பிரியப் படாதவன் போல எழுந்தான். எழுந்து அவளுக்கு வணக்கம் தெரிவித்து விட்டு வெளியே வந்தான். அது பின்நிலவுக் காலம். அங்கங்கு தீப ஒளி இருந்தாலும் அந்த வீதிகளில் திட்டுத் திட்டாக இருளும் சூழ்ந்திருந்தது. ஜன நடமாட்டமும் அதிகமாக இல்லை. அப்பொழுது அவன் தான் பகலில் தங்கியிருந்த தரும சாலைக்குச் சென்று சிறிது ஆகாரம் செய்து விட்டுப் படுக்கவேண்டு மென்று நினைத்தான். அவன் வேகமாக நடந்துகொண்டிருந்த போது அவனுக்குப் பின்புறத்தி லிருந்து யாரோ பாய்ந்து தாக்குவதை உணர்ந்தான். அவன் சட்டென்று திரும்பிய போது எதிரில் நின்ற உருவத்தை யார் என்று தெரிந்து கொள்ள முடிந்தது. அது வேறு யாருமல்ல, கலங்கமாலரையர் தான். அந்த மகா பாதகன் பழைய பிக்ஷுக் கோலத்திலேயே இருந்தான். ஆனால் அவன் கைகளில் பிக்ஷா பாத்திரம் இருப்பதற்குப் பதிலாக நீண்ட தடியொன்று இருந்தது. பூதுகன் தன்னைத் தாக்கிய கலங்கமாலரையனைத் தாக்க நினைக்கும் சமயம், கலங்கமாலரையன் தன் கைத் தடியினால் பூதுகனின் மண்டையில் ஓங்கி அடித்தான். அடுத்த கணம் பூதுகன் மூர்ச்சையுற்றுக் கீழே விழுந்தான். அவன் கண்ணெதிரே பூமி சுழன்றது!

(தொடரும்)

இந்த அத்தியாயத்தில் வரும் ஆரம்பக் காட்சிதான்
— இவ்வார அட்டைச் சித்திரமாகத் திகழ்கிறது —

ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்

பூமேனி பாப்பாக்களுக்கு புவியில் சிறந்த பவுடர்





இலவச புத்தகம்: ஜான்ஸனின் குழந்தை பராமரிப்பு புத்தகத்தின் இலவசப் பிரதிக்கு எழுதுங்கள். பெற்றோர்களுக்கு உபயோகமான அநேக விஷயங்கள் இதில் அடங்கியுள்ளன. இங்கிலீஷ் அல்லது ஹிந்தி பிரதிகளில் எது வேண்டுமென்று குறிப்பிட்டு எழுதவும்.

ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன், பி.ஓ. பாக்ஸ் 1976, டிபார்ட்மெண்ட் 36-E பம்பாய்



பாண்ட்ஸ் கோல்டு க்ரீம்
உபயோகிக்கும் பெண்மணியை
—அவன் விரும்புகிறான்
என்பதை அவன்
மறைப்பதில்லை
முகத்தைக் கழுவியபின், எப்பொழுதும், அற்புத குணம் வாய்ந்த பாண்ட்ஸ் கோல்டு க்ரீமை உபயோகியுங்கள். இது சருமத்தைப் பாதுகாக்கும் இயற்கை எண்ணெய்களின் கஷ்டத்திற்கு ஈடுகட்டி, உங்கள் சருமத்தைப் புதுமையுடனும் மாசற்றதாயும் வைக்கும். பாண்ட்ஸ் கோல்டு க்ரீம் சருமத் துவாரங்களில் ஊடுருவிச் சென்று அழுக்கை அகற்றி, உங்கள் சருமத்தை முற்றிலும் சுத்தமாக வைக்கும்.
POND'S
cold
cream
இலவச புஸ்தகம்
அழகுபற்றிய குறிப்புகள் கொண்ட Lovelier with Pond's என்ற எமது புஸ்தகத்தை வரவழையுங்கள். பாக்ஸ் நம்பர் 1612, பம்பாய் 1 என்ற விலாசத்திற்கு எழுதவும்

ரகுபதி ராகவ



[அகமதாபாத் நவஜீவன் காரியாலயத்தினர் பிரசுரம் செய்திருக்கும் 'சத்தியமே தெய்வம்' என்னும் காந்தி வசன மஞ்சரியிலிருந்து ராஜாஜி எடுத்து எழுதியது]

77

உரிமைகளை மட்டும் மனத்தில் வைத்துக் கொண்டு நம்முடைய கடமைகளை மறந்து விட்டால் அந்த உரிமைகளை நாம் என்றும் அடைய மாட்டோம். கடமைகளைச் செய்து தீர்த்தோமானால் உரிமைகள் தாமே வந்து சேரும். கடமைகளைச் செய்யாமல், உரிமைகளை அடைய ஓடினோமானால் உரிமைகள், கொள்ளி வாய்ப் பிசாசைப் போல் நம் கைக்கு எட்டாமல் தூரமாகவே போய்க் கொண்டிருக்கும். நாம் ஓட ஓட அதுவும் கைக்கு எட்டாமல் முன்னால் ஓடும். ''உன் கருமத்தை நீ செய்; பயனைப் பற்றிக் கவலை கொள்ளாதே. கருமமே உன் கடமை. பயனை எனக்கு விட்டு விடு'' என்று கண்ணன் உபதேசித்ததற்கும் இதுவே கொள்கை. கருமம் என்பது கடமை. பயன் என்பது உரிமை. [யங் இந்தியா 8—1—25]

எதையும் ரகசியமாக மறைத்துவைப்பது பாவம் என்பது என் கொள்கை. பகவான் எப்போதும் அண்மையிலேயே இருந்து, அனைத்தையும் பார்த்து வருகிறான். இதனால்தான் ஆண்டவனுடைய நாமங்களில் ''சாட்சி'' என்பது ஒன்று. எதையும் அவன் நேரில் பார்க்கிறான். அப்படியிருக்க நாம் எதையேனும் ஏன் மறைத்து வைக்க வேண்டும்? ஆண்டவனுடைய சான்னித்தியத்தை உணர்ந்தோமானால், அனைத்தையும் அவன் நேரில் காண்கிறான் என்பதை உணர்ந்தோமானால், நாம் எப்படிக் கெட்ட எண்ணங்களை எண்ணுவோம். பாப காரியங்களிலும் பாபமான எண்ணங்களிலும் பாவப் பேச்சுக்களிலும் பயனில்லை. அழுக்கும் குற்றமும் இருந்தாலேதான் மூடி மறைத்து வைக்க வேண்டியதாகிறது. உள்ளத்திலுள்ள அழுக்கை மறைக்க ஆசைப்படுகிறோம். அதற்குப் பதிலாக அப்படி மறைக்க வேண்டிய எண்ணங்களுக்கு மனத்தில் இடங்கொடுக்காமலிருக்க வேண்டும் என்பது என்னுடைய உபதேசம். எதையும் மறைக்க வேண்டாம்.

[யங் இந்தியா 22-12-20]

செய்த பாபத்தின் பயன்களினின்று விடுபட வேண்டும் என்று நான் பிரார்த்தனை செய்ய மாட்டேன். பாபத்தினின்று விடுபட வேண்டும் என்றே வேண்டிக் கொள்வேன். பாப எண்ணமே என் மனத்தில் எழ விடாமல் என்னைக் காப்பாற்ற வேண்டும் என்றுதான் வேண்டிக் கொள்வேன். அவ்வாறு குற்றமற்ற மனநிலையை அடையும் வரையில் சாந்தி இல்லை என்பதை அறிவேன்.

ஆண்டவன், பாபம் செய்தவனையும் நன்னெறியில் நின்று வாழ்க்கை நடத்துபவனையும் சமமாகவே மதிக்கிறான். இருவரும் முன் செல்லலாம், பின் செல்வதற்கும் உரிமையுண்டு. இருவருக்குமே அவன் பிதா. நன்னெறியில் நிற்பவன் தவறினவனைக் கண்டு இகழ்ந்தால் அந்த அகம்பாவத்தினால் அவனுடைய சன்மார்க்கம் பழுதுபடும். அகம்பாவம் கொண்ட ஒருவன், வேறு பாவம் செய்யாதவனாக இருந்தாலும், பாபம் செய்தவனைக் காட்டிலும் தாழ்ந்து போவான். தர்மத்தை உணராமல் ஒருவன் செய்யும் பாபத்தைக் காட்டிலும் தருமத்தை உணர்ந்த ஒருவனுடைய அகம்பாவம் பெரிய பாபமாகும்.

[ஹரிஜன் 14-10-33]

இறந்து போனவர்களோடு நான் சம்பாஷித்தது கிடையாது. இறந்து போனவர்களின் ஆன்மாக்கள் எனக்குச் செய்தி அனுப்பியதும் கிடையாது. அப்படி இறந்து போனவர்கள் உயிருடன் இருப்பவர்களுக்கு ஏதேனும் செய்தி அனுப்புவதுண்டா, அப்படிச் செய்திகளை அடைந்ததாகச் சொல்லிக் கொள்கிறவர்களுடைய பேச்சு உண்மையா என்று என்னைக் கேட்டால் அவையெல்லாம் பொய் என்று சொல்வதற்கு என்னால் முடியாது. அப்படிச் சொல்வதற்கு எனக்கு உரிமை இல்லை. ஆயினும் ஒன்று சொல்வேன். இறந்தவர்களோடு பேசப் பார்ப்பது முற்றிலும் தவறு என்பது என்னுடைய அபிப்பிராயம். இறந்து போன ஆன்மாக்களுடன் சம்பாஷிப்பதும் அவர்களினின்று

செய்திகள் அடைவதும் அனேகமாக மோசமும் மனப்பிராந்தியுமே யாகும். இத்தகைய சம்பாஷணைகள் நடத்துவதில் அவை யெல்லாம் உண்மையாகவே வைத்துக் கொண்டாலும் இறந்தவர்களுடைய சாந்தியைக் கெடுத்தவர்களாவோம். அவர்களுடைய முக்திக்குத் தடை செய்தவர்களாவோம். உடலை விட்டுப் பிரிந்தவுடனே ஆன்மா புனிதமடைந்து விடவில்லை. உயிருடன் இருந்த போது அடைந்த குற்றங்கள் அந்த ஆன்மாவை இன்னும் பாதித்துக் கொண்டுதான் இருக்கும். ஆனபடியால் இறந்தவர்களிடமிருந்து அடையும் யோசனைகள் எல்லாம் நன்மையென்று வைத்துக் கொள்வதற்கில்லை. தவறான யோசனைகளும் இறந்தவர்கள் சொல்லக் கூடும். ஆனபடியால் இறந்தவர்களோடு சம்பாஷிப்பதை நான் முற்றிலும் கண்டிக்கிறேன். அவர்களுக்கும் அது நன்மையல்ல; நமக்கும் அது நன்மையல்ல. உன்னுடைய அனுபவத்தில் இத்தகைய சம்பாஷணைகள் நடத்துபவர்கள் எல்லாம் மூளைக் கோளாறுக்காரர்கள். இத்தகைய சம்பாஷணைகளினால் நன்மையடைந்தவர்களை என்னுடைய அனுபவத்தில் கண்டதில்லை. [யங் இந்தியா 2-19-29]

சரியான முறையில் வாழ்க்கை நடத்த ஆரம்பித்தோமானால் மூடநம்பிக்கைகளும் பிற குற்றங்களும் தாமாகவே விலகிப் போகும். சரியான முறையில் நடந்து கொள்வதே முக்கியம். மனத்திலுள்ள நம்பிக்கைகள் எவ்வாறாயினும் சரி, அவை தாமாகவே சீர்ப்படும். [யங் இந்தியா 11-8-27]

என்னுடைய பல குற்றம் குறைகளையும் பாபங்களையும் மறைக்காமல் ஒப்புக் கொண்டு வந்திருக்கிறேன். அப்படி ஒப்புக் கொண்டு வருவதால் அவை எனக்குச் சுமையாக இல்லை, ஆண்டவனை நோக்கிச் செல்லுகிறேன் என்கிற உணர்ச்சியிருக்கிறபடியினால் அந்தச் சுமையின் பாரம் எனக்கு இல்லை. ஆண்டவனுடைய அருளாகிய குளிர்ந்த வெண்ணிலாவில் நடந்து செல்லுகிறேன். என்னுடைய நியமங்களும் உபவாசங்களும் ஜெபங்களும் என்னைக் காப்பாற்றும் என்று நான் எண்ணவில்லை. அவனுடைய அருள் ஒன்றே என்னைக் காக்கும். அவன் நினைவு இருப்பதற்காகவே இந்த விரதங்களும் ஜெபங்களும் பயன்படும். அவ்வளவே. [ஹரிஜன் 18-4-36]

(முற்றும்)

படித்துப் பாருங்கள்!

Shankar's Weekly Children's Art Number 1957

அர்ஜன்டைனு, ஆஸ்திரேலியா, ஆஸ்திரியா, பெல்ஜியம், பல்கேரியா, பர்மா, கானடா - தலையைச் சுற்றுகிறதா? இத்தப் பெயர்கள் வாயில் நுழைவதற்கே சிரமமாயிருக்கின்றனவா? ஆனால் இவைகளைப் போல் அறுபது நாடுகளின் பெயர்களும் இந்த வண்ண மலரில் கலபமாகப் புகுந்திருக்கின்றன. அது மட்டுமா? உலகத்து நாடுகளிலிருந்தெல்லாம் கதைகளும், கட்டுரைகளும், வண்ண ஓவியங்களும் ஏராளமாக இடம் பெற்றிருக்கின்றன. உலகின் பல பாகங்களில் இருக்கும் பல நாடுகளிலுள்ள குழந்தைச் செல்வங்களின் கள்ளங்கபடமற்ற உருவங்களும், கருத்து வண்ணங்களும், கைவண்ணங்களும் பல முறை பார்க்கும்படி தூண்டுகின்றன.

ஆனால் இந்த மலரைப் பார்க்கும் முன்பே, நம்மை நாம் தயார் செய்து கொள்ள வேண்டும். அதாவது, நாமும் குழந்தையாகிவிட வேண்டும். "அம்மா, இதோ யானை எழுதியிருக்கிறேன், பார்!" என்று கூறிக் கொண்டே தன் குஞ்சுக் கரத்தினால் ஒரு கோடு வரைந்து காட்டும் குழந்தையை ஒரு குழந்தையினால்தான் புரிந்து கொள்ள முடியும். ஐந்துவயது நிரம்பிய குழந்தையிலிருந்து பதின்மூன்று வயதுச் சிறுவர் சிறுமியர் வரையில் "சங்கர்ஸ் வீக்லி" நடத்தும் கட்டுரை, சித்திரப் போட்டிகளில் பங்கெடுத்துக் கொண்டிருக்கின்றனர். இத்தப் போட்டிகளில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு முந்நூற்று இருபது பரிசுகள் வழங்கப்பட்டிருக்கின்றன; அவற்றுள் இருநூற்று எண்பது பரிசுகள் சித்திரங்களுக்கு வழங்கப்பட்டவை; மற்றப் பரிசுகள் எழுத்துக்கு வழங்கப்பட்டவை.

குழந்தைகள் வரைந்த சித்திரங்களையும், எழுதிய கட்டுரைகளையும் பரிசீலனை செய்து முடிவு கூறுவதற்கு என்று இரண்டு நிபுணர் கமிட்டிகள் ஏற்படுத்திப் பரிசுகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

பல நாட்டுக் குழந்தைகள் வரைந்த பலவிதமான சித்திரங்களுடன் கூடிய இத்தகைய ஆண்டு மலரை, "சங்கர்ஸ் வீக்லி" பல ஆண்டுகளாகப் பெருமுயற்சி எடுத்து, மிகவும் சிறப்பாக வெளியிட்டு வருகிறது. இது எட்டாவது ஆண்டு குழந்தைகள் மலர். இம்முயற்சியை, குழந்தைக் குலத்துக்கு அளிக்கும் பெருவிருந்தாகப் பாராட்ட வேண்டும். குழந்தைகளுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு கண்காட்சியைப் பார்ப்பது போல், இந்த மலரைப் பார்ப்பது மிகவும் சுவாரஸ்யமாயிருக்கிறது.

பிரசுரம்: "சங்கர்ஸ் வீக்லி", ஓடியன் பில்டிங்ஸ், புதுதில்லி; விலை: ரூ. 5-0-0.


கோடைகாலத்தில் நீலகிரியின்
குளுமையை உங்கள்
வாசஸ்தலத்திலேயே அடையுங்கள்
டி.எஸ்.ஆர்
சந்தனாதி, அரைக்கீரை விதை
பிருங்காமலகா தைலங்கள்.
டி.எஸ்.ஆர் & கோ., கும்பகோணம்.


அவ்வளவு சிக்கனம்! ஒரு முறை தேய்த்தால்
கால்கேட் டெண்டல் கிரீம்
85% கிருமிகளை ஒழிக்கிறது
COLGATE
COLGATE
DENTAL CREAM
மிகச் சிறந்த பலனுக்கு எப்பொழுதும் உபயோகியுங்கள்
கால்கேட் டூத் பிரஷ்

குட்ஸ்ஷெட்டா? மாட்டுத் தொழுவமா?

[ஒரு கமர்ஷியல் குமாஸ்தா எழுதுகிறார்]

தென் பகுதி ரயில்வேயில் உள்ள குட்ஸ் ஷெட்டுகளெல்லாம் நம் கிராமத்தில் உள்ள மாட்டுத் தொழுவத்தைப் பார்த்துக் கட்ட ஆரம்பித்தார்களோ என்று நினைக்கும் அளவுக்கு இருக்கின்றன. எல்லாவிஷயமும்தெரிந்த ஒருவரோ அல்லது விஷயமே தெரியாதவரோ ஏதாவது சாமான்களைப் பதிவு செய்யவோ அல்லது வந்த சாமான்களை எடுப்பதற்கோ குட்ஸ்ஷெட்டுக்கு வந்தால் பிறர் உதவியில்லாமல் எதையும் செய்ய முடியாது. சரித்திரப் பிரசித்திபெற்ற இடங்களையும், நம் புராதன இடங்களையும் விளக்கிக் காட்டுவதற்கு வழிகாட்டி தேவைப்படுவதுபோல், குட்ஸ் ஷெட்டில் எந்தக் காரியமாக வந்தாலும், புரோசக்கர் ஒருவர் தேவைப்படுகிறது. இதற்குக் காரணம் என்ன? இது நம்பர் வாங்கும் இடம், இது பதிவுசெய்யும் இடம், இது பணம் கட்டும் இடம், இது சாமான்களைப் பெற்றுக் கொள்ளும் இடம் என்ற 'போர்டு' கிடையாது. அதிகம் வளர்த்துவானேன்? இது கடற்கரை குட்ஸ்ஷெட், தஞ்சாவூர் குட்ஸ் ஷெட் என்ற போர்டே கிடையாதே. ஒரு முறை ஒரு ரயில்வே உயர்தர அதிகாரியே எழும்பூர் குட்ஸ்ஷெட் எங்கே இருக்கிறது என்பது தெரியாமல் திகைப்புற்றார் என்றால் பொது மக்களைப் பற்றிக் கேட்பானேன்?

எங்களுடைய வேலை நேரத்தையும் பிற சர்க்கார் ஊழியர்களுடைய வேலை நேரத்தையும் சற்று ஒப்பிட்டுப் பாருங்கள். பொது ஜனத் தொடர்புள்ள பாங்கியிலோ, அல்லது தபாலாபீஸிலோ பணம் வாங்கியும் — கொடுத்தும் வேலையில் ஈடுபட்டிருக்கும் சிப்பந்திகள் காலை பத்து மணியிலிருந்து மாலை இரண்டு அல்லது மூன்று மணி வரையிலும் தான் வேலை பார்க்கின்றனர். பாங்கிகளில் இரண்டு மணியிலிருந்தும், போஸ்டாபீஸில் மூன்று மணியிலிருந்தும் ஐந்து மணிவரையிலும் கணக்கைச் சரி பார்ப்பதற்காக ஒதுக்கப்படுகிறது. ஆனால் ஒரு குட்ஸ் கிளார்க்கோ பார்சல் கிளார்க்கோ அல்லது புக்கிங் கிளார்க்கோ ஒரு நாளைக்கு எட்டரை மணி நேரம் சட்டப்படி செய்ய வேண்டிய வேலையைச் செய்து விட்டுப் பிறகு இரண்டு மணி நேரம் அதிகப்படி வேலை செய்து அந்த நாளின் கணக்கைச் சரிபார்க்க வேண்டும்.

அதாவது ஒரு நாளைக்குப் பத்து அல்லது பதினொரு மணி நேரம் வேலை செய்து கொண்டு வருகிறார்கள். இத்துடன் போதிய சிப்பந்திகள் இல்லாததால் வேலைகளில் ஒழுங்கை நிலை நாட்ட முடியவில்லை. ஒரு சிறு தவறு நேர்ந்தாலும் எங்கள் சம்பளத்துக்கோ அல்லது உத்தியோகத்துக்கோ பெரிய ஆபத்தாக வந்து முடியும். இதர சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு வழங்கப்படும் விடுமுறை நாட்களும் கிடையாது. இந்த மாதிரி வசதிதான் கமர்ஷியல் கிளார்க்குகளாகிய எங்களுக்கு இல்லையே! அதிகப்படி சம்பளமாவது வாங்குகின்றோமா என்றால், அதுவும் இல்லை. அதிலும் ஒரு விநோதம்! சுமார் இருபது வருஷங்கள் வேலை பார்த்துவிட்டு ஆரம்ப கிரேடிலே ரூ. 130 அல்லது ரூ. 140 வாங்கிக் கொண்டிருக்கும் குமாஸ்தாவுக்கு 'உனக்கு 100 — 5 — 185 கிரேடு கொடுக்கப்பட்டு உத்தியோகம் வேறு ஊருக்கு மாற்றலாகியிருக்கிறது!' என்று உத்தரவு வரும்.

சுமார் இருபத்தைந்து அல்லது முப்பது வருஷங்கள் உழைத்துவிட்டு, 50 குமாஸ்தாக்களும் 25 போர்ட்டர்களும் வேலை செய்யும் பெரிய குட்ஸ்ஷெட்டான மதுரை, சேலம் மார்க்கெட், எழும்பூர் போன்ற இடங்களை நிர்வகிக்கும் குட்ஸ் ஸ்டேஷன் மாஸ்டர்களுக்கு அடிப்படைச் சம்பளம் ரூ. 115 தான்! இவர்களுக்கு வாரத்துக்கு ஒரு நாள் கூட ஓய்வு கிடையாது! வருஷம் 365 நாட்களும் வேலை செய்யவேண்டும்.

சென்னை சர்க்கார் என். ஜி. ஓ.க்களைவிட எங்கள் நிலை மிகவும் தாழ்ந்துதான் இருக்கிறது. அவர்கள் அதிகப்படி சம்பளம் பெற்று அதிகாரி ஆவதற்கு நிரம்ப வாய்ப்பு உண்டு. பாரத நாட்டின் ஜீவநாடியான ரயில்வேக்கு 316 கோடி ரூபாயை வசூலித்துக் கொடுத்து ரயில்வே நிர்வாகத்தின் முதுகெலும்பான கமர்ஷியல் கிளார்க்குகளாகிய நாங்கள் மாட்டுத் தொழுவம் போன்றிருக்கும் குட்ஸ் ஷெட்டில், தகரக்கூரை வேய்ந்த கொட்டகையில், மேலே அனல் தகிக்க, பக்கத்தில் அடுக்கி யிருக்கும் மிளகாய் மூட்டையின் நெடி ஏற, எதிரே இருக்கும் கருவாட்டு மூட்டையின் துர்நாற்றம் குடலைப் பிடுங்க, வெய்யில் என்றும், மழை என்றும் பாராமல் உழைக்கிறோம். மரத்தடியிலும் ஓட்டை ஸ்டூலிலும் கை ஒடிந்த நாற்காலிகளிலும் உட்கார்ந்து காலில்லாத மேஜைகளில் எழுதிக் கொண்டு, பெரும்பாலான இடங்களில் குடிக்கக்கூடத் தண்ணீர் இல்லாமல் அதிகப்படி நேரம் வேலை செய்து அவதி யடைகிறோம். ஆனால் சம்பளமோ, கிரேடோ மிகக் குறைவு.

ஆகவே, நாங்கள் வேண்டுவதெல்லாம் ரூ. 60 கிரேடில் பத்து வருஷங்கள் வேலை செய்த பிறகு எந்த ஸ்டேஷனில் வேலை செய்தாலும் ரூ. 100 ஆரம்ப கிரேடும், பதினைந்து வருஷங்கள் உழைத்த பிறகு 150 ரூபாய் ஆரம்ப கிரேடும் இருபது வருஷங்கள் சேவை செய்த பிறகு 200 ரூபாய் ஆரம்ப கிரேடும் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். சர்க்கார் விடுமுறை நாட்களில் வேலை செய்யும் எங்களுக்கு எல்லாத் தொழிலாளர்களுக்கும் வழங்குவதுபோல் இரட்டிப்புச் சம்பளம் கொடுக்கப்படவேண்டும் என்று கோருகிறோம். மேற்பார்வையாளர் என்று கூறப்படும் குட்ஸ் மானேஜர், தலைமை புக்கிங் கிளார்க், தலைமை பார்ஸல் கிளார்க்கு ஆகியோர்களுக்கு வாரத்தில் ஒரு நாள் ஓய்வு அவசியம் கொடுக்கப்பட வேண்டும். இப்பொழுதுள்ள குட்ஸ்ஷெட்டுகளை இடித்துவிட்டுச் சுகாதார முறையில் குட்ஸ் ஷெட்டுகளை நிர்மாணிக்க வேண்டும். தபால், தந்தி இலாக்காவில் கொடுக்கப்படுவது போல இரவு வேலை செய்பவர்களுக்கு 'இரவுப் படி' கொடுக்க வேண்டும். லீவு, பாஸ் முதலிய வசதிகள் வேண்டும்போது, காலம் கடத்தாமல் கொடுக்க வேண்டும்.



இலக்கியச் செல்வம் 27

கவிதை உள்ளத்தின் பரிவு



பேராசிரியர்:
அ. சீநிவாசராகவன்

இளவேனில் வந்ததைப் பற்றி, இளங்கோவடிகள் பாடிய பாடல் ஒன்றைப் போன வாரம் பார்த்தோம் அல்லவா?

செந்தாமரை விரியத் தேமாங் கொழுந்து
ஒழுக
மைந்து ஆர் அசோகம் மடல் அவிழ—
கொந்து ஆர்
இளவேனில் வந்ததால்.

இதுதான் நாம் பார்த்தது. ஆனால் இது பாட்டின் முதற் பகுதி. பாட்டு எப்படி முடிகிறது என்பதைப் பார்க்க வேண்டாமா?

இளவேனில் வந்ததால் என்னுங்கொல்
வளவேல் நற்கண்ணி மனம். [இன்று

[வேல் நற் கண்ணி - வேலைப்போல் கூர்மையான அழகிய கண்களை உடையவள்]

என்ன சொல்கிறார், தெரிகிறதல்லவா? 'ஐயோ, இளவேனில் வந்துவிட்டதே! நாயகனைப் பிரிந்து வருந்தும்பெண் ஒருத்திக்குக் கொடுமையான காலம் ஆயிற்றே! மாதவி,



வேல்போன்ற அழகிய கண்களை உடையவள். அவள் என்னபாடுபடுவாளோ? கண், வேல் போல் கூர்மையாக இருந்தும் என்ன, அவளுடைய மனம் மென்மையான பெண்-மனந்தானே! அது இந்தப் பொல்லாத இளவேனிற் காலத்தில் என்ன ஆகுமோ?' என்று அங்கலாய்க்கிறார் இளங்கோவடிகள்.

இவரோ துறவி. இவருக்கு இதெல்லாம் எதற்கு? வசந்த காலத்தின் அழகிலே பரவசம் அடைகிறார்; கண்ணை அகல விரித்து, பிறகு நாணம் அடைந்து ஒதுங்கி நடக்கும் பெண் ஒருத்தியாகக் காவிரியாற்றைப் பார்க்கிறார். மலர்களால் ஆன மேகலை அணிந்து, அரசி போல, வைகையாறு நடந்து வருகிறாள் என்று அந்த ஆற்றை ஒரு பெண்ணாகக் காண்கிறார். கலியாண வீட்டில் கூட்டமாகக் கூடிக் களிக்கும் பெண்களை, நின்று பார்த்து, அவர்களைப் பற்றி உற்சாகத்தோடு பேசுகிறார். ஒன்று தெரிகிறது. அழகிலே—உலகம் எங்கும் பரந்து பெருகும் வனப்பிலே-அது வசந்த காலமோ, பெண்ணின் முகமோ- இவருக்கு அவ்வளவு ஈடுபாடு. இவரோ உலகத்தோடு தொடர்பை அறுத்துக் கொண்டு ஒதுங்கிய துறவி.

இவருக்கு என்ன அழகைப் பற்றிக் கவலை? பெண்ணின் முகம் இவருக்கு எப்படி இருந்தால் என்ன? ஓடுகின்ற ஆற்றைக்கூட, பெண்ணாகவா இவர் பார்க்க வேண்டும்?

போகட்டும். அதோடு நின்றாரா? இப்போது,

என்னுங்கொல் இன்று
வளைவேல் நற்கண்ணி மனம்

என்று பாடுகிறாரே, இது என்ன முறை? எங்கேயோ காவிரிப்பூம் பட்டினத்தில், மாதவி என்ற பெண், தன் காதலனை கோவலனைப் பிரிந்தாள். அவர்களுக்குள்ளே ஏதோ மனவேற்றுமை. 'இவள் மாய்மாலக்காரி. பொய்யின் இருப்பிடம்' என்று கோவலன் கோபித்துக்கொண்டு, கடுத்தமுகத்தோடுபோய் விடுகிறான். அப்போது வருகிறது இளவேனில். பிரிவைத் தாங்க முடியாமல், மாதவி விரக தாபத்தில் துடிக்கிறாள். துடித்தால்? குணவாயிற் கோட்டத்தில் அரசு துறந்திருந்த இளங்கோவடிகளுக்கு இதில் என்ன அக்கறை?

காரணம் வேறொன்றும் இல்லை. இந்தத் துறவி ஒரு கவிஞர். அதனால்—தான், உலகத்தில் உள்ள பொருள்களில், அழகைத் தேடிக் கொண்டு போகிறார்; அதைக் கண்டு பரவசம் அடைகிறார்; நம்மையும் பரவசத்தில் ஆழ்த்துகிறார். அது மாத்திரம் இல்லை. மக்களுடைய இன்ப துன்பங்களை யாருக்கோ ஏற்பட்டதாக எண்ணி, நமக்கு என்ன என்று இராமல், அவற்றிலே பங்கு கொண்டு, அவற்றைத் தமது அனுபவமாகப் பேசுகிறார். இந்

தப் பேச்சுத்தான் 'சிலப்பதிகாரம்' என்ற காவியம்.

மாதவியின் விரகதாபம் மாத்திரமா, அவள் நடனமாடிய பெருமையும் இளங்கோவடிகள் கவனத்தைக் கவர்கிறது. தனக்கே ஏதோ புதிதாக நாட்டிய அரங்கேற்று விழா நடைபெறுகின்ற பாவனையில், நாட்டிய ஆசிரியர், இசை ஆசிரியர், முத்தமிழ்ப் புலவர், தாள வாத்திய முதல்வர், குழல், யாழ் முதலிய பக்க வாத்தியங்களின் அமைப்பு, நாட்டிய அரங்கின் அமைப்பு, அணிகின்ற உடை, செய்கின்ற பூர்வாங்க வழிபாடு, நடன வகைகள் முதலிய எல்லாவற்றையும் பற்றி, விரிவாக, நுணுக்கமாகப் பேசுகிறார் இந்தக் கவிஞர். மாதவி மாத்திரம் மன்மதன் ஆட்சிக்குக் கட்டுப்பட்டு வருந்தினாள் என்று இவர் நின்றுவிடவில்லை. கோவலனுடைய மனைவியாகிய கண்ணகியும், அவன் அவளைக் கைவிட்டு மாதவியோடு வாழச் சென்றதும், எப்படித் துயர வடிவமாகக் காட்சி அளித்தாள் என்பதைப் பார்க்கிறார். 'காதிலே வளைந்த தோடு இல்லாமல், காது வடிந்து தொங்குகிறது. சந்திரன்போல் இருந்த முகம், உலர்ந்து ஒளி மழுங்கி, சிறு சிறு வியர்வை இழந்தது. மீன்போல் நீண்ட கண்கள் மைதீட்டுவதை மறந்தன. நெற்றியிலே திலகம் இல்லை. கூந்தல் எண்ணெய் கண்டு எத்தனையோ நாள் ஆயிற்று. ஏன்? நெஞ்சம் துயரிலே அழுந்தியது. அதுதான் காரணம். இந்தத் துயர வடிவந்தான் கண்ணகி' என்று பேசுகிறார் கவிஞர்.

கொடுங்குழை துறந்து வடிந்து வீழ் காதினள்,
திங்கள் வாண்முகம் சிறுவியர்ப் பிரிய,
செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்ப,
பவள வாண் நுதல் திலகம் இழப்ப

* * *

மை இருங்கூந்தல் நெய் அணி மறப்ப,
கையறு நெஞ்சத்துக் கண்ணகி

[கொடுங்குழை-வளைந்த குழை என்ற ஆபரணம்; வாண்முகம்-ஒளி பொருந்திய முகம்; சிறுவியர்ப் பிரிய-சிறு வியர்வை பெருகு இருக்க; அஞ்சனம்-மை; கையறு-துயரப் படும்.]

பிரிந்தவர் துயரத்தைப் போலவே, கூடினவர் இன்பத்தையும் பற்றிக் கவிஞர் பேசுகிறார். மன்மதனுடைய ஆட்சி உலகம் எங்கும் அல்லவா நடைபெறுகிறது என்று ஆச்சரியப் படுகிறார்; 'ஒவ்வொரு இடமாகப் பார்த்துக் கொண்டே போனேன், எனக்குத் தெரிந்த தமிழ் நாட்டில்தான். வடக்கு எல்லையாகிய வேங்கட மலை, தெற்கு எல்லையாகிய குமரிக் கடல், இடையிலே மதுரை, உறையூர், வஞ்சிமாநகர், அலை மோதும் புகார், எந்த ஊருக்குப்

போனால் என்ன, எங்கும் இந்த மன்மதன் தான் அரசு வீற்றிருக்கிறான்.

நெடியோன் குன்றமும், தொடியோள்
பௌவமும்
தமிழ்வரம்பு அறுத்த தண்புனல் நல் நாட்டு,
மாட மதுரையும், பீடு ஆர் உறந்தையும்,
கலி கெழு வஞ்சியும், ஒலி புனல் புகாரும்,
அரைசு வீற்றிருந்த......
மன்னன் மாறன்'

[நெடியோன் குன்றம் - திருவேங்கடம்; தொடியோள் பௌவம் - குமரிக் கடல்; பீடு ஆர்-பெருமை பொருந்திய; உறந்தை-உறையூர்; கலி கெழு-ஆரவாரம் நிறைந்த; வஞ்சி-வஞ்சி நகரம், சேரனுடைய தலை நகர்; புகார்-காவிரிப்பூம் பட்டினம்; மாறன்-மன்மதன்.]

இதுபோலவே, மக்களுடைய வாழ்க்கையில், எல்லாத் துறைகளிலும், இளங்கோவடிகள் அக்கறை காட்டுகிறார். காட்டில், வேடர்களோடு, அவர்கள் ஆடும் வேட்டுவ வரியில் பங்கு கொள்கிறார். இடைச்சேரியில் இடையர்களோடு ஆய்ச்சியர் குரவை ஆடுகிறார். மலைச்சாரலில் குன்றக் குறவர்களோடு குன்றக் குரவை கண்டு களிக்கிறார். மதுரை நகரில் உள்ள ஒவ்வொரு முக்கிய வீதிக்கும் நம்மை அழைத்துச் சென்று, அங்கங்கே உள்ள மக்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதைப் பார்க்கிறார். பொது மகளிர் வீதிக்குக் கூட அவர் போகத் தயங்கவில்லை. அங்கே நின்று, கார்காலம் முதலிய ஒவ்வொரு பருவத்திலும், எப்படி இம்மகளிர் தங்களை அலங்கரித்துக் கொள்ளுகிறார்கள் என்பதை உற்று நோக்குகிறார். அரசனுடைய அரண்மனைக்குள்ளும், கடை வீதியிலும், கடற்கரையிலும், கொலைக்களத்திலும் விருப்பு வெறுப்பில்லாமல், சம பாவனையோடு செல்கிறார். பணக்காரன், ஏழை, அரசன், ஆண்டி, துறவி, நல்லோர், தீயோர் எல்லோருடனும் பழகுகிறார். திருடர்களைப் பற்றிய ஆராய்ச்சியில் கூட மதுரைப் பொற்கொல்லனோடும், மன்னனின் காவலாளிகளோடும் ஈடுபடுகிறார்.*

இப்படி, யாரானாலும் சரி, அவர்களுடைய உணர்ச்சிகளோடு ஒட்டி நிற்கும் பரிவு, இளங்கோவடிகளிடம் இருந்தது. இதனால்—தான், கதையில் வரும் ஒவ்வொரு பாத்திரத்தோடும் ஒன்றி, அந்தப் பாத்திரமாகவே பேச, அவரால் முடிந்தது.

கதையில் இடம்பெறுகின்ற பாத்திரங்களில், தலை சிறந்த பாத்திரம் கண்ணகி. கண்ணகி என்றவுடன்—நமக்குத்தான் கோவலன் கதை தெரியுமே-மதுரையை எரித்த கற்புக் கனலியின் காட்சிதான் மனத்திலே தோன்றுகிறது. தன்னு

* சிலப்பதிகாரம் - கொலைக்களக் காதை — 62—211.

அறிவிப்பு

கோடைக்கானல், கூனூர் வாசிகளும், கோடைக்காலத்திற்கு அங்கு செல்வோரும் கவனிக்க:

58-ஜி, மவுண்ட் ரோடு, கூனூர்
பஜார் ரோடு, கோடைக்கானல்
ஆகிய இடங்களில்

சென்னை அரசாங்க

காதி

விற்பனை நிலையம்

நிறுவப்பட்டுள்ளது

○●○

எல்லாவித கதர் ரகங்களும், கதர் பட்டு, கம்பிளி தினுசுகளும், தைத்த சொக்காய்கள் பனியன்கள் முதலிய ரகங்களும் நிர்ணய விலைக்குக் கிடைக்கும்.

எல்லா ரகங்களுக்கும் வழக்கம் போல் 18¾ சத விகிதமும், துணி வகைகளுக்கு 3⅛ சத விகிதம் அதிகப்படியும் விலையில் குறைத்துக் கொடுக்கப்படும்.

சென்னை-2 }
2-4-1957 }

சென்னை அரசாங்கம்
காதி இலாகா

டைய கணவன் கள்வன் இல்லை என்பதை நிலை நாட்ட வேண்டினள் கண்ணகி. கள்வன் என்று தீர விசாரியாமல் முடிவு செய்து, அவனைக் கொலை செய்த பாண்டியன் ஆட்சியையும், அதன் தலைநகரான மதுரையையும் எரிக்க முனைந்தாள் அவள். அரச நீதியிலிருந்து தவறிய வர்களைத் தருமதேவதை தண்டிக்கும், அவர்களுக்கு அறமே கூற்றாகும், தருமமே யமனாக வரும் என்பதைக் காட்டினாள். சீறி எழுந்து மதுரையை எரித்த தருமத்தின் வடிவாக நின்றாள். இந்தக் காட்சிதான், கண்ணகி என்றவுடன் நமக்குத் தோன்றுகிறது.

ஆனால், கண்ணகியைப் பற்றிய முழு உண்மையும் இதுதானா? இல்லவே இல்லை. கணவன் இறந்த பிறகு, அவன் குற்றமற்றவன் என்பதைக் காட்டி, கற்பை நிலை நிறுத்த வேண்டிய கடமை கண்ணகிக்கு ஏற்பட்டது. இதை நிறைவேற்ற அவள் முற்பட்டபோது, கற்பு கனலாக வீசியது, மதுரை எரிந்தது. ஆனால் கணவன் உயிரோடு இருந்த போது, கற்பின் கனிவையே கண்ணகியிடம் நாம் காண்கிறோம்.

தேவந்தி என்ற ஒருத்தி கண்ணகியிடம் போய் 'கணவனைப் பிரிந்து வாடுகிறாயே! காமன் கோயிலுக்குப் போய், அங்கே காமனைத் தொழுதால், உன் நோக்கம் கைகூடும், கணவனோடு கூடி இன்புறலாம். போ, காமனைத் தொழு. உலகத்தில் எல்லோரும் செய்கிறார்கள், நீயும் செய், சுகப்படலாம்' என்கிறாள்.

கண்ணகியின் பதில் என்ன தெரியுமா? இரண்டே வார்த்தை:

பீடு அன்று.

'பெருமை இல்லை' என்று இரண்டே சொற்களில் முடித்து விடுகிறாள் கண்ணகி. கணவனுக்கு அப்பால் ஒரு தெய்வம் இருப்பதாக எண்ணினால் அல்லவா, காமனையோ, சாமனையோ தொழத் தோன்றும்! கணவனைப் பற்றிக் குறைப்பட்டுக் கொள்ளவில்லை; அவன் சித்தம் எதுவோ அதற்கு மாறாக வேறொன்றும் இருப்பதாக எண்ணவும் இல்லை; அப்படி எண்ணுவது கற்புடையவருக்குப் பொருந்துமா, எண்ணினால் பெருமை ஏது? இதுவே கண்ணகியின் முடிவு. பொறுமையும், அடக்கமும், கற்பின் சாயலாக இங்கே விளங்குகின்றன.

கோவலன் வருகிறான். வந்து 'மாதவி என்ற பொய் மகளை நம்பி, செல்வத்தை யெல்லாம் இழந்தேன். ஏழையாகி விட்டேன். வெட்கமாக இருக்கிறது' என்கிறான்.

கண்ணகி, மலர்ந்த முகத்தோடு, மூன்றே வார்த்தைகள் பேசுகிறாள்:


சிலம்பு உள; கொண்ம்.

'சிலம்பு இருக்கிறது. எடுத்துக் கொள்ளுங்கள்.' இவ்வளவுதான் அவள் பேசுவது. ஆனால கற்பின் கனிவு முழுதும் இங்கே வடிவாகி விடுகிறது.

பொறுமையைப் பற்றி, கனிவைப் பற்றி, நீண்ட பிரசங்கம் எதுவும் இல்லை. நாலைந்து சொற்களில், கற்பின் தன்னலமற்ற அடக்கத்தை, இளங்கோவடிகள் நம்மிடம் பேச வைத்து விடுகிறார். இப்படி எத்தனையோ! 'சிலப்பதிகாரம்' என்ற காவியத்தில் இதுபோல எத்தனை, எத்தனையோ!

இதுதான் நாடக முறை என்பது. பாத்திரங்களையே பேசவைத்து அந்தப் பேச்சுக்குள் உணர்ச்சிப் பேருலகங்களை அடக்கிக் காட்டி, மனித உள்ளத்தின் விசித்திரங்களை யெல்லாம் விளக்கும் இந்த முறைதான் நாடகம் என்பது. இது, எல்லா உள்ளங்களோடும் பரிவோடு ஒட்டி நிற்கும் கவிஞன் ஒருவனுக்கே முடியும். இளங்கோவடிகளுக்கு இது முடிந்தது. ஆனால், இவர் துறவியாயிற்றே... அதுவா, இந்தத் துறவியின் மனத்தை அடுத்த வாரம் இன்னும் சிறிது பார்ப்போம். (தொடரும்)

கார் டயர் தேய்ந்து வழுக்கையாவது இயற்கையே



மேலும் மேலும் தேய்ந்தால் அபாயம்.
புதிய டயர் வாங்கும் செலவும் அதிகம்.
சுமார் எட்டு அல்லது பத்தாயிரம் மைல்
ஓடித் தேய்ந்த டயர்களை சுந்தரம்
(T V S) புதுப்பித்து உருவாக்குவார்கள்.
செலவு படிக்குப்பாதி குறைவு. புது டயர்
வாங்கும் அதிகச் செலவை தவிர்க்கலாம்.
விலைவாசி உயர்ந்த இக்காலத்தில் சிக்கன
முறையே சிறந்த முறை. பதினைந்து
வருடங்களில் கோடிக்கோடி மைல்
உழைப்பில் உருவாகிய


TVSZ 95 TM.

முழுவட்ட
மோல்டுகளால்
தயாரிப்பு. டயர் உரு
ணத்தில் [illegible]
(செயற்கையில்) குளிர்ந்த
அறைகளில் பாதுகாக்கப்
படுகிறது. உத்தரவாத
முறை உழைப்பு.

சுந்தரம் TVS புதுப்பிக்கும் முறை

சிக்கனம் பெரிது, உழைப்பும் உயர்ந்தது

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிட்.
(டி. வி. எஸ். ஸ்தாபனம்)
புதுக்கோட்டை சென்னை



கடமையில் சிறந்தவள்

வங்காளிக் கதை: சுபோத கோஷ்


விஷ்ணுபுரத்துக் கோட்டையில் உள்ள அரச மாளிகையின் ஓர் அறையில் வெற்றி வாகை சூடி வரும் மன்னனை வரவேற்பதற்கு ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தாள் அரசி சந்திரப் பிரபா. மங்கள தீபங்கள் சுடர் விட்டன. ஒரு தட்டில் மன்னருக்கு அணிவிக்க வேண்டிய நறுமண மாலை இருந்தது. ஏலம், கர்ப்பூரம்கலந்த வாசனை நீர் ஒரு கலத்தில். மற்றொன்றில் தண்ணிய சந்தனக் குழம்பு. அரசி முகத்தில் புன்னகை தவழ வாசல் படியண்டை வந்து வந்து வழியை நோக்குவாள். எதிரே இருக்கும் பூங்கா ஊடே அவள் கண்கள் நிலைக்கும்; மன்னர் ஏனோ இன்னும் வரவில்லையென்று கலக்கம் கொள்வாள். கூட இருக்கும் தோழிப் பெண்கள் 'உலு உலு' என்று ஊதும் மங்கள சங்கத்தின் மகிழ்ச்சி ஆரவாரம் அரசியின் ஏக்கத்தைப் பின்னும் கிளறி விடும்.


ஹூக்ளிப் போரில் வெற்றி அடைந்து அன்று காலையிலேயே அரசர் ரகுநாத சிம்ஹன் நகர் எல்லைக்குள் வந்து விட்டார் என்ற செய்தியைச் சந்திரப் பிரபா அறிவாள். கோட்டையில் நகார் கானாவில் பேரிகையும் எக்காளமும் வெற்றியின் அறிகுறியாக ஒலித்தன. விஷ்ணுபுரமெங்கும் ஒரே கொண்டாட்டம் என்பது அரசிக்குத் தெரியும். வர்த்தமான் ராஜா ராமகிருஷ்ணன் படுதோல்வியுற்று உயிரையும் துறந்தானென்றும், அவனுடைய மகன் ஜகத்ராம் பெண் வேடம் பூண்டு புறங்காட்டி ஓடியதாகவும், தில்லி டாக்கா ஸுல்தான்களையே நடுங்க வைத்த சோபா சிம்ஹனின் கொற்றத்தையும் ஒடுக்கி, ஹூக்ளியை விட்டே அவனுடைய ஆட்சியை மல்லராஜாவான ரகுநாதன் அடியோடு கெல்லியதாகவும் எங்கணும் பேச்சு. மேதினிபுரத்தைச் சேர்ந்த சந்திரகோணா பர்கணா நாட்டின் குறுநில மன்னனான சோபாசிம்ஹன் தில்லியின் மொகலாயர்களையே பல்லைப் பிடித்துப் பார்த்தவன். ஆலம் கிர் என்ற புகழ்ப் பெயருடன் விளங்கிய அவுரங்கஜேபே அசைந்து போனான். வங்காள ஸுபேதார் (மாகாணத் தலைவன்) இப்ராஹிம்கானுக்கு உள்ளுக்குள் உதைப்பு; ஹூக்ளியின் போஜ்தார் (படைக் காவலன்) கோழையான நூருல்லாகானுக்குத் தொடை நடுங்கியது.



புரட்சியாளனான சோபா சிம்ஹனுக்குத் துணையாக நின்றவன் பட்டாணிய ரஹிம்கான். மொகலாயருக்குத் தலை குனியும் எல்லாச் சிற்றரசர்களையும் ஒடுக்கி, மேதினிபுரத்தையும் வர்த்தமானையும் தன் குடைக்குள் கொண்டு வந்தான் சோபா சிம்ஹன். தில்லியின் பாதுஷாவுக்குத் தூக்கமே இல்லை. எந்தப் பக்கம் பார்த்தாலும் சதிகள், புரட்சிகள், கலகங்கள்; தன் கண் முன்பே விசாலமான மொகல் சாம்ராஜ்யம் சீர்குலைவதைக்கண்டு கிழப் பாதுஷா கண்ணீர் வடித்

மொழிபெயர்ப்பு: த. நா. குமாரசாமி





தான். வங்காளந்தான் மிகத் தொல்லை தந்தது. புதுப் படையுடன், வங்கத்தின் புதிய ஸுபேதாராக அவுரங்கஜேபின் பேரன் ஆஜிம் உஸ்ஸேன் வந்தான்.

ஆஜிம் உஸ்ஸேனின் படை அப்போது மூங்கேர் வரைக்கும் வந்து ஓரிடத்தில் இளைப்பாறப் பாடி இறங்கியது. வர்த்தமானை வளைத்துக்கொண்டு வெற்றி வெறி மூண்ட சோபா சிம்ஹன் ஹுக்ளியின படைத் தலைவன் நூருல்லாவை, வெறும் மிரட்டல் உருட்டலிலேயே அடக்கி விட்டு, ஹுக்ளி கோட்டையை வசப் படுத்திக் கொண்டான். மொகலாயருக்கு உதவியாக நிற்க வேண்டிய சில சிற்றரசர்கள் மெல்லத் தலைமறைந்து விட்டனர். விஷ்ணுபுரத்தின் மல்ல அரசன் ரகுநாதன் ஹுக்ளியிலிருக்கும் உலாந்தா நாட்டு (டச்சு) அதிகாரி இவர்கள் உதவியை நம்பியே மொகலாயப் படை முன்னேறிக் கொண்டிருந்தது. உலாந்தாக்காரர்களின் பீரங்கிகளும், ரகுநாதனின் குதிரை வீரர்களும் ஹுக்ளி கோட்டையில் இருக்கும் சோபா சிம்ஹனைக் கலக்கினர். நள்ளிரவில், கோட்டையின் ஒரு ரகசியத் திட்டி வழியாகத் தன் மெய்க்காப்பாளருடன் ஓட்டம் எடுத்தான் சோபா சிம்ஹன். ஆனால் மல்லர்

அரசன் ரகுநாதன் விடவில்லை. அவனுடைய வீரர்கள் ஓடுபவர்களைத் துரத்திச் சிதறடித்தனர். உயிர் தப்ப ஓடும் சோபா சிம்ஹனின் கூட்டத்தார், உடன் எடுத்துச் சென்ற நிதியங்களையும் அரும் பொருள்களையும் வழியிலேயே விட்டுச் சென்றனர்.

வெற்றியுடன் திரும்பிய ரகுநாதனுடன் எத்தனையோ பொருள்களை ஏற்றிக் கொண்டு வந்த வண்டிகள் விஷ்ணுபுரத்துக் கோட்டையை அடைந்தன. ஜய கோஷத்தினால் கோட்டையின் கல் மதில்களே அதிர்ந்தன. அந்த முழக்கத்தைக் கேட்டு அரசி சந்திரப் பிரபாவின் முகம் ஒளிர்ந்தது. அவள் முகத்தில் சிரிப்பு உலவியது.

சமருக்குப் புறப்படுவதற்கு முன் சந்திரப் பிரபாவிடம் விடைபெறுவதற்கு வந்த ரகுநாதன், ''ராணி! நீ விரும்பும் பொருள் என்ன சொல்லு? உனக்குக் கொண்டு வந்து தருகிறேன்!'' என்று கேட்டான்.

''தாங்கள் உயிருடன் திரும்பி வருவதே நான் அடையும் பெரிய பரிசு!'' என்றாள்.

''வாகைமாலை அணிந்து வரும் கணவனிடமிருந்து நீ பெறக்கூடியது ஒன்றுமே இல்லையா?'' என்றான் ரகுநாதன்.

மௌனமாயிருந்தாள் சந்திரப் பிரபா. சிறிது நேரங்கழித்து, ஒரு மண் பாண்டத்தைக் கொண்டு வந்து அரசனின் கையில் கொடுத்தாள். ''புனித கங்கையின் நீரை இதில் கொண்டு வாருங்கள்!'' என்றாள்.

இதைக் கேட்டு ரகுநாதன் மகிழ்ச்சி எய்தினான். புறப்படுவதற்கு முன் சந்திரப் பிரபா தந்த மண் பாண்டத்தை ஞாபகமாக எடுத்துக்கொண்டு, ''மறக்க மாட்டேன், ஆருயிரே! உனக்காகப் புண்ணிய தீர்த்தமான கங்கை நீரைக் கட்டாயம் எடுத்து வருவேன்!'' என்றான்.

அரசன் திரும்பி வந்து விட்டான். அவன் வந்தும் வெகு நேரமாகிறது. வெற்றி முழக்கமெல்லாம் நின்று விட்டன. தன் அந்தப்புர வாயிலில் சந்திரப் பிரபா நின்று கொண்டிருந்தாள் அரசன் வரவை எதிர்நோக்கி. பூங்காவினூடே அவன் தென்படுவான்; கையில் அந்தப் புனித கங்கை நீர் உள்ள கலசமிருக்கும்; மறக்காமல் தன்னிடம் வருவான் என்று நினைத்தாள். மாணிக்கமோ, ரத்தினப் பூண்களோ எதுவும் அவள் கேட்கவில்லை. சிறிதளவு கங்கை நீர்தான். கணவனுடைய அன்புடன் கலந்த அந்தத் தூய புனலைத் தலை மீது தெளித்துக் கொண்டால், தனக்குச் சௌபாக்கியம் இன்னும் வருமென்று அப்பேதை நினைத்தாள். இதைவிட வேறு என்ன வேண்டுவாள் அந்தப் பதிவிரதை!

அரசன் வருவானே வருவானே எனக் காத்து நின்றாள் சந்திரப் பிரபா. இளங் கதிரவன் உச்சிக்கு ஏறிவிட்டான். கோட்டை எங்கிலும் ஒலியடங்கி விட்டது. அந்த மரக் காவினூடே வடிவழகனை கொழுநனுடைய நிழல் கூடப் படவில்லை. கோட்டை வாசலுக்கு வந்தாள் ராணி, பரபரப்படைந்து. அதற்கு வெளியிலும், சற்றுத் தொலைவு வந்து நின்றாள். செந்நிறப் படுதத் திரை மூடிய வண்டியொன்று கோட்டைக்குள் புகாமல் வேறு வழியாகச் செல்வதைக் கண்டாள்.

அருங்கலங்கள் அணிந்த மெல்லியலாள் மலர் சூடிய கூந்தலாள் ஒருத்தி, அதனுள் மறைந்திருப்பது யாருக்குமே தெரியாது. சந்திரப்பிரபா வண்டியைத்தான் பார்த்தாள். 'அரசன் யாருக்காக இந்தப் பரிசை அனுப்புகிறானோ' என்று ராணி நினைத்தாள்.

ராணியின் கண் முன்பே ரகசியம் நிரம்பிய அந்தச் சகடம் மெல்ல நகர்ந்து சென்றது. தொலைவில் கிருஷ்ணசூடா மரத்தின் பக்கத்தில் புதிதாகக் கட்டியிருக்கும் மாளிகையை நோக்கி அது போவதைக் கவனித்தாள்.

சற்றுப் பொறுத்து அரசியின் பணிப் பெண்கள் அவளைத் தேடிக் கொண்டு ஓட்டமாக வந்தனர். வேலையாட்கள் ராணி எங்கோ புறப்படுகிறாள் என்று எண்ணிச் சிவிகையைக் கொண்டு வந்தனர். அதில் ஏறியதும் அரசி, ''அதோ, அந்த மாளிகைக்குச்செல்லுங்கள்!'' என்றாள், சிவிகை சுமப்போரை விளித்து.

சிவிகை சிறிது தொலைவு சென்றதோ இல்லையோ, இரு கூரிய கணைகள் வந்து குத்தியது போன்ற பெரு வேதனையுடன் சந்திரப் பிரபா விதிர்த்திட்டாள். சிவிகையைச் சட்டென்று நிறுத்தி, தன் கண்ணாலேயே பார்த்தாள், தன் கணவனுடன் ஒப்பற்ற அழகி ஒருத்தி திரை வண்டியிலிருந்து இறங்குவதை. மலர்ப் பின்னையலில் கட்டுண்ட கருநாகக் கூந்தலுடன் விளங்கினாள் அந்த மடந்தை. ரகுநாதன், ஆதரவுடன், அவள் கைப்பற்றி மாளிகைக்குள் நுழைந்தான். பாதி வழியிலேயே சிவிகையைத் திருப்பச் சொல்லி ராணி சந்திரப்பிரபாவும் தன் இடத்துக்கு வந்தாள்.

கங்கை நீரும் இல்லை, ஆசை ராணிக்கான எந்த அருமையான பரிசும் இல்லை. ரகுநாதன் தனக்காக ஒரு பொருளைத் தேடிக் கொண்டு வந்திருந்தான். சோபாசிம்ஹனுடைய காமக் கிழத்தியான அழகுக்குப் பெயர் போன லால்பாயி என்பவளே அந்த விந்தைப் பொருள். ஹூக்ளிதுர்க்கத்திலிருந்து இருட்டில் சென்ற மூடிய பல்லக்கொன்றைத் தடுத்தபோது, தீவட்டி வெளிச்சத்தில் பல்லக்கின் திரை இடுக்கிலிருந்து தொங்கிய கரு நிறச் சுரிகுழல் தென்பட்டது. ரகுநாதனின் உறுதியான நெஞ்சமும் நிலைதடுமாறியது. உள்ளே பதுங்கியிருப்பவள் யாரெனத் தெரிந்தது, கட்டழகி லால்பாயி! இந்தத் துருக்க நங்கையின் இன்குரலையும் நடமிடும் போது அவள் சதங்கை ஒலியையும், அவள்கயற்கண் பிறழ்வையும் கண்டுவானத்து அம்புலிகூட மெல்லத்தான் தாழுமாம். இத்தகைய காமர் வனப்பினளைத் தனக்காக ரகுநாதன் சிறைப்பிடித்துக் கொண்டு வந்து விட்டான். சந்திரப்பிரபா எதிர்பார்த்த கங்கை நீர்க் கலசம் எங்கு உருண்டு கிடந்ததோ யாருக்குத் தெரியும். இந்தப் புது மோகத்தில் அவன் விரும்பிய பொருளை மறந்து போனது அதிசயமே இல்லை. அந்தத் துருக்கப் பெண்ணின் கூந்தல் வலையில் அவன் அறிவு சிக்குண்டு விட்டது.

கரைத்து வைத்த ஆரத்தி அப்படியே கிடந்தது. மங்கள விளக்கு எரிந்து எரிந்து அவிந்து புகை விட்டது. ராணியே தன் கையால் மிடைந்த அலங்கல், தட்டில் வாடி வதங்கியே

போயிற்று. மாலை வெய்யில் இருஞ்ஞருடா மரத்தின்மீது படிந்தது. அந்தி நெருங்கி இருளும் சூழ்ந்தது. அழகு நிறைந்த அரசியின் அறையில் விளக்கே இல்லை.

துயர் மிகுதியில் வரும் கண்ணீரை அடக்கிக் கொண்டு, சந்தியா பூசனைக்காகப் பூக்கொய்யத் தன் உத்தியானத்துள் நுழைந்தாள் சந்திரப் பிரபா. வழிபாட்டை முடித்துக்கொண்டு தன் அறையின் சாளர முகப்பில் வந்து நின்றாள். தொலைவில் அந்தப் புது மாளிகை ஒரே தீபாலங்காரமாகத் தென்பட்டது. அதன் உள்ளே நடக்கும் ஆடலும் பாடலும், 'ஜல் ஜல்' என்ற சதங்கை ஒலியும் மெல்லக் கேட்டன அவள் செவிக்கு.

சந்திரப் பிரபா புரிந்து கொண்டாள், சிறைப் பிடித்து வந்த அந்த வேசி லால்பாயியின் அழகில் தன் கணவன் மயங்கி விழுந்து விட்டானென்று. அவளுடைய கையிலிருந்து அக் கங்கையின் நீரைப் பெறும் பாக்கியமும் அவனுக்கு இல்லாமல் போயிற்று. இது என்ன சாபக் கேடோ? அவளால் பொறுக்க முடியவில்லை; ஆனாலும் சகித்துக் கொண்டாள். வேதனையெல்லாம் உள்ளத்துள் கரந்து. கண்களில் அதன் வாட்டம் வெளிப்படாமல் வளைய வந்தாள். மங்கள விளக்கை அவிந்த நிலையில் வைக்கக் கூடாதென்று உறுதி கொண்டாள். அன்றுதொட்டு ஒரு மாத காலம் வரை நோன்பு கைக்கொண்டாள். கணவன் சாகாமல் வெற்றியுடன் திரும்பினால், இதை அனுஷ்டிக்க அவள் எண்ணியிருந்ததை மறக்கவில்லை. சிரித்த முகத்துடனேயே அதை நோற்க முனைந்தாள். கணவனுக்கு யாதொரு தீங்கும் நேரிடக் கூடாதென்பதே அவள் வேட்டல். தன்னுடைய துயரைக்கூட அவள் பொருட்படுத்தவில்லை.

நாட்கள் சென்றன; சந்திரப் பிரபாவின் வாழ்க்கை ஒவ்வொரு நாளும் வீணாகிக் கொண்டே வந்தது. அரசன் ஒரு நாள்கூட அவளை நினைந்து வரவில்லை. அவனுடைய குரலைக் கேட்கும் பாக்கியம்கூட அவளுக்குக் கிட்டவில்லை.

தெரியுமா உங்களுக்கு?

மனிதரின் கணக்கு தவறி விடக்கூடும். ஆனால் இயற்கையின் கணக்கு தவறுவதே இல்லை. மனிதர் குறித்த காலம் தவறிக் காரியங்களைச் செய்வது உண்டு. ஆனால் சூரியனோ, சந்திரனோ, நட்சத்திரங்களோ ஆயிரம் பதினாயிரம் ஆண்டுகளாக இயற்கையின் கணக்கிலிருந்து இம்மியளவும் வழுவின்றி இயங்கி வருகின்றன.

எண்ணிக்கையற்ற இயற்கை அற்புதங்களில் ஒன்றே ஒன்றை சண்டு எடுத்துக் கொள்வோம். உலகில் தண்ணீர் எங்கு இருக்கிறதோ, அங்கு இயற்கை இடைவிடாது வேலை செய்து கொண்டிருக்கிறது. வெய்யிலோ, காற்றோ தண்ணீரை நீராவியாக மாற்றிக் கொண்டிருக்கிறது. கடல் தண்ணீர் ஆவியாகி, மேகமாகி, மீண்டும் பூமியில் மழையாகப் பெய்து, மறுபடியும் கடலில் சேர்ந்து விடுகிறது. இப்படி ஓயாமல் நடந்து கொண்டிருக்கிறது. இயற்கையின் அந்த அற்புதமான காரியம்தான் பூமியின் செழுமைக்கும் சகல ஜீவராசிகள் உயிர் வாழ்வதற்கும் உதவியாக இருக்கிறது.

உலகில் மக்களின் தேவையைக் காட்டிலும் எத்தனை எத்தனையோ மடங்கு அதிகத் தண்ணீர் ஆறுகளின்



வழியாகச் சென்று கடலில் கலந்து விடுகிறது. ஆறுகளில் செல்லும் அபரிமிதமான தண்ணீரை மக்கள் ஓரளவுதான் கட்டுப்படுத்தித் தங்களுக்கு உபயோகித்துக் கொள்ள முடிகிறது. பல நாடுகளிலும் முக்கிய நகரங்களில் எல்லாம் மக்களுக்கு எப்போதும் உபயோகமாக இருப்பதற்காகத் தண்ணீரைத் தேக்கி வைத்துக் கொள்கிறார்கள். ஆனால் அந்தத் தேக்கங்களிலிருந்து (Reservoir) வருஷந்தோறும் தண்ணீர் ஆவியாக மாறுவதால் ஏற்படும் நஷ்டத்தைக் கணக்கிட்டால் எவரும் பிரமிக்காமல் இருக்க முடியாது. அவ்விதம் தேக்கத் தண்ணீர் நீராவியாக மாறுவதால் எத்தனை கோடி மக்கள் கஷ்டத்துக்கு உள்ளாகிறார்கள்? எத்தனை கோடிக் கணக்கான ஏக்கர் நிலங்கள் காய்ந்து வற்றிப் போகின்றன? என்பதை யெல்லாம் விஞ்ஞானிகள் மதிப்பிட்டிருக்கிறார்கள். பிரம்மாண்டமான நீர்த் தேக்கங்களுக்குக் கூரை போட முடியுமா? கூரை நிர்மாணிப்பதற்கு ஏற்படும் செலவில் ஒரு பகுதியைக்கொண்டு வேறு எங்கிருந்தாவது தண்ணீரையே கொண்டு வந்து விடலாம்! எனவே, தண்ணீர்த் தேக்கத்திலிருந்து நீர் ஆவியாகப் போய் விடாமல் பாதுகாப்பதற்கு விஞ்ஞானிகள் ரசாயனத்தின் உதவியை நாடியிருக்கிறார்கள். ரசாயன முறைகளால் செய்யப்படும் ஒரு வகை 'பிலிம்' போன்ற சாதனத்தைக் கொண்டு மிகக் குறைந்த செலவில் நீர்த் தேக்கத்தை மூடிவிடலாம் என்பதைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஆஸ்திரேலியாவில் அம்முறை பெரும் வெற்றியைக் கொடுத்திருக்கிறது. கிடைக்கும் தண்ணீரைப் பாதுகாத்துக் கொள்ளத் தெரியாமல் "இயற்கை மோசம் செய்துவிட்டது" என்று கூறுவது அறியாமை மாத்திரமல்ல, மன்னிக்க முடியாத குற்றமும் ஆகும் என்று விஞ்ஞான நிபுணர்கள் கருதுகின்றனர்.

இருந்தும் உயிருடன் இருக்கும் வரையில் அவனுடைய நன்மைக்காகவேதான் இந்தக் கடினமான விரதத்தைத் தொடங்கி நடத்த வேண்டுமெனத் துணிந்தாள். சேடியரை அனுப்பி ராஜாவை தன் அந்தப்புரத்தினுள் அழைத்துக் கொள்ள அவள் முயலவில்லை.

அவளைச் சூழ இருப்போர், "தேவி! நீங்கள் இப்படி இருக்கக் கூடாது; துளித் துளியாக இளைத்துப் போகிறீர்கள்" என்றனர். "நான் எப்படிப் போனால்தான் என்ன? என்னால் யாருக்கும் கஷ்டம் இல்லையே" என்றாள் சந்திரப்பிரபா.

ஆனால் ராணியை உருக் குலைத்த கேடு, விஷ்ணுபுரத்தையே விழுங்கக் காத்திருப்பதை யாரால் மறைக்க முடியும்? திடுமென ஒரு நாள் ராணிக்கு அவ்விஷயம் தெரிய வந்தது. அந்திப் பொழுது மங்கியதும், தன் அறையின் சாலேக வாயிலிலிருந்து நோக்கினாள். புது மாளிகையில் இன்பம் கரைபுரண்டோடியது. அங்கே தெரியும் விளக்கொளி அவள் கண்களை உறுத்தியது. இனிமேல் தன்னால் தாங்க முடியாது போல் அரசிக்குத் தோன்றியது.

அன்றைக்கு அவள் கேள்விப்பட்ட செய்தி அவளை உலுக்கி விட்டது. கோட்டைக்குள் இருக்கும் ஆலயத்தில் பூஜையை அரசன் நிறுத்தி விட்டான்! சந்திரப் பிரபாவுக்கு வெளிச்சமாகியது, தன் கணவனை வளைத்துக் கொண்ட அந்தத் துருக்கி மினுக்கி தர்மத்தையும் அழிக்கப் பார்க்கிறாளென்று. அவளுடைய ஊடலைத் தணிப்பதற்கு ரகுநாதன் இஸ்லாம் மதத்தைத் தழுவ இருப்பதாகவும் தெரிந்தது.

இது உண்மையா? இது நடக்கக் கூடியதா? ஒரு வேசியின் விழிவலையில் சிக்கி இப்படிக் கூட வீர ஹம்மீரனின் வமிசத்தில் வந்த ரகுநாதன் மதி இழப்பான்? மதன கோபால சுவாமியின் கோயிலில் இனி மேல் விளக்கு எரியக்கூடாதா? கண்ணன் சன்னிதி முன்பு மிருதங்க ஒலி கூடாதா? இப்படியும் விஷ்ணுபுரத்தின் புகழ் மிகுந்த வரலாறு கடைசியில் ஒரு பரத்தையின் விளையாட்டுக்கு இலக்காகி மாசுபட்டு அழிந்து போகுமோ?

தோழியர் தொடர, ராணி சிவிகையில் ஏறிக் கோட்டைக்கு வெளியே வந்து ரகுநாதனுடைய கேளிக்கை மாடத்துக்கு வந்தாள். அந்த இடத்துக்கு அணித்தாகவே உத்தியான வனத்திலிருக்கும் குளத்தின் படிமீது தன் கணவனும், அந்தத் துருக்கப் பெண்ணும் அமர்ந்திருப்பதைக் கண்டாள் சந்திரப்பிரபா.

சிவிகையிலிருந்து இறங்கி, நடந்தே அவர்கள் இருக்கும் இடத்தை நெருங்கினாள். மயலாகி அரசன் அந்த மோகக்காரியிடம் பிதற்றும் ஒரு பேச்சு சந்திரப்பிரபாவின் செவியில் விழுந்தது. ஒரு மரத்தின் மறைவிலிருந்து கொண்டே கேட்டாள்.

அந்த விதேசி மடந்தையின் கருநீலமான கண்களில் தன் நிழல் விழ அரசன், அவக்கேடான சபதம் செய்வது அவள் செவியில் விழுந்தது. "லால்பாயி, இதோ கை அடித்துச் சொல்கிறேன். இஸ்லாமிய தர்மத்தைத் தழுவுவேன். நான் மட்டுமன்று. என் மனைவி, என் மந்திரி, என் ஆட்கள், என் குடிகள் யாவரும் இந்தப் புனித இஸ்லாமில் புகச்



ஒருவர்:— நம்ம புலவருக்குப் பணமுடிப்பு கொடுக்கப் போகிறீங்களாமே.........அதிலே நானும் பங்கு எடுத்துக்கப் போறேனுங்க!...

மற்றவர்:— அட பாவமே!......அவருக்குக் கொடுக்கிறதே கொஞ்சம்தான். அதிலே நீங்க வேறே பங்கு எடுத்துக் கொண்டால் அப்புறம் அவருக்கு என்ன மிஞ்சும்?......"

செய்வேன். உன் உள்ளத்தைத் திருப்தி செய்வதே என் வாழ்க்கைப் பணி."

உற்சாகம் கொண்டு, லால்பாயி, "இப்பொழுதுதான் தெளிந்தேன். என்னுடைய பூவான மேனியை நீங்கள் உண்மையில் விரும்புகிறீர்கள்.... எனக்கு இனி என்ன குறை? நான் சாகும் வரை உங்களுக்குத் துணைவியாவேன்" என்றாள்.

சந்திரப்பிரபா திரும்பி விட்டாள். அன்று அவள் நோன்பின் இறுதி நாள். மங்கள விளக்கைச் சுடர்விடச் செய்தாள். இரவெல்லாம் பூஜை நடத்தினாள். பின் இரவாயிற்று. துயிலெழும் பறவையின் குரல் கேட்டது. பூஜையிலிருந்து எழுந்தாள் சந்திரப்பிரபா. விளக்கை அணைத்து விட்டு வெளியே வந்தாள். கோட்டையினுள் இருக்கும் தடாகத்தின் குளிர் நீரில் குளித்துவிட்டுத் தன் அறைக்குள் அவள் நுழையும்பொழுது விடிவெள்ளியும், உதய ஒளியில் மறைந்தது.

ரத்தச் சிவப்பான சேலையை அணிந்து கொண்டாள் ராணி. கண்ணாடி முன் நின்று தன் வகிர்ப் பிரிவிலும், நெற்றியிலும் குங்குமம் இட்டுக் கொண்டாள். பாதங்களுக்குச் செம்பஞ்சு ஊட்டினாள். மல்ல ராஜாவான தன் கணவனோடு அவள் முதன் முதல் மங்கள கலசத்தைத் தொட்ட அந்த மணக் கோலத்துடன் விளங்கினாள். ஞாபக மறதியினால் அவள் இவ்வாறு செய்தாளோ என்னவோ?

அன்று பொழுது விடிய விடிய, விஷ்ணுபுரக் கோட்டையைச் சுற்றிலும் ஓர் அதிசயமான பரபரப்பு கண்டது. ராஜா ரகுநாதன் இஸ்லாமிய மதத்தில் புகும் நாள் அது. அவ

னுடைய தூண்டுதலின் பேரில் சிலர் அவ னுடன் புது மதம் தழுவத் துணிந்தனர். அந்தத் துருக்கப் பெண் லால்பாயியின் உத்தர வுப்படி மதமாற்றமானவர்களுக்கு விசேஷ விருந்து உபசரணை செய்ய ஏற்பாடுகள் நடந்துகொண் டிருந்தன. படைத் தலைவர் கள் இந்த விபரீதத்தைக் கண்டு திடுக்கிட் டனர். அமைச்சர்கள் திகைப்புற்றனர்.

அறையினுள் வைத்திருக்கும் மந்திரக் கல சத்தைத் தொட்டு ராணி புறப்படத்தயாராக இருந்தாள். மந்திரியை வரவழைத்தாள்.

"விஷ்ணுபுரம் இப்படியும் சீர்குலைந்து போவதை நீங்கள் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கிறீர்களே?" என்றாள்.

தலைகுனிந்தவாறு அமைச்சரும், "உங்க ளுக்காகத்தான் பார்க்கிறோம், தாயே! எங்களால் பொறுக்க முடியவில்லை" என்றார்.

"இதன் அர்த்தம் என்ன?"

"நீங்கள் கண்ணீர் விடும்படி நேரிடுமே என்றுதான் நாங்கள் எதையும் செய்ய முடி யாமல் இருக்கிறோம்" என்றார் அமைச்சர்.

"என்ன செய்வதாக இருந்தீர்கள்?"

"முடிவாக இதைத் தீர்ப்பதென்று...."

"அப்படியே செய்யுங்கள். இதற்காக என் கண்கள் நீர் சிந்துவதை நீங்கள் பார்க்க மாட்டீர்கள்" என்றாள் அரசி.

இதை நம்பாமலோ அல்லது வியப்பின் மேலீட்டாலோ, அமைச்சர் ராணியின் முகத்தையே நோக்கினார். ஆகா! என்ன பயங்கரமான துணிவு கொண்டாள் ராணி அம்மாள்? அவள் வாயினும் இப்படி வந்ததே? அவள் நெற்றியில் சிவப்புப் பொட்டு ஒளிர்ந் தது. தன் வாயில் வந்த சொல்லுக்குரிய பொருளை அரசி உணரவில்லையோ?

"பிரமையல்ல மந்திரி, அவநம்பிக்கை கொள்ளாதீர் என்னிடம். என் நெற்றியில் குங்குமம் அழிந்து போவதாயிருந்தாலும் விஷ்ணுபுரத்தை, நாட்டின் கௌரவத்தைக் காத்தே தீருவேன்" என்றாள் அரசி.

புது மணக்கோலத்துடன் திகழும் சந்திரப் பிரபாவின் விழிகளில் அழல் தோன்றியது. மந்திரி சற்று நேரம் அசையாமல் நின்றார். அவர் தலை வணங்கி, "உத்தரவு தாரும் அம்மணி. அவ்வாறே செய்கிறேன்" என்றார்.

"உத்தரவு தந்தேன்" என்றாள் அரசி.

படைக்கலம் ஏந்திய, நம்பிக்கையான சில வீரர்கள் அரசன் இருக்கும் புது மாளிகைப் பக்கம் விரைந்தனர். சிறிது பொழுதுக் கெல்லாம் விகாரமான கூச்சல் கோட்டை எங்கும் எதிரொலித்தது. அரசி சந்திரப்பிரபா கோட்டையின் கோபுரத்தின்மீது நின்ற வண்ணம், நிழல்போல் பலர் அரசனுடைய விடுதியில் நுழைவதைப் பார்த்தாள்.

வாட்கள் மின்னின; அரசன் ரகுநாதனும் அந்தத் துருக்கப் பெண் லால்பாயும் அலறும் குரலை, கிருஷ்ணகூட மரம் மோன சாட்சி யாக நின்று இத்தனை நாள், அங்கே நடந்த பல அட்டூழியங்களைக் கவனிப்பது போல் பார்த்துக் கொண்டு நின்றது. அரசி, தன் காதைப் பொத்திக் கொண்டாள்; அவள் கண்களைக் கொட்டவும் மறந்தாள். கற் பனையில் அங்கே நடந்ததை ரஸித்துக் கொண் டாள். கிங்கரர்கள் தன் கணவனையும் அவனை மயக்கியவளையும் தீர்த்துவிட்டு அந்த வேசியின் உடலைக் குளத்தில் எறிந்துவிட் டிருப்பார்கள்; அதன் நீர் ரத்தச் சிவப்பாக மாறிப் போயிருக்கும்.

அரசன் ரகுநாதனுடைய உடலை, அந்தப் புது மாளிகையிலிருந்து சுமந்து வந்து கோட் டையின் கோயில் எதிரே வைத்தனர். பின்னர் மாளிகையிலிருக்கும் குலதேவதையின் சந்நிதி முன்பு கொண்டு வந்தனர். ராஜபுரோகிதன் இறந்த அரசனுக்குச் சந்தனத்திலகமிட்டான். ராணி தன் அறையிலிருந்தே பார்த்தாள். அரசனுடைய சடலத்தை 'ஹரி' கோஷத்துக் கிடையே கோட்டை வாயிலைக் கடந்து மயா னத்துக்குத் தூக்கிச் சென்றனர். ராணி, இதைக் கண்டு சற்றும் கலங்கவில்லை.

சிதை அடுக்கி ஆயிற்று, சந்தனக் கட்டை களால். ராஜ புரோகிதர் அரசன் சடலத்தரு கில் வந்து நின்றார். படை வீரர்கள் மௌன மாகச் சுற்றிலும் கவிந்து இருந்தனர். ஒவ் வொருவர் முகத்திலும் துயரின் நிழல்; ஆனால் மரித்த அரசன்மீது அனுதாபமே இல்லை.

சிதைக்கு நெருப்பிடப் புரோகிதர் ஆட்களை ஏவும்பொழுது அவர் திடுக்கிட்டு நின்றார். புதுமணப் பெண்போல் அரசியே தன் கணவ னுடைய சிதையின் பக்கலில் வந்து நின்றாள்.

"நீங்கள் எதற்காக இங்கே வந்தீர்கள், அம்மா?" என்றார் மந்திரி.

சந்திரப்பிரபா சிரித்தாள்: "இங்கே வரா மல் நான் எங்கே செல்வது?"

மந்திரிக்குப் புரியவில்லை அவள் கருத்து. தன் கணவனையே கொல்லத் தூண்டி, கைம்மை பூண்ட இக் கடின நெஞ்சினள், வாழ்க்கை முழுவதும் அவ்வாறே காலங் கழிக் கட்டுமே! அவளுக்கு இங்கே என்ன வேலை?

"நான் பதியைக் கொன்ற பாதகிதான். ஆனால் கணவனுடன் உடன் கட்டை ஏற எனக்குப் பூரண உரிமை உண்டு" என்றாள்.

புரோகிதர் வியப்புற்று, "உண்டு" என்றார்.

அரசனுடைய கால்களைத் தன் தலை மீது வைத்து வணங்கினாள் அரசி. "எனக்கு விடை தாருங்கள். பதியைக் கொன்ற மாபாவியை அனுப்புங்கள்" என்றாள்.

சிதை மீது ஏறி, சந்திரப்பிரபா தன் கணவன் பக்கலில் படுத்தாள். அழுகுரலுடன் வந்தவர்கள் நாற்புறமும் சிதைக்கு நெருப்பு வைத்தனர். புகை கருண்டெழுந்தது. சுடர் விட்டெரிந்ததும் சாம்பராகியது.

அதே கிருஷ்ண கூட மரம் இந்த அதிசயத் துக்கு மௌன சாட்சியாக நின்றிருந்தது. எரிந்து சாம்பரான கடலை அருகில் அகல் விளக்கு ஒன்று அந்தி வேளையில் யாரோ ஏற்றி வைத்தனர். அதன் ஒளி அணைந்ததும் கோட்டையில் பேரிகை முழங்கியது. விஷ்ணுபுரத்தின் புதிய அரசன் கோபால சிம்ஹன் அரியணை ஏறும் ஆனந்த விழாவின் ஒலியே அது.

அந்த மயில் கொன்றை மரம் இன்று அந்த இடத்தில் இல்லை. பதியைக் கொன்ற அந்தப் பத்தினியை விஷ்ணுபுரத்தில் இன்றுங்கூட யாரும் மறக்கவில்லை. அந்த அழகிய துருக்கப் பெண் லால்பாயியின் உடல் மூழ்கிய அக் குளத்து நீர் வற்றி யாருமே பார்த்ததில்லை. அன்றையநிகழ்ச்சியின் நினைவுகள் காற்றுவீசும் போதும், சிற்றலைகளாக அதன் நீரில் வெயி லிலும், நிலவிலும் அசைந்து பளபளக்கும்.


உங்களுக்குத் தெரியுமா?
ஹத்திபாயின் 'தராசு மார்க்'
ஸ்டெயின்லெஸ்
ஸ்டீல் பாத்திரங்கள்
சிக்கனமானவை
நீடித்துழைப்பவை
பளபளப்பானவை
உத்தரவாதமுள்ளது!
ஹத்திபாயின்
தராசு மார்க்
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள்
ஹத்திபாய் துள்சிதாஸ் & சன்ஸ், பம்பாய்-2.

வாழை மரம்

★★★

வாழைமரம், வாழைமரம்
வழவழப்பாய் இருக்கும் மரம்

சிப்புச் சிப்பாய் வாழைப்பழம்
தின்னத்தின்னக் கொடுக்கும் மரம்

பந்தி வைக்க இலைகளெலாம்
தந்திடுமாம் அந்த மரம்

காயும் பூவும் தண்டுகளும்
கறிசமைக்க உதவும் மரம்

கலியாணப் பந்தலிலே
கட்டாயம் நிற்கும் மரம்

அழ. வள்ளியப்பா




மிருங்காவதி
சித்திரத் தொடர்கதை
15
1 பளிஞன் மகள் சுகந்தி இந்தக் காட்சியைக் கண்டாள்.
ஆ!
2 அவள் வீறிட்டு அழுதவாறு மரணப் படுக்கையில் கிடந்த தன் தந்தையின் காலடிகளில் போய் விழுந்தாள்.
3 தாலிப்பிச்சை அருளுங்கள்!
4 அவள் தாயும் வற்புறுத்திக் கூறவே, காலனை எதிர்பார்த்துக் கொண்டிருந்த பளிஞனின் கல்நெஞ்சம் கூடக் கரைந்தது. மகளை மகிழ்ச்சி பொங்கும் முகத்துடன் காணத் துடித்தது.
5 தேவிதத்தனை விடுவித்து மரியாதையோடு அழைத்து வா! போ சீக்கிரம்!
6 ஆ! நிஜமாகவா?
7 பளிஞனுக்கு ஆண் வாரிசு இல்லாததனால், தேவிதத்தனையே தன் கிராமத்துத் தலைவனாக ஆக்கினான்.
நீதான் இனி இந்தக் கிராமத்துக்கும் சுகந்திக்கும் தலைவன்!
9 தேவிதத்தனை உதவிக்காக விரைந்து வந்த விகடபாயா, தேவிதத்தன் எவ்வித ஆபத்துக்கும் இலக்காகாமல் பளிஞன் வீட்டில் இன்பமாக வாழ்வதைக் கண்டார்.
10 தேவிதத்தனும் விகடபாயாவும் உரையாடிக் கொண்டிருந்த பொழுது கையும் களவுமாக ஒருவனைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள், சில பளிஞர்கள். அவனிடம் பல நகை நட்டுகள் இருந்தன. அவையெல்லாம் மதுரை மன்னரான சூரசேனரது அரண்மனைப் பொருள்கள் என்று ருசுவாகியது.
விகடபாயா



நான் மதுரை சேர்ந்ததும் உனக்கு உதவிக்குப் படை அனுப்புகிறேன்!
இவ்வாறு கூறிவிட்டு விகடபாயா விடை பெற்றுக் கொண்டார்.
யார் நீ?
பனிநூர் படைத்தலைவன் அவன் யாராவது ஒற்றனாயிருக்கலாம் என்று எண்ணிக் கைது செய்து தேவிநந்தனிடம் கொண்டுபோய் நிறுத்தினான்.
ஆ! யாரது? சாரங்கனா?
ஜே!
உன் மனத்தில் உள்ளதைச் சொல்லியிருந்தால் நான் மறுத்திருப்பேனா? எதற்காக அம்மா இப்படியெல்லாம் கஷ்டப்பட்டிருக்க வேண்டும்?
தந்தையே! எல்லாம் விதியின் விளையாட்டு!
முற்றும்!



மாயப் பந்து

5. மாய மாளிகை

ரவி மழை வருவதற்குள் தான் நனையாமல் தப்பிக்க ஏதாவது வழி உண்டா என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சமயத்தில் அப்பொழுது அடித்த காற்று அவனுக்கு மிகவும் உதவி செய்தது. ஆகாயத்தில் பகல் நேரத்தைப் போல ஒரு இடத்தில் வெளிச்சம் தென்பட்டது அல்லவா? அதை நோக்கியே காற்றின் உதவியால் ரவி ஆகாயத்தில் மிதந்து கொண்டு போனான். பிரகாசமான விளக்குகள் இருந்த இடத்துக்குச் சமீபத்தில் போகப் போக அவனுக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. ஏனென்றால் அவன் எதிரில் பளபளவென்று பளிங்குக் கற்களினால் கட்டப்பட்ட ஒரு பெரிய பங்களா ஆகாயத்தில் தோன்றியது. 'இது என்ன ஆகாயத்திலே ஒரு பெரிய பங்களாவா? அஸ்திவாரமே இல்லாமல் ஒரு மாளிகையா! இதற்குள் யார் வசிப்பார்கள்?' என்று அவன் நினைத்துக் கொண்டிருக்கும் பொழுது அவனை அறியாமல் காற்று ஆகாய பங்களாக்குள் தள்ளிற்று. உட்புறச் சுவரில் போய் அவன் உடல் மோதிற்று. உடனே ரவி அவசரம் அவசரமாகத் தன் பையிலுள்ள பந்தை எடுத்து, 'நான் பறந்தது போதும். இனிமேல் நான் இந்தப் பங்களாவில் உடனே தங்கும்படி செய்' என்று அதைப் பங்களாவின் வெளித் தாழ்வாரத்துக் கல்லில் போட்டுப் பந்து எழும்பியவுடன் பிடித்துக் கொண்டான். பந்தைப் பையில் போட்டு விட்டு, "அப்பாடி பிழைத்தோம். ஆகாயத்தில் ஒரு பங்களாவைக் கட்டி அவசர புத்தியுள்ள என்னைக் காப்பாற்றினானே. அவனை உடனே பார்த்து என் வந்தனத்தைத் தெரிவிக்க வேண்டும்" என்று சொல்லிக் கொண்டே உள்ளே யார் இருக்கிறார்கள் என்று எட்டிப் பார்த்தான்.

எதிர் பாராமல் ரவியைப் பார்த்த கலா, "ரவி,ரவி" என்று உரத்துச் சப்தமிட்டாள். உடனே ரவி "கலாவா? என்ன அதிசயம்! நீ எப்படி இங்கே வந்தாய்?" என்று கேட்கவே, கலா சற்றுப் பயந்து பேசமுடியாமல் தயங்கி நின்றாள். பிறகு, சற்றுப் பொறுத்துத் தான் அந்த மாளிகைக்கு வந்த விதத்தைப் பற்றிச் சுருக்கமாகக் கலா சொன்னாள். தானும் எப்படி அங்கு வந்து சேர்ந்தான் என்பதைச் சொல்லி முடித்தான் ரவி.

அச்சமயத்தில் அவர்கள் எதிரில் கார்குர் தோன்றினான். அவன் தோற்றத்தைப் பார்த்தவுடன் ரவி நடுங்கினான். உடனே கார்குர் "என் மாளிகைக்கு எனது உத்தரவு இல்லாமல் எப்படி வந்தாய்? நீ யார்?" என்று கேட்டான்.

ரவி தைரியமாக "என் தங்கை கலாவை அழைத்துப் போகவே வந்தேன்" என்று பதிலளித்தான்.

ராஜி




"ஓஹோ! அப்படியானால் இப்பொழுதே உன்னுடைய தங்கை கலாவிடமுள்ள பறக்கும் ஜமக்காளத்தை எப்படி உபயோகிப்பது என்பதை மாத்திரம் சொல்லிவிடு. உங்கள் இருவரையும் காப்பாற்றுகிறேன்" என்று கார்குர் சொன்னான். அதற்கு முடியாது என்று சொல்லுவதுபோல ரவி தலையை அசைத்தான். "முடியாதா? உங்களை இப்பொழுது என்ன பண்ணுகிறேன் பார்!" என்று மந்திரக்கோலைத் தன் கையில் வரவழைத்தான். "நீங்கள் இரண்டு பேரும் உடனே சிட்டுக் குருவிகளாக மாறுங்கள்" என்று ஏதோ பலமாக மந்திரங்களை உச்சரித்துவிட்டு, அவர்கள் இருவரையும் நோக்கி மூன்று முறை மந்திரக் கோலைச் சுற்றினான்.

மந்திரவாதி எதிர்பார்த்ததைப் போல் ரவியும் கலாவும் சிட்டுக்குருவிகளாக மாறவில்லை. மந்திரவாதி கார்குருவை ஏளனமாகப் பார்த்துக் கொண்டே அவர்கள் நின்று கொண்டிருந்தார்கள். அவமானம் அடைந்த கார்குர் கோபத்தினால் கத்தினான். "இந்த மந்திரத்திலிருந்து தப்பலாம்! உங்களிடம் உங்கள் தகப்பனார் கொடுத்து உதவிய மந்திர சக்தி உதவி செய்யலாம். இப்பொழுது பார். உங்கள் தகப்பனார் மீது உள்ள வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ளுகிறேன். உங்களிடமுள்ள மந்திர ஜமக்காளத்தை நான் எளிதில் அபகரிக்க முடியும். ஆனால் அப்படிப் பலாத்காரமாகவும், நீங்கள் ஏமாந்து இருக்கும் பொழுதும் பெறுபவன் நான் அல்ல. என் மந்திர சக்தியினால் கட்டிய இந்தப் பங்களாவை அரை நொடியில் மறைய வைக்கிறேன். உடனே நீங்கள் இரண்டு பேரும் கீழே விழுந்து இறக்க வேண்டியதுதான்" என்று கூறி அவ்விடத்தை விட்டு மறைந்தான்.

கார்குர் மறைந்தது தான் தாமதம்; கலா அவசரம் அவசரமாக மந்திர ஜமக்காளத்தைப் பிரித்து முத்து மாலையைக் கழுத்தில் போட்டுக்கொண்டாள். கலாவுக்குப் பின்னால் ரவி தாழ்வாரத்தில் விரித்திருந்த மந்திர ஜமக்காளத்தில் உட்கார்ந்தான். அடுத்த விநாடி ஆகாயத்தில் கட்டப்பட்டிருந்த பங்களா மறைந்தது. கலாவும், ரவியும் வெகுவேகமாக மந்திர ஜமக்காளத்தில் பறந்து சென்று கொண்டிருந்தார்கள். கார்குர் பூமியில் வெகு ஆவலுடன் கீழே விழப்போகும் கலாவையும் ரவியையும் பார்த்துக் கொண்டே நின்றான். கீழே விழாமல் போகவே மேலே பார்த்தான். மந்திர ஜமக்காளத்தில் பறந்து சென்று கொண்டிருந்த ரவியையும், கலாவையும் காணவே, "அடாடா, அவசர புத்தியினால் அவர்களைத் தப்பிச் செல்ல விட்டுவிட்டேனே! இருக்கட்டும், என்னை விட்டு இவர்கள் எங்கே போகப் போகிறார்கள்? நான் இல்லாவிட்டாலும் என்னுடைய பல சீடர்கள் எங்கே போகிறார்கள்? இப்பொழுதே எல்லோருக்கும் மால்மாவினுடைய மகன், மகள் இவர்களைப்பற்றிச் சொல்லி அனுப்பினால் அவர்களும் பார்த்துக் கொள்ளுகிறார்கள்" என்று தலை குனிந்தவாறே சொல்லிக் கொண்டு போனான்.

மந்திர ஜமக்காளத்தில் பறந்து சென்ற ரவியும், கலாவும் பயத்தினால் பேசாமல் சென்று கொண்டிருந்தார்கள். எங்கே மறுபடியும் கார்குர் தங்களைப் பின்பற்றி வந்து விடுவானோ என்ற திகில் அவர்கள் மனத்தில் குடி கொண்டிருந்தது.

வெகுதூரம் ஆகாயத்தில்பறந்துசென்



றதும் ரவி எங்கேயாவது கார்குர் பின் தொடர்ந்து வரப்போகிறானோ என்ற பயத்தினால் திரும்பிப் பார்த்தான். ஒருவரும் காணப்பட வில்லை. பிறகு தைரியம் அடைந்து தன் தங்கை கலாவிடம் கார் குருவைப் பற்றிச் சொல்லுவதற்காக, "கலா! கார்குர்......" என்று சொல்லுவதற்குள் எதிர்பாராத சம்பவம் ஒன்று நடந்தது. கலா தன் மனத்தில் கார்குருவைப் பற்றியே சிந்தனைசெய்து திகில் அடைந்திருந்ததால் தன் அண்ணா தன்னைக் கூப்பிட்டுக் 'கார்குர்' என்று வார்த்தையைச் சொன்னது தான் தாமதம், பயந்து தன் கழுத்தில் உள்ள முத்து மாலையினின்று தன் கையை எடுத்துவிட்டாள்.

கலா முத்துமாலையிலிருந்து தன் கையை எடுத்தவுடன் முத்து மாலை கீழ் நோக்கிக் கலாவின் கழுத்தில் படிந்தது. அதன் விளைவு அடுத்த நிமிஷம் பறக்கும் ஜமக்காளம் மேலே பறக்காமல் கீழ் நோக்கி 'விர்' என்றுஇறங்கியது. பூமியில் அதிர்ச்சியுடன் விழுந்தது. சற்று நேரம் ரவிக்கும், கலாவுக்கும் திடீர் என்று ஏற்பட்ட அதிர்ச்சியினால் ஒன்றும் தோன்றாமல் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"அண்ணா, கார்குர் வந்து விட்டான் என்று நீ சொல்லுவது போல இருந்தது. அந்தப் பயத்தினால் ஏற்பட்ட விளைவு இது. இனிமேல் நான் அவசரப் படாமல் ஜாக்கிரதையாக இருக்கிறேன்" என்றாள் கலா.

உடனே ரவி, "நீதெரியாமல்செய்தபிழை தானே இது? ஏதோ கடவுள் கிருபையினால் நாம் இருவரும் காயம்படாமல் தப்பினோம். ஆனால் நாம் இப்பொழுது ஒரு பெரிய காட்டின் மத்தியில் அல்லவா இருப்பது போல் தோன்றுகிறது? இதை விட்டு உடனே கிளம்பிவிடலாமா?" என்று கேட்டான்.

கலா, "அண்ணா! நீ சொல்லியபடி கிளம்ப வேண்டியதுதான். ஆனால் நாம் இறங்கி வரும் பொழுது கதையில் படித்திருப்போமே, அதைப் போலச் சித்திரக் குள்ளர்கள் நீண்ட தாடியுடனும், ஒரு விதமான வெள்ளைத் தொப்பியுடனும் காணப்பட்டார்கள். நம்மைக் கண்டதும் அவர்கள் வேகமாக ஓடினார்கள். அவர்களைப் பின்தொடர்ந்து ஒரு கிழவியும் ஓடியதுபோலத் தோன்றுகிறதே! அதைக் கவனிக்க வேண்டாமா?" என்றாள்.

"கலா, பயப்படாதே. நீ முத்து மாலையைக் கழற்றிவிட்டு, ஜமக்காளத்தையும், முத்து மாலையையும் பையில் போட்டுக் கொள். கொஞ்ச தூரம்போய் ஓடினவர்கள் எங்கே என்று பார்த்து விட்டு, முடியுமானால் அவர்களுடைய சிநேகத்தையும் சம்பாதித்துக் கொள்ளலாம். எதற்காக நம்மை வெளியிலே அப்பா அனுப்பி இருக்கிறார்? தமாஷாகப் பறக்கும் ஜமக்காளத்தில் பறந்து செல்லுவதற்கா? இல்லை, பல பேர்களைச் சந்தித்து இன்ப துன்பங்களை அனுபவித்து நல்ல அனுபவம் பெறவே அனுப்பி யிருக்கிறார். பயப்படாமல் என்னுடன் வா" என்று ரவி சொன்னான். கலா மந்திர ஜமக்காளம் இருக்கிற பையைத் தோளில் மாட்டிக்கொண்டு சென்றாள்.

ரவி ஓடிச் சித்திரக் குள்ளர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டே போனான். கொஞ்ச தூரம் சென்றவுடன் மேலே போக முடியாமல் சற்றுத் தயங்கினான். ஏன் என்றால் நடக்கும் பாதையிலே நடுமத்தியில் ஏழு மரங்கள் இருந்ததுதான் காரணம்.

"கலா, இந்த ஏழு மரங்களைப் பார்த்தால் ஒவ்வொரு மரமும் ஒரு மனிதனைப்போல அல்லவா தோற்ற மளிக்கிறது!"

"அண்ணா, ஒவ்வொரு மரத்தின் மீது இருக்கும் வெள்ளைக் குல்லாயைப் பார்த்தால் நம்மைக் கண்டவுடன் ஓடிய சித்திரக் குள்ளர்கள் அணிந்து கொண்டிருந்த குல்லாய்களைப் போல அல்லவா தோன்றுகிறது? ஒரு வேளை நாம் பார்த்த சித்திரக் குள்ளர்களை யாராவது மந்திரவாதி மரங்களாக மாற்றி விட்டானோ!"

"அப்படியானால் அப்பா கொடுத்த மாயப் பந்தை உபயோகித்து இவர்களை மீண்டும் உயிர் பெறும்படி உதவி செய்யலாமா?"

"அண்ணா, மரமாக மாறி இருப்பவர்கள் நல்லவர்கள் என்று எப்படித் தெரியும்? அவர்கள் கொடியவர்களாயிருந்து உயிர் வந்ததும் நமக்குத் தீங்கு இழைத்தால்...?"

"உபகாரம் பண்ணினவனுக்கு அபகாரம் செய்தால் செய்யட்டுமே. அதற்காக நம் கடமையைச் செய்யாமலிருக்க முடியுமா?" என்று கூறிக் கொண்டே தன் பையிலிருந்து பந்தை எடுத்தான். பிறகு "ஏ மாயப் பந்தே! என் எதிரில் வெள்ளைக் குல்லாய்களுடன் இருக்கும் ஏழு மரங்கள் சற்று முன்புதான் மனித சொருபத்தில் இருந்தன. மரங்களாக யாருடைய மந்திரத்தினாலாவது மாற்றப் பட்டிருந்தால் அவர்களை மறுபடியும் முன் போல உயிர் பெறச் செய்வாய்" என்று சொல்லிக் கொண்டே மாயப் பந்தைக் கீழே பூமியில் போட்டுப் பந்து எழும்பிய உடன் கையில் பிடித்துக் கொண்டான்.

என்ன ஆச்சரியம்! மாயப் பந்து ரவியின் கைக்கு வந்த உடன் ரவிக்கு எதிரில் ஏழு மரங்களுக்குப் பதிலாக வெள்ளைத் தொப்பிகளுடனும் நீண்ட மீசை தாடியுடனும் ஏழு சித்திரக் குள்ளர்கள் தோன்றினார்கள்.

உயிர்பெற்ற சித்திரக் குள்ளர்கள் ரவியைத் தழுவிக் கொண்டார்கள். "நீங்கள் செய்த உதவியை மறக்க மாட்டோம். வாருங்கள் எங்கள் குடிசைகள் இருக்கும் இடத்துக்குப் போகலாம்" என்று அவர்கள் அழைக்கவே, ரவியும் கலாவும் அவர்களைப் பின் தொடர்ந்தார்கள். (தொடரும்)

'அனஸின்'

வலியை வெல்லுவதற்கான
நான்கு மருந்துகளின் கலப்பாகும்

1. க்வினையின் சல்பேட் 2. காப்பின்
3. பினஸிடின் 4. ஆஸிடில்ஸாலிஸிலிக் ஆஸிட்

வலிகளுக்கு நிவாரணமளிப்பதில் புகழ் பெற்ற 'அனஸின்' விஞ்ஞான முறையில் சேர்க்கப்பட்ட நான்கு மருந்துகளின கலப்பாகும். இவைகள் நரம்புகளின் கேந்திர ஸ்தானங்களில் கூட்டாக வேலை செய்து, தலைவலி, ஜலதோஷம் ஜுரம், பல்வலி, மற்றும் தசைவலிகளுக்குத் துரிதமாயும் அபாயமின்றியும் நிச்சயமாயும் நிவாரணம் அளிக்கிறது. வலிகளுக்குத் துரிதநிவாரணமளிப்பதில் அனஸினுக்கு இணையொன்றில்லை... அனஸினைப் போல் தீங்கு விளைவிக்காத வில்லை வேறொன்றில்லை. ஆகவே ஞாபகமிருக்கட்டும் 'அனஸின்' ஒரு டாக்டரின் குறிப்புக்கு ஒப்பாகும். அது இருதயத்திற்குத் தீங்கு விளைவிக்கவோ அல்லது வயிற்றுக் கோளாறுகள் உண்டு பண்ணவோ செய்யாது. 'அனஸின்' லக்ஷக்கணக்கான மக்களுக்கு நிவாரணம் அளிக்கிறது. 'அனஸின்' விலை ஒவ்வொருவர் சக்திக்கும் ஏற்றது. ஒரு பாக்கெட்டின் விலை அணு 2 மட்டுமே

நான்கு
மருந்துகளின்
சேர்க்கையான
'அனஸின்'
வேண்டுமென்றே
கேளுங்கள்



V. 102.



நீதிபதி :—ஏன் விவாகரத்து கோருகிறாய்? உன் கணவர் உன்னை விரும்பவில்லை என்று எதிலிருந்து கூறுகிறாய்?

ஸ்திரீ :—அவர் வீட்டுக்கு வந்து ஏழு வருஷங்களுக்கு மேலாகிவிட்டது.

★

டாக்டர் (சித்திரக்கார நண்பரிடம்):—



தங்கள் வீட்டில் தொங்கும் இந்தச் சித்திரங்களெல்லாம் விலை போகாத தோல்விச் சின்னங்கள் போலிருக்கு!

சித்திரக்காரர்:—அந்த விஷயத்திலே நீங்க அதிர்ஷ்டசாலி! உங்களுக்குத் தோல்வியே வெற்றி! நீங்கள் ஆயிரம் பேரைக் கொன்றால்தானே அரை வைத்தியன் ஆகமுடியும்!

★

"தங்கள் பெயர் என்ன?"

"அந்தக் கடிதத்தில் கையெழுத்துப் போட்டிருக்கிறேனே, பார்க்கவில்லையா? அதுதான் என் பெயர்!"

"உங்கள் கையெழுத்தைப் பார்த்துவிட்டுத்தான் கேட்கிறேன். அதைப் பார்த்த பிறகுதான் உங்கள் பெயரைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்கிற ஆவல் உண்டாயிற்று!"

★

இரண்டு வக்கீல்களுக்குள் பலத்த சண்டை வந்து விட்டது.

முதல் வக்கீல்:—அப்பா! உன்னைப் போல் ஒரு கழுதையை இந்த நீதி ஸ்தலத்திலேயே காண முடியாது.



நீதிபதி :—ஆர்டர்! ஆர்டர்! நான் ஒருவன் இங்கே யிருப்பதை நீங்கள் மறந்து போகிறீர்கள்?

★

"வாங்கோ! நீங்கள்தானே சைக்கிளிலிருந்து கீழே விழுந்த என் மகனைக் காப்பாற்றினீர்கள்?"

"ஆமாம! அதற்கென்ன ஸார்! ஏதோ என்னாலான உதவியைச் செய்தேன். அதற்கு வந்தனம் தேவையில்லை!"

"வந்தனமா! என் பையன் பேனா வைத்திருந்தானே, அது எங்கே ஐயா?"

டாக்டர் :—நீங்கள் 'சிகரெட் புகைக்க கூடாது' என்று மனத்துக்குள் தீவிரமாக எண்ணி வந்தால் விரைவில் விட்டு விடலாம்!

நோயாளி:—அது சரி, ஆனால் நான் பெரிய புளுகனாயிற்றே, ஸார்!

★

"ரொம்பக் களைப்பாயிருக்கிறாய் போலிருக்கிறது. காப்பி சாப்பிடுகிறாயா......இல்லை, ஏதாவது சர்பத் கொண்டு வரச் சொல்லட்டுமா?"



"முதலில் காப்பி எடுத்து வரட்டும்; அதற்குள் சர்பத்தும் தயாராகட்டும். பிறகு அதைச் சாப்பிட்டு விடலாம்!"

★

பூங்காவில் காதலன் தன் காதலியுடன் அமர்ந்திருக்கிறான். அவர்களுக்கு முன்னால் ஒரு சிறு பையன் நின்று கொண்டிருக்கிறான்.

காதலன் :—இந்தா, அரை ரூபாய்! பிஸ்கோத்து வாங்கிக் கொள்.

பையன் :—எனக்குப் பிஸ்கோத்து வேண்டாம்!

காதலன் :—இந்தா, ஒரு ரூபாய்! பொம்மையாவது வாங்கிக்கொள்!

பையன் :—எனக்குப் பொம்மையும் வேண்டாம்!

காதலன் :—அப்படின்னா உனக்கு என்னதான் வேண்டும்?

பையன் :—உங்களைப் பார்த்துக் கொண்டு இருக்கத்தான் வேண்டும்!

★

இலங்கையில் சுற்றுப்பிரயாணம் செய்து விட்டு வந்தவரிடம் அவர் **நண்பர்** :—ஏன் ஸார்! இலங்கையில் பிரமாதமாகச் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு வந்தீர்களே, என்னைப் பற்றி எங்காவது நினைத்துப் பார்த்திருப்பீர்களோ?



சுற்றுப்பிரயாணம் செய்தவர் :— என்ன! அப்படிச் சொல்லி விட்டீர்கள். மிருகக் காட்சி சாலையில் நுழைந்து குரங்கைப் பார்த்ததும் உங்கள் ஞாபகந்தான் எனக்கு முதலில் வந்தது!

★

"இந்த வீட்டுச் சுவரில் கிறுக்கியிருக்கிறதே, என்ன அர்த்தம்?"

"இந்த வீட்டில் ஒரு பையன் இருக்கிறான் என்று தெரிகிறது!"



மலைச்சாரல்

அத்தியாயம் 15

மலைப்பிரயாணம்

அவன் அருவியை நோக்கிச் செல்வதைப் பார்த்து விட்டுச் சிவசங்கரன் மலைமீது ஏறத்தொடங்கினார். புதியதொரு உற்சாகத்தினால் அவர் மனம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. இது போதை தரும் குதூகலம் அல்ல; வெறியூட்டும் மகிழ்ச்சி அல்ல. இதயத்தைக் குளிர்விக்கும் இனிய இன்பம் மனத்தில் பொங்கிச் சுரப்பதை அவர் அறிந்து கொண்டார்.

அதன் பிறகு அவருடைய இதயத்தில் போராட்டங்கள் எல்லாம் ஒய்ந்து, மாதவி எப்போதும் வாசம் செய்யத் தொடங்கினாள். தம்முடைய வாழ்நாளில் தாம் என்றுமே இவ்வளவு அமைதியான இன்பத்தை அனுபவித்ததில்லை என்று

மாதவி

சிவசங்கரனுக்குத் தோன்றியது. மாதவி தன்னைப் பற்றி விசாரித்ததிலிருந்தே அவனுக்கும் தம்மிடம் ஒரு பற்றுதல் ஏற்பட்டிருக்கிறது என்று ஊகித்துக் கொண்டார் சிவசங்கரன். அவருடைய இதயம் 'அவள் உன்னை நேசிக்கிறாள்' என்று தைரியமாகச் சொல்லிற்று.

ஆனாலும் கிருஷ்ணன்குட்டியிடம் தமக்கு ஏற்பட்டுள்ள மனமாறுதலை அவரால் கூற முடியவில்லை. சங்கோசம் ஒரு காரணமாக இருந்த போதிலும், மாதவியிடம் மனம் விட்டுப் பேசுவதற்கு முன்னால் இதைப் பற்றி யாரிடமும் சொல்லக் கூடாது என்ற திடமான எண்ணமும் அவருக்கு ஏற்பட்டிருந்தது.

கடைசியில் ஞாயிற்றுக்கிழமை பொழுது விடிந்தது. கண் விழிக்கும்போதே சிவசங்கரனுக்கு ஒரே பரபரப்பாக இருந்தது. மாதவியைச் சந்திக்கப் போகிறோம், அவள் தளிர்க் கரங்களால் அளிக்கும் பலகாரங்களைச் சாப்பிடப் போகிறோம் என்று உற்சாகம் ததும்பிக் கொண்டிருந்தது.

அவசரமாகக் குளித்து விட்டு, வேட்டைக்குப் போவதற்கென்றே தைத்து வைத்துக் கொண்டிருக்கும் உடையை அணிந்துகொண்டு கண்ணாடியில் பார்த்துக் கொண்டார். அவருடைய வயதைக்கூடக் கொஞ்சம் குறைத்துக் காட்டியது அந்த உடை. பெருமிதத்துடன் வேட்டைத் துப்பாக்கியை எடுத்து, ரவைகளைப் போட்டுப் பெட்டியை மூடினார். தம் அருமை அன்னையிடம் கூறிவிட்டுப் புறப்பட்டார்.

சிவசங்கரன் மாதவியின் வீட்டை அடைந்த போதே கருணாகரனும் தயாராக இருந்தான்.

சிவசங்கரனுக்கு அது சிறிது எரிச்சலாக இருந்தது. கருணாகரன் புறப்படத் தாமதமானால் மாதவியுடன் இன்னும் சற்று நேரம் இருக்கலாம் அல்லவா?

ஆனந்தி





ஒருவர்: முன்னெல்லாம் இங்கே ஒரே குப்பை மேடாக இருந்தது......இப்போ பெரிய பெரிய கட்டடங்களாக வளர்ந்து போச்சுங்க!......

மற்றவர்: குப்பை மேடுன்னு நல்ல எரு வாச்சுங்களே வளர்கிறதுக்கு என்ன கேட்கணுமா?......?

''வாருங்கள்'' என்று கருணாகரன் கூறி வரவேற்றான். அவன் குரலில் ஈரப் பசையே இல்லாதமாதிரி சிவசங்கரனுக்குத் தோன்றியது. அந்த வரவேற்பைக் கேட்டுவிட்டு மாதவி வெளி வந்தாள். அதிகாலையில் மலர ஆரம்பிக்கும் புத்தம்புது மலர்போலத் தெளிந்த முகத்துடன் காணப்பட்டாள் மாதவி. அவளுடைய குளிர்ந்த கண்களில் இன்று ஒரு புதிய பிரகாசம் இருப்பதாகச் சிவசங்கரனுக்குத் தோன்றியது.

''உட்காருங்கள். பலகாரங்களும் ஆகிவிட்டன. இதோ கொண்டு வருகிறேன்'' என்று கூறிவிட்டு உள்ளே சென்றாள் மாதவி.

அன்று சிவசங்கரன் சாப்பிட்ட சூடான இட்டிலிக்கும், காப்பிக்கும் எதையுமே ஈடு சொல்ல முடியாது. இட்டிலி ரஸகுல்லா மாதிரி இருந்தது. கம்மென்று மணம் வீசிய காப்பியைப் பற்றி எதுவுமே கூறமுடியாது.

கருணாகரனும் சேர்ந்துதான் சாப்பிட்டான். ஆனால் வாயைத் திறந்து ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. இது சிவசங்கரனுக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. மாதவியும் ஒன்றிரண்டு வார்த்தைகளுக்குமேல் பேசவில்லை. கருணாகரனுக்குத் தன்னைப் பிடிக்கவில்லை என்ற எண்ணம் சிவசங்கரன் மனத்தில் இன்னும் ஆழமாகப் பதிந்தது.

சாப்பிட்டு முடித்ததும் மாதவியைப் பார்த்து, ''இட்டிலியும் காப்பியும் ரொம்ப நன்றாக இருந்தன'' என்று சிவசங்கரன் உபசாரமாகக் கூறினார்.

''நீங்கள் அப்படித்தான் சொல்வீர்கள். நன்றாக இல்லை என்று சொல்வீர்களா?'' என்று கருணாகரன் வெடுக்கென்று கூறினான். மாதவி சிரித்தாள். சிவசங்கரனால் சிரிக்க முடியவில்லை. தம்மை அவன் பரிகசிப்பதாக நினைத்து வேதனைப்பட்டார். சொல்லாமல் வீட்டுக்குப் போய்விட்டு இந்தப் பக்கமே வராமலிருந்து விடலாமா என்றுகூட ஒரு கணம் தோன்றியது. ஆனால் மாதவியின் விழிகளை ஒருதரம் சந்தித்தவுடனே அது மறந்து போய்விட்டது.

கருணாகரனைப் பார்த்து, ''நாம் மட்டும்தான் போகிறோமா? அல்லது வேறு யாராவது கூட வருகிறார்களா?'' என்று கேட்டார் சிவசங்கரன்.

''ஏன் உங்களுக்குப் பயமாக இருக்கிறதா?'' என்றுகேட்டான் கருணாகரன்.

''சே! சே! என்ன பயம்? நான் சர்வசாதாரணமாகக் கேட்டேன்.''

''உங்களுக்கு விருப்பமில்லையானால் இன்று போக வேண்டாம். பத்துப் பேரைச் சேர்த்துக்கொண்டு இன்னொரு நாள் போகலாம். என்னைப் பொறுத்த வரையில் காட்டின் மிக நெருக்கமான பகுதிக்குப் போவதற்குக் கூட நான் பயப்பட மாட்டேன்.''

கருணாகரன் வேண்டுமென்றே தம்மைக் குறைவாகப் பேசுகிறான் என்று சிவசங்கரன் எண்ணினார்.

மாதவி அப்போது குறுக்கிட்டு, ''இன்று கட்டாயம் வேட்டைக்குப் போவது என்று ஏற்கெனவே தீர்மானம் செய்தாகிவிட்டதே. அதை ஏன் இப்போது குழப்புகிறாய்? சீக்கிரம் கிளம்பு'' என்று கூறினாள்.

அப்போதுதான் சிவசங்கரன் அவள் ஒரு கையில் சிறிய கூடையை வைத்துக் கொண்டு நிற்பது தெரிந்தது.

''நீயும் வருகிறாயா, அக்கா?'' என்று கருணாகரன் சற்று வியப்புடன் கேட்டான். அந்தக் கேள்வியைக் கேட்டதற்காகக் கருணாகரனைச் சிவசங்கரன் மனமார வாழ்த்தினார்.

''ஆமாம், தம்பி!'' என்றாள் மாதவி.

சிவசங்கரன் மகிழ்ச்சியுடன் மாதவியின் அருகில் சென்று அவள் கையில் இருந்த கூடையை வாங்கிக் கொண்டார். அவளுடைய முகத்தைப் பார்ப்பதற்கு அவருக்கு மிகவும் சங்கோசமாகவே இருந்தது.

''போகலாமா?'' என்று கருணாகரனிடம் கேட்டார். அவன் தலையை



ஆரோக்கியமும், மகிழ்வும் பெற உதவும்

ரொட்டிகள், கேக்குகள்

தயாரிக்கத் தகுந்தவை

RISING SUN BRAND

சூரியன் மார்க்

மைதா, சூஜி, ஆட்டா

நவீன நியூமாடிக் ஸிஸ்டத்தில் தயாரிக்கப்படுபவை.

தயாரிப்பவர்கள்: செஞ்சுரி பிளவர் மில்ஸ் லிமிடெட், மதராஸ்.

மானேஜிங் ஏஜண்டுகள்:

சௌந்தரராஜன் & கம்பெனி லிமிடெட்,

221, கோவிந்தப்ப நாயக்கன் தெரு—மதராஸ்-1.

தபால்பெட்டி: 1558

போன்: 3707. தந்தி: MATHOORAN

EP

அசைத்தான். இருவரும் முன்னால் சென்றார்கள். மாதவி கதவைப் பூட்டி விட்டு அவர்களைத் தொடர்ந்து வந்தாள். மாதவி தங்களுடன் வருவது கருணாகரனுக்கு அவ்வளவாகப் பிடிக்க வில்லையோ என்ற சந்தேகம் சிவசங்கரனுக்கு எழுந்தது. ஆகவே அவரும் சந்தோஷத்தால் நிறைந்து துள்ளும் தம் உள்ளத்தைக் கட்டுப் படுத்திக் கொண்டு, எதிலுமே பற்றில்லாதவர் போல முகத்தை வைத்துக் கொண்டார். ஆனால் அவ்வப்போது அவரது கண்கள் அவரையே ஏமாற்றி விட்டு, மாதவியின் பக்கம் திரும்பிவிடும். அவற்றை மறுபடியும் இழுத்து வேறு எங்கேயாவது பார்க்கச் செய்வதற்குள் சிவசங்கரனுக்குப் போதும் போதும் என்று ஆகிவிடும்.

இப்போது அவருக்கு வேட்டையாடுவதற்குக்கூட உற்சாகம் உண்டாக வில்லை. மாதவியுடன் எங்கேயாவது உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கலாம என்று தோன்றியது.

பிறகு தம் திறமை முழுவதையும் மாதவிக்குக் காட்ட வேண்டும் என்ற ஆசையும் உண்டாயிற்று. மாதவி தம்முடைய குறி பார்க்கும் திறமையைக் கண்டு ஆச்சரியப்படவேண்டும், அதற்கு மேல் கருணாகரன், தான்பேசியவிதத்தை நினைத்து அவமானப் படவேண்டும் என்றும் தோன்றியது. உடனேயே தாம் இவ்வாறு சிறுபிள்ளைத்தனமாக எண்ணமிடுவதைக் குறித்து வெட்க மடைந்தார் சிவசங்கரன். இதுவரையில் அவருக்குத் தம்மை இன்னொருவர் மதிக்கும்படி நடந்து கொள்ளவேண்டும் என்று தோன்றியதே கிடையாது. மதித்தால் மதிக்கட்டும், மதிக்கா விட்டால் போகட்டும் என்ற தோரணையிலேயே அவருடைய எண்ணங்கள் சென்று கொண்டிருக்குமே தவிர, வேறு யாராவது தம்மைப் பற்றிக் குறைவாக எண்ணி விடுவார்களோ என்று அவர் கவலைப்பட்டதே கிடையாது. யாருடைய நன்மதிப்பையும் பெறுவதற்கு அவராக முயற்சி செய்ததும் கிடையாது.

ஆகவே, இன்று மாதவியின் நன்மதிப்பைப் பெறவேண்டும் என்று தோன்றியதும் முதலில் அவருக்கு வெட்கமாக இருந்தது. அதிலும் கருணாகரன் தம்மைப் பற்றி உயர்வாக நினைக்கவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டபோது ஒரு வேதனையும் உண்டாயிற்று.

மேலும் அவர் கலகலப்பாகப் பேசிப் பழகும் சுபாவம் உள்ளவர். மாதவியும், கருணாகரனும் வாயைத் திறப்பதாகவே காணோம். அவர்களுடன் தாமாகப் பேச்சுக் கொடுக்கவும் அவருக்குத் தயக்கமாக இருந்தது.

கருணாகரனிடம் பேச அவருக்குப் பிடிக்கவில்லை. மாதவியிடம் பேசினால் அவன் ஏதாவது நினைத்துக் கொள்ளலாம் என்று பயந்தார். மாதவியாக ஆரம்பித்தால்தான் பேச்சில் கலந்து கொள்ளலாம். அவள் ஏன் இப்படி மௌனமாக வருகிறாள்? அவ்வப்போது கண்களினாலும், புருவத்தினாலும் புன்னகை புரிவது போலத் தோன்றியது. ஆனால் அது புன்னகைதானா என்று நிச்சயம் செய்துகொள்ள முடியவில்லை. கொஞ்ச நேரம் பொறுத்துத்தான் ஒரு வேளை மாதவியும் கருணாகரன் இருப்பதனால்தான் பேசவில்லையோ என்று தோன்ற ஆரம்பித்தது அவருக்கு.



இல்லாவிட்டால் அன்று அவ்வளவு கலகலப்பாகப் பேசித் தம்மைப் பற்றியெல்லாம் விசாரித்தவள், இன்று இப்படி மௌனமாக வரமாட்டாள் என்று சமாதானம் செய்து கொண்டார்.

அருவிக் கரையை அடைந்தபோது சிவசங்கரனால் பேசாமல் இருக்க முடியவில்லை. தாங்கள் உட்கார்ந்திருந்த பாறைகளைப் பார்த்து விட்டு, ''இந்த இடத்திலேயே இருந்து விடலாமென்று எனக்குத் தோன்றுகிறது. அத்தனை அழகாக இருக்கிறது இந்த இடம்'' என்று குதூகலமாகக் கூறினார்.

''ஓ! பேஷாக இருந்து விடலாம். கொஞ்ச நேரம் இந்தத் தடாகத்தில் நீந்தினால் பசி நன்றாக எடுத்து விடும். உடனே கூடையில் இருப்பதைச் சாப்பிட்டுவிட்டு வீட்டுக்குப் போய் விடலாம்'' என்றான் கருணாகரன்.

''அதை நான் அனுமதிக்கப் போவதில்லை. இன்று மலையில் ரொம்ப

நேரம் ஏறுவதென்று நான் தீர்மானம் செய்து கொண்டு வந்திருக்கிறேன். இன்னும் ஒரு மணி நேரம் ஏறினால் அங்கே ஒரு அற்புதமான இடம் இருக்கிறது. அங்கே நான் கூடையுடன் இருக்கிறேன். நீங்கள் அலைந்து திரிந்துவிட்டு வரலாம்'' என்றாள் மாதவி.

''மாதவி கூறியதை நான் எப்போதுமே மீறியது கிடையாது. ஆகவே, இன்றும் அவள் சொன்னதைக் கேட்டு விடப் போகிறேன்'' என்றான் கருணாகரன். அதைக் கூறும்போது அவனுடைய குரலில் பெருமை தொனித்தது. மேலும், கொஞ்சம் உற்சாகம் ஏற்பட்டு விட்டது போலக் கூடத் தோன்றியது.

சிவசங்கரன் சற்று நிம்மதி யடைந்தார். ''அப்படியானால் போகலாம். நான் மாத்திரம் இங்கே இருந்து என்ன பிரயோசனம்?'' என்றார். உடனே அப்படிச் சொன்னதற்காகப் பல்லைக் கடித்துக் கொண்டார். மாதவியின் முகம் அழகாகச் சிவந்தது. சிரிப்பை அடக்கிக் கொள்வதற்கு அவள் பிரயத்தனப் படுகிறாள் என்பதைத் துடிக்கும் அவள் இதழ்கள் தெரிவித்தன. அந்த நிலையிலும் சிவசங்கரன் அதைப் பார்த்து ரஸிக்கத் தவறவில்லை.

கருணாகரன் ஒரு மாதிரி அவரைப் பார்த்துவிட்டு, ''கூடையை வெகு நேரமாகத் தூக்கிக் கொண்டு வருகிறீர்களே! நான் கொஞ்சம் தூக்கிக்கொண்டு வருகிறேன்'' என்று கூறிவிட்டு அதை வாங்கிக் கொண்டான். இதுவும் சிவசங்கரனுக்குச் சிறிது மகிழ்ச்சி யளித்தது. அதன் பிறகு அவர் அவ்வளவாகச் சங்கடப்படவில்லை.

அத்தியாயம் 16

மனம் துடித்தது!

ஒரு மணி நேரம் மலைப் பாதையில் நடந்து மாதவி மிகவும் களைத்துப்போய் விட்டாள். வானோங்கிய மரங்களின் குளிர்ந்த நிழலும், பாதையோரத்தில் ஓடிய சிற்றோடைகளும் உற்சாகத்தை அளித்த போதிலும், சிவசங்கரனுக்கும் காலை வலித்தது. அவருக்கு மலையில் ஏறிப்பழக்கமில்லை. கருணாகரனோ களைப் பென்பதே தெரியாதவன்போல உற்சாகமாக இருந்தான்.

மலைமீது ஏற ஏற அவன் மனமும் மாறுதல் அடைந்து வந்ததாகத் தோன்றியது. தான் முன்பு வேட்டையாட வந்தபோது நிகழ்ந்த சம்பவங்களையெல்லாம் உற்சாகமாக விவரித்தான். அவனுடைய பேச்சில் நகைச்சுவை துள்ளி விளையாடியது. சிவசங்கரனுக்கு அவனைப் பற்றிய அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ளும்படி ஆகிவிட்டது.

''தம்பி! இந்தக் காட்டில் என்னென்ன மிருகங்களெல்லாம் இருக்கும் என்று அவருக்குச் சொல்லு. இந்த இடத்துக்கு அவர் புதிதல்லவா?'' என்றாள் மாதவி.

''இங்கே நரிகள் அதிகம். காட்டுப் பன்றிகளும், மான்களும் இருக்கின்றன. இந்த மலையைத் தாண்டிச் சென்றால் அடுத்த பக்கம் பெரிய பள்ளத்தாக்கு இருக்கிறது. அங்கே காட்டு எருமைகளும், புலிகளும் கூட இருக்கின்றன. அங்கே நான் இரண்டு தடவைதான் போயிருக்கிறேன். நாம் இன்று போகப் போகும் இடத்தில் சிறுத்தைகளுண்டு. ஆனால் அபூர்வமாகக் கண்களில் படும். தொடர்ந்து பத்து நாட்கள் வந்தால் கூடச் சில சமயம் சிறுத்தைகள் தென்படுவதில்லை'' என்றான் கருணாகரன்.

''அடுத்த பக்கம் உள்ள பள்ளத்தாக்குக்குப் போவது ரொம்பக் கஷ்டமோ? நாம் அங்கேயே போயிருக்கலாமே?'' சிவசங்கரன் தம்முடைய கால்வலியை வெளியே காட்டிக் கொள்ளாமல் இவ்வாறு கேட்டு வைத்தார். நல்ல வேளையாக அங்கே போகவில்லை என்று அவருக்கு ஆறுதலாக இருந்தது.

மாதவி பதிலுக்கு, ''இதுவே என்னால் ஏற முடியவில்லை. கால் வலிக்கிறது. அங்கே எப்படிப் போக முடியும்?'' என்று கேட்டாள்.

''நீ அங்கே வரவே முடியாது, அக்கா. ரொம்பச் செங்குத்தான பாறைகளைத் தாண்டிப் போக வேண்டும். அதுவும் இல்லாமல் அங்கே போவதாக இருந்தால் ஒரு இரவு தங்குவதற்கு ஏற்பாடு செய்துகொண்டு பத்துப் பேராகப் போக வேண்டும். ஒரு நாளில் போய் விட்டு வரமுடியாது. இன்று இவர் முதல் தடவையாக வருவதால் நாம் போகும் இடந்தான் சௌகரியமாக இருக்கும். நீங்கள் கவலைப்படாதீர்கள். இந்த மலைப்பிரதேசம் முழுவதையும் உங்களுக்கு நான் காட்டி விடுகிறேன். ஒவ்வொரு நாள் ஒவ்வொரு இடத்துக்குப் போகலாம். இன்னும் நாலைந்து பேர்கள் சேர்ந்துவிட்டால் மிகவும் உற்சாகமாக இருக்கும்'' என்றான் கருணாகரன். சிவசங்கரன் மாதவி இருவருக்குமே அவன் குதூகலமாகப் பேசியது மிகுந்த மகிழ்ச்சி யளித்தது.

போகப் போகப் பாதை குறுகலாகிக் கொண்டு வந்தது. அதிகமாக ஜனங்கள் நடமாடாத இடம் என்று அதைப் பார்த்த போதே தெரிந்தது. ஒரு இடத்தில் அதல பாதாளமான பள்ளத்துக்கும், செங்குத்தான மேட்டுக்கும் நடுவே ஒன்றரையடி அகலமுள்ள பாதையில் போக வேண்டியிருந்தது.

"இதைவிட நல்ல பாதை கிடையாதா?" என்று கேட்டார் சிவசங்கரன்.

"இருக்கிறது. ஆனால் ரொம்பச் சுற்று வழி. இன்னும் அரை மணி நேரம்கூட ஆகும். உங்களுக்குப் பரவாயில்லை என்றால் அப்படியே போகலாம்" என்றான் கருணாகரன்.

"இல்லை! நான் எனக்காகச் சொல்லவில்லை. மாதவி இப்படிப் போவதற்குப் பயப்பட மாட்டாளா?" என்றார்.

மாதவி கருணாகரன் இருவரும் சிரித்தார்கள். "அக்காவுக்குப் பயம் என்றால் என்னவென்றே தெரியாது. நான் சிறு வயதில் ஒரே பயந்தாங்கொள்ளியாக இருந்தேன். அக்காதான் என்னைத் தைரியசாலியாகச் செய்தாள். அவளுக்கு இதிலெல்லாம் கொஞ்சம் கூடப் பயம்கிடையாது" என்றான் கருணாகரன்.

மாதவி அவர்களைத் தாண்டி முன்னால் சென்று அந்தப் பாதையில் நடக்க ஆரம்பித்தாள். சிவசங்கரனுக்குத் 'திக் திக்'கென்று இதயம் அடித்துக் கொண்டது. அவள் பின்னால் அவர் சென்றார். தமக்குப் பயமாக இருக்கிறதென்பதை வெளியே காட்டிக் கொள்ளாமலிருக்கப் பிரயத்தனம் செய்தார். அவருக்குப் பின்னால் வந்த கருணாகரன் அவருடைய உணர்ச்சியைப் புரிந்து கொள்ளவில்லை. 'இவ்வளவு பயப்படுகிறாரே! இவர் வேட்டையாட எதற்காக வருகிறார்?' என்று எண்ணமிட்டான். அவர் மாதவியைப் பார்த்த பார்வையை நினைக்கும் போது அவனுக்குப் புரிந்த மாதிரியும் இருந்தது; புரியாத மாதிரியும் இருந்தது. மாதவி ஏன் இன்று தங்களுடன் வருகிறாள் என்பது அவனுக்கு விளங்கவில்லை. சாதாரணமாக அவளுக்கு வேட்டையாடுவது என்றால் பிடிக்காது. கருணாகரன் வேட்டையாடப் போகாததற்குக் காரணமே அவள்தான். ஜீவஹிம்சை செய்யக் கூடாதென்று போதனை செய்தவளும் அவள்தான். இன்று மாத்திரம் அவள் அதை ஒப்புக் கொள்வது போல நடந்து கொண்டது அவனுக்கு விநோதமாக இருந்தது. கருணாகரனின் எண்ணத் தொடர் முடிவதற்குள் அந்தக் குறுகலான பாதை முடிந்து விட்டது. சிவசங்கரன் தாம் என்றுமே பார்த்து அறிந்திராத அற்புத சௌந்தரியக் காட்சியை அங்கே கண்டார். மூன்று பேரும் அந்த இடத்தின் அழகில் மனத்தைப் பறி கொடுத்து விட்டுச் சற்று நேரம் நின்றார்கள்.

கொஞ்ச தூரத்துக்கு அப்பால் கழுக மலையின் உயர்ந்த சிகரம் தெரிந்தது. நீல நிறமாகத் தெரிந்த அதன்மீது வெண்ணிற மேகங்கள் முட்டிக்கொண்டு நின்றன. அவர்கள் எதிரே ஒரு திறந்த முற்றம் போன்ற பெரிய இடைவெளி இருந்தது. மூன்று பக்கங்களிலும் இருண்ட காடு தெரிந்தது. அவர்களுக்கு வலது பக்கத்தில் அதல பாதாளமான பள்ளம். சற்றுத் தூரத்தில், ஊர் தெரிந்தது. வீடுகள் எல்லாம் நெருப்புப் பெட்டியால் செய்த விளையாட்டு வீடுகளைப் போலக் காணப்பட்டன.

அவர்களுக்கு நேர் எதிரே காட்டுக்குள்ளிருந்து முப்பது கஜ தூரத்தில் தெள்ளிய ஸ்படிகம் போன்ற நீர் ஓடி வந்து கொண்டிருந்தது. சுழன்று சுழன்று வந்த நீர்க் குமிழிகள் வெயில் பட்டு நட்சத்திரங்கள்போல மின்னின. ஓடி வந்த ஜலம் பத்தடி தூரத்துக்கு அப்பால் அந்தப் பள்ளத்தில் கொட்டியது.



சென்னை, காந்தி நகர் பால 'பிருந்தாவனம்' என்னும் குழந்தைகள் பள்ளிக்கூடத்தில் சென்ற மாதம் பெற்றோர்கள் தினம் சிறப்பாக நடைபெற்றது. போலீஸ் மந்திரி திரு பக்தவத்ஸலம் தலைமை வகித்தார். இந்த விழாவில் நடந்த பல வேடிக்கை நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொண்ட சின்னஞ் சிறு குழந்தைகளில் சிலரை மேலேயுள்ள படத்தில் காணலாம்.

கரும் பச்சை நிறமான அடர்ந்த காடும், தூரத்தில் கறுத்த மலையும், வெண் மேகங்களும், கொஞ்சம் மேலே துல்லிய நீல நிற வானமும், கீழே தெளிந்த நீரும் அருவி விழும் இடத்தில் பூத்துச் சொரிந்திருந்த ஒரே ஒரு கொன்றை மரமும், அருகில் மாதவியும் சேர்ந்து சிவசங்கரனைத் தம்மையே மறக்கச் செய்து விட்டன.

''சரிதான்! இப்படியே நின்று கொண்டிருந்தால் எப்போது காட்டுக்குள்போவது? போகலாம், வாருங்கள்'' என்று கருணாகரன் கூறினன்.

மாதவி இருவரையும் பார்த்து, ''நான் இங்கேயே இருக்கிறேன். நீங்கள் இருவரும் போய்விட்டு வாருங்கள்'' என்றாள்.

''நீங்கள் தனியாக இருக்க வேண்டுமே?'' என்றார் சிவசங்கரன்.

கருணாகரன் சிரித்தான். ''இங்கே அக்கா இருந்தால் பரவாயில்லை. நாம் இன்னும் ரொம்பத் தூரம் போகவேண்டியதில்லை. இங்கேயும் துஷ்ட மிருகங்கள் வருவதில்லை. திறந்த வெளியில் பகலில் மிருகங்கள் வராது'' என்றான்.

''எனக்குக் கொஞ்சம்கூடப் பயமில்லை. நீங்கள் தைரியமாகப் போய்விட்டு வாருங்கள்'' என்றாள் மாதவி.

''நீங்கள் என்ன செய்து கொண்டிருப்பீர்கள்?'' என்றுகேட்டார் சிவசங்கரன்.

''முதலில் இங்கே ஸ்நானம் செய்வேன். பிறகு புத்தகம் கொண்டு வந்திருக்கிறேன். படித்துக் கொண்டிருப்பேன். இப்போதே நேரமாகி விட்டது. நீங்கள் சீக்கிரம் போய்விட்டு ஒரு மணிக்குள் வந்து விடுங்கள். சாப்பிட்ட பிறகு வேண்டுமானால் போகலாம்.''

''சரி! ஆனல் நீங்கள் ஜலம் விழும் இடத்துக்கருகே போகாதீர்கள். அங்கே வேகம் அதிகமாக இருக்கும் போலத் தோன்றுகிறது'' என்று கூறிவிட்டுப் போவதற்கு மனமில்லாமல் சிவசங்கரன் கருணாகரனுடன் சென்று தண்ணீரைக் கடந்து காட்டுக்குள் புகுந்தார்.

மாதவி அவர்கள் சென்றதும் தண்ணீரில் இறங்கித் துளைந்து வெகு நேரம் ஸ்நானம் செய்தாள். மீன்கள் எப்படித் தண்ணீரின் வேகத்துடன் போய் அருவியில் விழாமல் இருக்கின்றன என்று ஆச்சரியப்பட்டாள்.

பிறகு கரையேறிச் சற்றுநேரம் சும்மா உட்கார்ந்திருந்தாள். எங்கேயோ ஒரு வேட்டுச் சத்தம் கேட்டது. சிவசங்கரன் துப்பாக்கியுடன் குறி பார்த்துக் கொண்டு நிற்பது போலவும், அருகில் கருணாகரன் நின்று வியப்புடன் பார்ப்பது போலவும் கற்பனை செய்து கொண்டாள். அந்தக் கற்பனை அவளுக்குத் திருப்தியாக இல்லை.

அப்போது மறுபடியும் வேட்டுச் சத்தம் கேட்டது. இவ்வளவு அருகில் சிறுத்தைகள் இருக்காது. நரியைத்தான் பார்த்திருப்பார்கள் என்று நினைத்தாள். சீக்கிரம் அவர்கள் வந்து விட்டால் தேவலை என்று நினைத்துக் கொண்டே புத்தகத்தை எடுத்துப் படிக்க முயற்சி செய்தாள். ஒரு வரிகூட மனத்தில் பதியவில்லை. சிவசங்கரன் சுடுவது போலவும், ஒரு நரியின்மீது அதுபட்டு அது துடிப்பது போலவும் தோன்றி அவளை வேதனைக்குள்ளாக்கியது. ஏன் முன்னமேயே வேண்டாமென்று சொல்லாமல் போனேமென்று வருத்தப்பட்டாள். எதற்காக வந்தோமென்று அவளுக்குத் தோன்றி விட்டது.

மறுபடியும் துப்பாக்கி வேட்டுத் தீர்க்கும் சத்தம் கேட்டது. பிறகு சற்றைக்கொரு முறை தொடர்ந்து கேட்க ஆரம்பித்தது. ஒவ்வொரு தடவையும் மாதவியின் மனம் துடித்தது. (தொடரும்)

அருள் வாக்கு

இடிந்த கோயில்களும் இடியாத கோர்ட்டுகளும்

பழைய காலத்து அரசர்களெல்லாம் தானதர்மம் செய்து கொண்டும் கோயில்களைக் கட்டிக் கொண்டும் இருந்தார்கள். அவர்களுக்குச் சட்டங்களைப் புதிது புதிதாக உண்டாக்குகிற வேலையில்லாமல் இருந்தது. கோர்ட்டுகளுக்குப் பதிலாகக் கோயில்களை அவர்கள் கட்டி வந்தார்கள். ஜனங்கள் கோயிலுக்கு வந்தால் சாந்தராகிறார்கள். அக்காலத்தில் தினந்தோறும் கோயிலுக்குப் போவார்கள் இப்பொழுது அது குறைந்து விட்டது. ஆனல் கோர்ட்டுக்குப் போவது அதிகமாயிருக்கிறது. கோயிலுக்குப் போனல் கோர்ட்டுக்குப் போக வேண்டாம். இப்பொழுது எங்கும் இடிந்த கோயில்களும் இடியாத கோர்ட்டுகளும் காணப்படுகின்றன.

—ஸ்ரீசங்கராச்சாரியார், காஞ்சி காமகோடி பீடம்.



அன்புக்குரிய சுஜாதா,

அன்புக்கு இணையான சக்தி வேறு எதற்குமே இல்லை. பகைவர்களுக்கும் அருள் செய்வதே நன்மையாகும். இந்த மூன்றெழுத்தின் சக்தி மூவுலகையும் ஆளும். நாம் நமக்குத் தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் அனைவரிடமும் அன்பு செலுத்த வேண்டுமென்றுபேசுகிறோம். பறவை, மிருகம் முதலிய எல்லா உயிர்களிடமும் அன்பைக் காட்டிக் கடவுளின் அன்புக்குப் பாத்திரமாக நினைக்கிறோமல்லவா?

இந்த அன்பின் அருமையை மாணவிகள், சின்னப் பெண்கள் இன்னும் ஆழமாக உணர வேண்டுமெனக் கருதுகிறேன். ஒரு குடும்பத்தில் இரண்டு பெண்கள் பாடுகிறார்கள், படிக்கிறார்கள். திருமணத்துக்கு ஏற்ற படி வளர்கிறார்களென்று பார்த்துச் சந்தோஷப்படுகிறோம். அவர்கள் பெற்றோர்கள் எவ்வளவு கஷ்டப் பட்டிருப்பார்கள், எவ்வளவு செலவு செய்திருப்பார்களென்று நாம் முதலில் நினைத்துப் பார்க்க வேண்டும். தாய் தன் பெண்களுக்கு அவசரம் அவசரமாகச் சமைத்துப் போட்டு உடல் நலனைக் கவனித்து, தலை வாரி அழகுபடுத்திக் கல்லூரிக்கும், பள்ளிக்கும் அனுப்புகிறாள். தாய்க்குச் சிரமம் தாங்காமல் வியர்க்கிறது. ஆனால் அந்தக் களைப்பில் தன் மகள் பெருமையைக் கண்டு பூரிப்படைகிறாள். அதே சமயம் தந்தை விதம் விதமான ஆறு கெஜம்புடவைகளை வாங்கிக்கொடுத்து, படிக்க வைத்து, ஆயிரக்கணக்கில் செலவுசெய்து, ஓடி ஆடி அலைந்து மாப்பிள்ளை தேடும் சிரமம் எளிதன்று. காலம் மாறினாலும் கல்யாணச் செலவு குறையவில்லை.

பெற்றோர்கள் தங்கள் கடமையைத்தானே செய்கிறார்கள் எனப் பெண்கள் நினைக்கலாம். இந்த உலகில் கடமைகளை எல்லோராலும் நிறைவேற்ற முடியாது. அது சிரம சாத்தியமானது. எனவே பெண்கள் தாய் தந்தையரிடம் பரிபூர்ண அன்பு செய்வது பெற்றோர்களுக்குஅளிக்கும் உண்மையான ஆனந்தமாகும்.

முன்னேறிய நாடுகளில் குழந்தைகளை வெளியூர்களில் படிக்கவும், வளரவும் அனுப்பி விடுகிறார்கள். அதனால் குழந்தைகள் தாங்களே தங்களைக் கவனித்துக் கொள்ளவும், பொறுப்பாக இருக்கவும் அறிந்து கொள்கிறார்கள். ஆனால் வருஷக்கணக்காக இப்படியே இருந்து குழந்தைகளுக்குப் பெற்றோர்களிடம் அன்பு குறைந்து, பெற்றோர்களுக்குக் குழந்தை அன்பு குறைவதைக் கண்டார்கள். வாழ்க்கை வறண்டு தோன்றுவதுடன் அநேக துன்பங்களும் நேரிடுகின்றன. எனவே இப்பொழுது அவ்வழக்கத்தைக் குறைத்துக் கொண்டு வருகிறார்கள்.

வீட்டில் பண்டிகை தினம் வருகிறது. தாய் ஓடி ஆடி வேலை செய்கிறாள். பெண்களை வேலை ஏவும் தாய்மார்களும் உண்டு. குழந்தை புருஷன் வீட்டுக்குப் போய்ச் செய்யட்டும், இங்கு கஷ்டப்படுவானேன் என நினைப்பவர்களும் உண்டு. இரண்டாவதாகச் சொன்ன தாயைப் போன்றவர்களிடம் பெண்களை அன்னைக்கு வலுவில் உதவி செய்யப் பழக்கிக் கொள்வது சரியாகும். வீட்டில் என்ன நடக்கிறது என்று கூட அறியாமல் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு புஸ்தகமும் கையுமாக இருந்து விட்டால் அந்தப் பெண் இலட்சியப் பெண்ணாக மாட்டாள். பிறகு கணவன் வீட்டுக்குப் போனதும் பெரியவர்களுக்கு உதவியாக இருக்க வேண்டுமென்ற நல்ல வழக்கமும், எளிதாக வராது. சில கசப்பான அநுபவங்களுக்குப் பிறகு வரலாம். நம் குடும்பத்தில் சில தெய்வ நம்பிக்கைகள் இருக்கும். அதைப் பெண்கள் அலட்சியம் செய்யக் கூடாது. அவைகளை வீட்டிலுள்ளவர்களிடம் சரிவர அறிந்து கொள்ளலாம். மிகச் சில பெண்கள் தங்கள் சொந்தக் குரலை மாற்றிக் கொண்டு பேசுவதும் நன்றாக இல்லை. அது தான் நாகரிகமென்று தவறாக நினைக்கிறார்கள். அது தவறு.

ஒரு பெண்ணுக்குத் தாய் குருவைப் போன்றவள், தெய்வத்தைப் போன்றவள். பெண்களுடைய பிற்கால வாழ்க்கை ஆனந்தமாக வளம் பெற, நந்தவனமாகப் பூத்துக் குலுங்கத் தாய் வார்க்கும் அன்புதான் தண்ணீராகும். இப்படி இன்றியமையாத தாயை இயற்கை நியதியால் இழந்த குழந்தைகளை நினைத்து நம்மைப் போன்ற பெண் மனம் வருந்துகிறது. பெண்கள் தங்கள் அருமை அன்னையின் அருமையை உணர்ந்து கொள்ள வேண்டுமல்லவா?

இப்படிக்கு,

பூமாதேவி



பிரகாசமுள்ள
வெண்ணிறப் பற்கள்
மட்டுமல்ல
அத்துடன்
ஆரோக்கியமான
ஈறுகளும்!
ஈறுகளை கெட்டியாகவும், ஆரோக்கியமாகவும் வைக்கவும் மற்றும் பற்களுக்கு ஸ்படிகத்தைப் போன்ற வெண்மையை அளிக்க வேண்டும் என்றே போர்ஹான்ஸ் டூத்பேஸ்ட் விசேஷமாய்த் தயாரிக்கப்படுகிறது. உங்களை ஈறுகள் சம்பந்தமான நோய்கள் தொற்றிக்கொண்டு அவதி கொடுக்காதிருக்கவே யாவரும் அறிந்த இப்பற்பசையில் டாக்டர் ஆர். ஜே. போர்ஹான் டி. டி. எஸ் அவர்கள் பக்குவப்படுத்திய முறையில் விசேஷ காரப் பொருள் கலக்கப் படுகிறது. ரத்தக் கசிவு வீங்கிய ஈறு புண்ணானதும் மற்றும் கூசும் ஈறுகளை லேசாக போர்ஹான்ஸ் கொண்டு தேய்க்க வேண்டும். அவை உடனே கெட்டியான ஆரோக்கிய நிலைக்குத் திரும்பிவிடும் ஆனபடியால் இந்த இரட்டைக் காரியமுள்ள பற்பசையை நீங்கள் உபயோகித்து பளிச்சென இருக்கும் வெண் பற்களையும் நல்ல ஆரோக்கியமான ஈறுகளையும் உடையவரெனப் பெருமைப் படலாம்.
தந்த வைத்தியரால்
செய்யப்பட்ட டூத்பேஸ்ட்
போர்ஹான்ஸ்
ஈறுகளுக்குகந்தது
H-11

அழகு மல்லி

கண்மணி



ஓலை வேய்ந்த குடிசை. குடிசையின் வாசல் திறந்து கிடந்தது. குடிசை வாசலிலுள்ள பாறை ஒன்றின்மீது தேவானை சோகமே உருவமாகக் காட்சியளித்தாள். அவளுக்கு அருகிலுள்ள பசுஞ் சோலையும் பாலைவனமாகக் காட்சியளித்தது. உலகமே அவளுக்குப் பிடிக்காமல் போய் விட்டது. ஆம்! அவள் இத்தனை நாட்கள் கட்டி வந்த ஆசைக் கோட்டைகளையெல்லாம் ஒரு கணத்தில் தகர்த்தெறிந்து விட்டுப் போய்விட்டான் அவள் காதலன் வளவன்.

பெண்களின் மனத்தைக் கவிகள் மலருக்கு ஒப்பிடுகிறார்களே, அது உண்மையான உவமை தான். ஆம்! அந்தக் காட்டு மலர் காதல் தோல்வியினால் வாடிவிட்டது. நீண்ட நெடு நாட்களாக வளவன்,—அவள் உள்ளத்தைக் கவர்ந்தவன்—அவளையே மணப்பதாக உறுதி கூறியிருந்தான். ஆனால் இன்று வந்தவன் பேரிடியை அவள் தலையில் போட்டுவிட்டல்லவா போய் விட்டான்?

"தேவானை! நீ அழகற்றவள். ரோஜா மலரைப் போன்ற மல்லியை நான் அடையப் போகிறேன். என்னை மறந்துவிடு!" என்றான் வளவன் தீர்மானமாக.

"ஐயோ! இத்தனை காலமாக உங்கள் அன்புப் பிச்சைக்காக ஏங்கியிருந்தேனே. என்னைத் தனியாகத் தவிக்க விட்டுவிடாதீர்கள். நான் உங்களுக்குச் செய்த தவறு என்ன?"

"நீ தவறு ஒன்றும் செய்யவில்லை, நீ ஏழை. அழகற்றவள். உன்னால் எனக்கு ஒரு உபயோகமுமில்லை!" என்றான் வளவன். அவன் வார்த்தைகளிலே கர்வம் தலைதூக்கி நின்றது. ஆனால் அவன் தன்னைப்பற்றி எண்ண மறந்து விட்டான். அவன் கூனல் முதுகும், பரட்டைத் தலையும், அவலட்சண முகமும் அவனுக்கு மறந்து போய்விட்டன. தன் குற்றம் தனக்குத் தெரியாதல்லவா?

"அப்படியானால் நீங்கள் அந்தப் பயங்கரப் போட்டியிலே கலந்து கொள்ளப் போகிறீர்களா? வேண்டாம், வேண்டாம். உங்களைக் காலிலே விழுந்து மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். வேண்டாம்!"

"ஹஹ்ஹா! அழகற்றவளே! எனக்குப் பெருமையும் புகழும் பணமும் வருகின்றன. அவற்றை வேண்டாமென்று தடுக்கிறாயே, இதுதான் என்மீது உனக்கு இருக்கும் உண்மையான அன்போ?"

"உங்களுக்குப் பொருளும் அழகுப் பெண்ணும் கிடைப்பதில் எனக்குப் பூரண திருப்தி தான். ஆனால் வீணாக அந்தப் பெண்ணின் கொடிய சோதனைக்கு உள்ளாகி உயிர் இழக்கக் கூடாது என்பதுதான் என் கவலை."

"உனக்காக நான் கோழையாக இருக்க முடியாது. நிச்சயம் அந்தப் போட்டியில் கலந்து கொள்வேன்.."

"உங்களிடம் மிகுந்த மனவருத்தத்துடன் ஒன்று சொல்ல விரும்புகிறேன்.....ஆனால் சொல்ல நாக் கூசுகிறது..."

"சொல்லேன்...இனி என்ன பயம்?" என்றான் வளவன் அருவருப்புடன்.

"கிராமத்திலுள்ள மக்களெல்லாம் என்ன செய்கிறார்கள், தெரியுமா? உங்களைப் பார்த்து நகைக்கிறார்கள்; எள்ளி நகையாடுகிறார்கள்."

"'இந்த அவலட்சணம் பிடித்தவனுக்கா மல்லி மாலை சூடுவாள்? நிச்சயம் தன் மரணத்தைத் தானே வருவித்துக் கொள்ளப் போகிறான் பைத்தியக்காரன்!!' என்று எள்ளி நகையாடுவதைத்தானே கூறுகிறாய்? அவர்கள் சொல்லிவிட்டுப் போகட்டுமே?"

"வேண்டாம்! தாங்கள் அந்தப் போட்டியில் கலந்து கொள்ளாமல் வேறு எந்த அழ

ளுப் பெண்ணையாவது மணந்து கொள்ளுங்கள். தாங்கள் உயிர் இழக்க வேண்டாம்! உங்கள் உயிர் போய்விட்டால் என் உயிரும் போய் விடும்'' என்ருள் தேவானை கண்ணீர் பெருக்கியபடியே.

''இன்ரேடு என்னை மறந்து விடு. போட்டியில் வென்று மல்லியை யடைந்தே தீருவேன். நான் போய் வருகிறேன்'' என்று சொல்லி விட்டுப் போய்விட்டான் வளவன். அவள் இதயத்திலே கூரிய ஈட்டியைப் பாய்ச்சி விட்டுச் சென்று விட்டான்.

தேவானை குமுறிக் குமுறி அழுதாள். கடவுள் அவளுக்கு அவலட்சணத்தைக் கொடுத்திருந்தாலும் நல்ல இதயத்தையும் அல்லவா கொடுத்திருந்தார்?

* * *

அரவன்காடு மலைச் சிகரத்தையடுத்த கிராமம். குளிர்ந்த நீரோடையும் நெடிதுயர்ந்த மரங்கள் அடர்ந்த பசுஞ் சோலையும் கண்ணுக்கு இனிய விருந்தாக அமைந்திருந்தன. பசுஞ் சோலையில் தேனை நாடிச் செல்லும் கருவண்டுகள் கருதி கூட்ட, வரிக் குயில் கீதம் பாடும். அதற்கேற்ப மயில்கள் தங்களின் வண்ணத் தோகைகளை விரித்து ஆடும்.

இயற்கைத் தேவி பூரணப் பொலிவுடன் கொலு வீற்றிருக்கும் அரவன்காட்டுக் கிராமத்துத் தலைவனாகவும் செல்வச் சீமானாகவும் விளங்கினுர் சொக்கன். அவரது அருமைக் குமாரிதான் மல்லி. அழகுத் தேவதையே இவ்வுலகில் அவதரித்து வந்து விட்டாளோ என்று சொல்லும்படியாகப் பூரண எழிலுடன் அவள் விளங்கினுள்.

அவள் பூவில் நின்று சிரித்திடும் அழகும் பூங்கொடி தன்னில் ஆடும் எழிலும் சௌந்தரிய தேவதைதான் அவள் என்று நினைவுறுத்தின. அந்தச் சுற்று வட்டாரத்திலேயே அவளைப் போன்ற பேரழகி இல்லை. அழகான குதிரை போன்று குதித்துச் செல்லும் அவளைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம்; கண் சலிக்காது. அவளுடைய அகன்ற விழிகள் அந்தக் காட்டிலுள்ள குளிர்ச்சிப் புனலைப் போன்றவை. அவள் பற்கள் கடல் நுரையைப் போல் வெள்ளை வெளேரென்று பளிச்சென்றிருக்கும். இத்தகைய அழகுத் தேவதை பூவிலும், காவிலும், பூங்கொடியிலும் உலவி வந்தவள் அரவன்காடு கிராமத்து வாலிபர்களின் உள்ளங்களிலும் உலவி வந்தாள். பேரழகு படைத்த அவளை அடைய வேண்டும் என்ற ஆசைக் கனலை ஒவ்வொரு உள்ளத்திலும் மூட்டி வந்தாள்.

பாரசீகக் கதைகளிலே காதலுக்காக மலையைக் கெல்லி நீர் வருவித்த வீர வாலிபனைப் பற்றிய கதையைக் கேள்விப் பட்டிருக்கிரேும். சரித்திரத்திலே தன் உள்ளங் கவர்ந்தவளுக்காக அரச பதவியையே துறந்த அரச குமாரனைப் பற்றி நமக்குத் தெரியும். ஆனால் இவையனைத்தையும் விட மல்லி தன் காதலுக்காக விதித்த நிபந்தனை பயங்கரமானது. நினைக்கவே அச்சமளிக்கக் கூடியது.

அரவன்காட்டு மலையில் ஓர் செங்குத்தான சிகரம் இருந்தது. அந்தச் சிகரத்தில் ஏறி நின்ருல் இயற்கை அன்னையின் பூரண சௌந்தரியத்தை அள்ளிப் பருகலாம். அந்த மலை உச்சிக்குக் கீழே ஐம்பதடி தள்ளி, பார்க்கவே பயங்கரமான ஒரு கிடுகிடு பாதாளம் என்று தோன்றக்கூடிய பள்ளம் ஒன்று இருந்தது.

இயற்கையின் விநோதத்தைப் பாருங்கள்! அருகிலுள்ள செங்குத்தான சிகரத்தின் உச்சியில் ஒரு ரோஜாச் செடி எப்படித்தான் போய் முளைத்ததோ, தெரியவில்லையே! அதில் பூக்கும் மலர் வேறு கண்ணையும் கருத்தையும் கவருவதாக அமைந்திருந்தது. ஆனால் இயற்கைத் தேவி யாரும் கவர்ந்துவிடக் கூடாதென்பதற்காகவே செங்குத்தான பாறையின் மீது அந்த மலர்ச் செடியைப் படைத்திருக்கிருளோ என்று எண்ணத் தோன்றியது.

அழகி மல்லியும் எத்தனையோ பேர்களைப் போல் அந்த மலை உச்சிக்கு வந்து அந்தப் பேரழகு படைத்த ரோஜா மலரைப் பார்த்து அதிசயித்தவர்களில் ஒருத்தி: அதிசயித்தது மட்டுமல்ல; தன் அழகுக்குப் போட்டியாக அந்த மலர் இருப்பதை அவள் விரும்பவில்லை. ''இந்த அருமையான மலரை யார் இந்தச் செங்குத்தான பாறையில் ஏறிப் பறித்து வருகிருர்களோ அவரையே நான் மணப்பேன்!'' என்று கூறிவிட்டாள் மல்லி, தன் அருமைத் தந்தை சொக்கனிடம்.

''அம்மா! இதென்ன பயங்கரப் போட்டி! இந்தப் போட்டியிலே யாருமே வெற்றி பெற முடியாது. உன் வாழ்க்கை பாழாகிவிடும்! இதை விட்டுவிடு!'' என்று கூறினுர் சொக்கன்.

''அப்பா! இதென்ன வேடிக்கையாயிருக்கிறது. இந்தப் பூவைப் பறிக்க முடியாத கோழையை நான் மணந்து கொண்டு என்ன சுகம் அப்பா காணப் போகிறேன்? அதற்குக் கன்னிப் பெண்ணாகவே வாழ்ந்துவிடுகிறேன்!''

''வேண்டாம், அம்மா! நீ மணம் புரிந்து சுகமாக வாழவேண்டும் என்ற ஆசை ஒன்றுதான் என் மனத்தைத் திருப்திப் படுத்தும். அதை முறித்து விடாதே!''

''அப்படியானுல் இந்தக் கிராமத்திலுள்ளவர்களுக்கெல்லாம் இதைத் தெரிவித்து விடுகிருயா, அப்பா!'' என்ருள் மல்லி. 'ஆகட்டும்' என்று அவள் தந்தை தலையசைத்தார். ஆனுல் அவர் உள்ளத்தில் விவரம் தெரியாத கலக்கம் தோன்றியது.

பயங்கர மலைச் சிகரத்திலுள்ள எட்டாத அழகு மலரைப் போலவே, மல்லியும் அரவன் காட்டு வாலிபர்களுக்கு எட்டாக் கனியாகி விட்டாள். சொக்கனுக்குத் தம் செல்வப் புதல்வியின் திருமணம் நடக்க முடியாமல் போய்விடுமோ என்ற கவலை. அவர் உள்ளம் தளர்ந்தார்; மனம் சோர்ந்தார்.

அரவன்காட்டுக் கிராமத்திலுள்ள எல்லா வாலிபர்களுக்குமே மல்லியை மணந்து கொள்ள ஆசைதான். ஆனுல் அவளது பயங்கரப் போட்டியைக் கண்டே திகைத்தனர்; தயங்கினர்.

அந்தச் செங்குத்தான மலைச் சிகரத்தில் இது வரை யாருமே ஏறியதில்லை. அதை 'மரணச் சிகரம்' என்றே எல்லோரும் கூறிவந்தனர். 'காற்றிலேறி விண்ணையும் சாடுவர் காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே' அல்லவா? ஆகவே சில வீர வாலிபர்கள் மல்லியின்

காதலுக்காக மரணத்தையும் எதிர்த்து நிற்க முன்வந்தனர். சில வாலிபர்கள் முன் வந்ததால் யாரை முதலில் அனுப்புவது என்ற பிரச்னை எழுந்தது. கடையில் முருகன் பெயரைச் சொல்லி, ஒரு குச்சியைத் திடலில் நிறுத்தி, குச்சி யார் பக்கம் சாய்கிறதோ அவனே முதலில் முயற்சி செய்ய வேண்டும் என்று முடிவு செய்தனர்.

கிராமத் திடலிலே மக்கள் திரள் திரளாகக் குழுமி யிருந்தனர். பல பெண்களும் ஆடவர்களும் அந்தக் காட்சியைக் காண வந்திருந்தனர். பேரழகு படைத்த மல்லியும் அந்தக் கூட்டத்திலே அழகுப் பதுமையாகக் காட்சி தந்தாள். பந்தயத்திலே போட்டியிட முடியாத வாலிபர்கள் அவளை அடைய முடியாத துயரத்தினால் நெட்டுயிர்த்துத் தங்கள் ஏக்கத்தைத் தெரிவித்துக் கொண்டனர்.

முதலில் குச்சி கதிரவனின் பக்கம் சாய்ந்தது. 'முருகன் சரியான வரனைத் தேர்ந்தெடுத்து விட்டான். தைரியத்திலும் உடல் வலுவிலும் சிறந்த கதிரவன் நிச்சயம் வெற்றி பெறுவான்!' என்று கூடியிருந்தவர்களில் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டனர். தன்னைத் தேர்ந்தெடுத்ததற்காகக் கதிரவன் முதலில் குன்றுதோறும் குமரப் பெருமானுக்கு வணக்கம் தெரிவித்துக் கொண்டான்.

மறு நாள் காலை மலையின்மீது கிராம மக்கள் புடைசூழச் சென்றான் கதிரவன். மல்லி விலையுயர்ந்த பட்டாடைகளை யுடுத்தித் தன் அழகுப் போட்டியைக் காண வந்திருந்தாள்.

மல்லியின் மீதுள்ள அளவற்ற பாசத்தினால் செங்குத்தான சிகரத்தின் மீது ஏறினான் கதிரவன். ஆனால் செங்குத்தான பாறையில் ஏறி ரோஜாச் செடியை அணுக முடியவில்லை. அவன் விரைவாகச் செங்குத்தான பாறையில் ஏறினாலும் அவன் ஒரு பாறைமீது தவறிக் காலை வைக்கவே படு பாதாளத்தில் விழுந்து விட்டான். அடுத்த கணம் எல்லோருடைய முகத்திலும் துக்கத்தின் சாயை படர்ந்தது. 'ஹோ' என்ற ஓலக் குரல் கேட்டது. 'மல்லி! உன் காதலுக்காக மரண வாயினில் படுபாதாளத்தில் சிக்கிவிட்டேன்!' என்று அலறியபடியே படுபாதாளத்தில் விழுந்து அழுந்தினான் கதிரவன். மல்லியின் பொற் கரம் பற்றும் பாக்கியம் கதிரவனுக்குக் கிடைக்கவில்லை. அடுத்த தடவை கந்தனின் பக்கம் சாய்ந்தது. அவனும் மரண வாயினில் சிக்கினான்.

'' என்ன பயங்கரப் போட்டி! மல்லி அரக்கி குணம் படைத்தவள். படுபாதகி !'' என்று பல கிராமத்துப்பெண்கள் இடித்துரைத்தனர்.

'' மல்லி ! இரு மரணங்கள் உன்னுடைய பயங்கரப் போட்டியால் ஏற்பட்டு விட்டன. இனியாவது உன்னுடைய மனத்தை மாற்றிக் கொண்டு விடு. வேண்டாம் இந்தப் போட்டி !'' என்று மன்றாடினார் சொக்கன், தமது அருமைத் திருமகளிடம்.

அவள் கல கல வென்று நகைத்துக் கொண்டே, '' இதென்ன, வெட்கக் கேடு! நம் கிராமத்தில் இத்தகைய வீர தீரச் செயல்களைப் புரிய வாலிபன் யாருமே இல்லையா ? வீரமே நலிந்து விட்டதா?'' என்றாள்.

'' மல்லி ! இது வீரமல்ல; கொடூரம். வேண்டாம், சொல்கிறேன்!'' என்று மன்றாடினார் சொக்கன்.

அப்பொழுது அங்கு குழுமியிருந்த வாலிபர் கூட்டத்தில் சல சலப்பு எழுந்தது. மூன்றாவதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வளவன், ''நானே அந்தப் பொன் மலரைப் பறித்து வருவேன். அழகி மல்லியின் தளிர்க் கரத்தைப் பிடிப்பேன்'' என்றான் உற்சாகத்தோடு.

'' நீயா ? அவலட்சணம் பொருந்திய நீயா கலந்து கொள்ளப் போகிறாய்?'' என்று மக்கள் எள்ளி நகையாடினர்.

அப்பொழுது தேவானை ஓடிவந்து, ''மல்லி! உன்னை உயிர்ப் பிச்சை கேட்கிறேன். இவரைக் கலந்து கொள்ள வேண்டா மென்று சொல்லி விடு!'' என்று கெஞ்சினாள்.

'' அடி, அவலட்சணம் பிடித்தவளே ! தள்ளிப் போ! அவனே உயிரை இழக்க வரும் போது நீ எதற்கு இப்படிப் பிதற்றுகிறாய்?''


தேவானை கண்ணீர் பெருக்கியபடியே ஒதுங்கிப் போய் விட்டாள்.

அழகிய வாலிபர்களில் ஒருவன், ''வளவன் அழகற்றவன். அவனையா இந்தப் போட்டியில் ஈடுபடச் சொல்லப் போகிறாய்? இந்த அவலட்சணப் பேய்க்குக் காட்டு மலர் தேவானை தான் சரியான ஜோடி! அழகிய ரோஜா மலர் போன்ற உனக்கு இவன் ஏற்றவனல்ல. போட்டியைக் கைவிட்டு விட்டால் உன்னை மணக்கச் சித்தமாயிருக்கிறேன்!'' என்றான்.

''அழகற்றவனா யிருந்தால் என்ன ? என் மீது அவனுக்குக் காதல் இருக்கக் கூடாதா அவன் எனக்காக மரணத்தை எதிர்நோக்கி வருகிறான். அந்த மலரைப் பறித்து வந்தால் அவன் என்னை அடைவான்!'' என்றாள் மல்லி.

இதைக் கேட்டு வளவனுக்கு ஆனந்தம் கரை புரண்டோடியது. கிராம மக்களுக்குப் பொறாமையும் ஆத்திரமும் பொங்கி எழுந்தன. அவனைப் பலர் கேலி செய்தார்கள்; நகைத்தார்கள். 'டேய், குரங்கு! ஏறுடா பார்க்கலாம்!' என்று கெக்கலி கொட்டினர். 'உன்னுடைய அழகற்ற அவயவங்கள் நொறுங்கிப் பொடிப்பொடியாகிப் போய் மல்லிக்கு ஒரு நாள் இரக்கமாவது உன்னிடம் பிறக்கட்டும்!'' என்றனர் சிலர்.





சென்னை பெரம்பூர் இண்டகிரல் கோச் தொழிற்சாலையில் போர்மனாகத் திறமையுடன் பணியாற்றி வரும் திரு ஆர். விசுவநாதனது தொழில் நிபுணத்துவத்தை மத்திய சர்க்கார் பாராட்டிக் கௌரவித்துள்ளனர். புதுதில்லியில் ஏப்ரல் 16ந் தேதியன்று நடந்த வைபவத்தில் ரயில்வே மந்திரி திரு ஜகஜீவன்ராம் திரு விசுவநாதனுக்குப் பாராட்டுப் பத்திரம் வழங்குவதைப் படத்தில் காணலாம்!

சொக்கன் வளவனைத் தனியாக அழைத்து, "ஏன் வீணாக உயிரை மாய்த்துக் கொள்கிறாய்? கைதேர்ந்த வாலிபர்களாலேயே இயலாத காரியத்தை நீ சாதிக்க முடியாது! முயற்சியைக் கைவிட்டு விடு!" என்றார்.

"ஐயா! நான் அழகற்றவன்தான். ஆனால் எனக்கு ஆசை கிடையாதா? இதயம் கிடையாதா? இந்தப் போட்டியில் வெற்றி பெற்று விடுவேன் என்ற திடநம்பிக்கை இருக்கிறது!" என்றான் வளவன்.

அன்று கிராம மக்கள் புடைசூழ மலைச் சிகரத்தையடைந்தான் வளவன். தேவானையும் கண்களில் நீர் பெருகி வழிய வந்தாள். மல்லியின் முகத்திலோ கர்வமும் அலட்சிய பாவமும் நிறைந்திருந்தன.

வளவன் ஒவ்வொரு பாறையாகப் பிடித்துக் கொண்டு வெகு ஜாக்கிரதையாக ஏறினான். சிரிப்பும் கோஷமும் அவன் மேலே ஏற ஏறக் குறையலாயின. மரணத்தின் வாசல் தனது கோர வாயைத் திறந்து கொண்டு அவனை ஏற்கத் தயாராக இருந்தது.

ஒரு தடவை வளவன் முக்கால்வாசி ஏறியதும் திரும்பிப் பார்த்தான். மல்லியின் முகத்திலே அலட்சிய பாவம் தொனிப்பதையும், தேவானை கண்ணீர் பெருக்கியபடி காட்சியளிப்பதையும் கண்டான்.

கடைசியில் உச்சி முகட்டை அடைந்து பூவைப் பறித்து விட்டான் வளவன். ஆனால் இதென்ன? 'மல்லி தன் முகத்தை எதற்குத் திடீரென்று மூடிக் கொண்டு விட்டாள்? தேவானை...!... அவள் முகத்தில் ஆனந்தம் அல்லவா கரைபுரண்டோடுகிறது? இப்படியும் ஒரு பெண் உண்டா?

ரோஜா மலரின் காம்பை வாயில் கடித்தபடியே மெதுவாக இறங்கினான் வளவன்.

அங்கே கூடியிருந்த அனைவருடைய முகங்களும் கருகிப் போய் விட்டன. பூவைப் பறித்து விட்டதில், காதலில் வெற்றி பெற்றதில் அவன் இதயம் பூரித்தது. இறங்கும் பொழுதும் மரணம் கை நீட்டியது. ஆனால் பூவின் மணமும் மல்லியை அடையும் பாக்கியமும் அவனுக்குத் தெம்பையும் தைரியத்தையும் ஊட்டின.

மலை உச்சியிலிருந்து இறங்கியபொழுது வளவனை ஒருவரும் கைதட்டி வரவேற்கவில்லை. ஆரவாரத்தோடு பூமாலை யணிந்து அவனைக் கௌரவிக்கவில்லை. ஆனால் தேவானை மட்டும் மகிழ்ச்சிப் புன்முறுவலோடு நின்றாள். ஆனால் மல்லி!....

"அப்பா! அவனிடமிருந்து அந்தப் பூவை வாங்கித் தாருங்கள்!" என்றாள் மல்லி தன் தந்தையை நோக்கி.

"இதென்ன அம்மா, இது! மரணத்தை வென்று மலரைக் கொய்து வந்த அவனை நீ மலர்ச்சியுடன் சென்று ஏற்றுக் கொள் அம்மா!" என்றார் சொக்கன்.

"அப்பா, எனக்கு மலர்தான் வேணும்!"

"இதென்ன, அம்மா! உன்னுடைய நிபந்தனையின்படி அவனை ஏற்றுக் கொள்வதாகத் தானே அப்பொழுது கூறினாய்?" என்றார் சொக்கன் கடுமையாக.

"ஆனால் அவன் வெற்றி பெற்று விடுவான் என்று நினைக்கவில்லை....!"

வளவன் ஒரு கணம் திகைத்து நின்றான். பிறகு அவன் மல்லியை இலட்சியம் செய்யாமல் வெற்றிப் பொருளான ரோஜா மலரோடு விடு விடு வென்று தனித்து நின்ற தேவானையிடம் சென்றான். அவன் உயிர் பிழைத்து விட்டதில் ஏற்பட்ட திருப்தி அவன் முகத்தில் சுடர் விட்டுப் பிரகாசித்தது.


"தேவானை! பணமும் செல்வமும் பகட்டும் எனக்கு மரணத்தை வருவித்தன. ஆனால் உன்னுடைய அன்புதான் என்னை மரணப் பிடியிலிருந்து காத்து விட்டது என்பதை இப்பொழுதுதான் உணருகிறேன். உன் தூய காதலை உணர்ந்தேன். உள்ளத்தில் அரக்கி குணமும் வெளிப் பகட்டும் படைத்த மல்லிக்காக உன்னை நிராகரிக்கத் துணிந்த என்னை மன்னித்து விடு. நீ அழகு படைக்காவிட்டாலும் நிறைந்த இதயம் படைத்தவள். இந்தா! என் வெற்றிப் பொருள் மலர் உனக்குத்தான்" என்று கூறி அவள் கையில் அதைக் காதலின் பரிசாக அளித்தான்.

தன் உள்ளத்தரசனை அடைந்து விட்ட பெருமையில் தேவானையின் முகம் பன்மடங்கு பொலிவுடன் பிரகாசித்தது. அந்த உள்ளத் தழகுக்கு முன்பு மல்லியின் அழகு வாடிப் போய்க் கருகி விட்டது. அடுத்த கணம் சொக்கன் மரணச் சிகரத்தை நோக்கி நீண்ட பெருமூச்சு விட்டார். மல்லி இடிந்து போய்த் துவண்ட மலராகத் தலையைக் கவிழ்த்துக் கொண்டு விட்டாள்.

[ஆங்கிலக் கதை ஒன்றைத் தழுவியது]



நீண்ட, அடர்ந்த
ஒளிக்கூந்தலுக்கு
இளமையின் ஒளியும் அற்புத ஜ்வலிப்பும்
பெற கூந்தலுக்கு கால்கேட் பெர்பியூம்டு
காஸ்டர் ஹேர் ஆயிலை தடவுங்கள். கூந்த
லின் இயற்கை அழகை அது எடுத்துக் காட்டி
எல்லோரையும் பிரமிக்கச் செய்யும்.
காஸ்கேட்
பெர்பியூம்டு காஸ்டர்
ஹேர் ஆயில்
சிக்கனமி வசலை
வாங்கி பணத்தை
மிச்சப் படுத்துக.



இக்கடுங் கோடைக்கு......
ஓரியன்ட்
பலவிதப் பயனுள்ள மின்சார விசிறி
மேஜை விசிறி
சுவரில் பதிக்கும் விசிறி
காபின், & சீலிங் விசிறி
மற்றும் ஏர் சர்குலேட்டர்
இப்படி எந்தவிதமாக வேண்டு
மானாலும் உபயோகிக்கப் புதிய
முறையில் தயாரிக்கப்பட்டது
இவையாவும் ரூ. 70/-தான்
16" SWEEP A.C.
TABLE
WALL BRACKET
CABIN & CEILING
AIR CIRCULATOR
ஓரியண்ட ஜெனரல் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
6, கோர் பிபி லேன், கல்கத்தா-11
டிஸ்ட்ரிபியூட்டர்கள்
M/s. ஹிந்துஸ்தான் டீலர்ஸ் லிட்., 4, ஸ்டிரிங்கர் தெரு, மதராஸ்
தந்தி: "DEALHIND" போன்: 2658

பூவைப் போல...



உங்கள் மேனியை மலரச் செய்வது ரெக்ஸோனா

ஆம், நாள்தோறும் தவறாமல் ரெக்ஸோனா உபயோகித்தால், உங்கள் மேனி அதிக சோபையும், புதுமலர்ச்சியும் பெற்றுவரும்! ஏனெனில், நறுமணமுள்ள ரெக்ஸோனா ஒன்றுதான் கேடில் கலந்த சோப். சரும எழிலுக்கான பற்பல எண்ணெய்களின் விசேஷக் கலவையே கேடில். ரெக்ஸோனாவின் இணையில்லா நறுமணமும், செழிப்புமிக்க, மென்மையான நுரையும் உங்களுக்கு இன்பமூட்டுபவை; அழகு தரும் இந்த சோப்பை தினந்தோறும் உபயோகியுங்கள். ரெக்ஸோனா உங்கள் இயற்கை அழகை வெளிக்கொணரத் துணைபுரியும்!



— கேடில் கலந்துள்ள சோப் இது ஒன்றே

RP. 146-50 TM

ரெக்ஸோனா ப்ரொப்ரைட்டரி லிமிடெடுக்காக இந்தியாவில் தயாரித்தது.

13. இதமான ஆகாரம்



குறிப்பிட்ட உணவுப் பொருள் இதமானது என்று எப்படி நிச்சயிக்க முடியும்? ஒருவனுக்கு இதமானது வேறொருவனுக்கு அஹிதமாகலாமே! ஆகவே, பொதுவாகச் சொல்வதானால் அவனவனும் வழக்கமாகச் சாப்பிட்டு வந்தவற்றை அவனவனுக்கும் இதாகாரமெனச் சொல்லலாம்.

சரீரத்தின் ஆரோக்கியத்தையும், உழைப்புக்கேற்ற பலத்தையும், வியாதிகளை வரவொட்டாமல் தடுத்து நிறுத்தும் சக்தியையும், சரீரம் பெரும்பாலும் நாம் உட்கொள்ளும் ஆகாரத்திலிருந்துதான் பெற வேண்டும். ஒவ்வொருவனின் சரீரத்திலுமுள்ள இயற்கையின் சக்தி, அவனவனும் உண்ணும் ஆகாரத்திலிருந்தே கிரகித்தெடுக்கும் சத்துப் பொருள்களினால் அவன் சரீரத்தை மேற்சொன்ன தரத்தில் நிலை நிறுத்திக் கொள்கிறது. உணவுப் பொருள்களில் சரீரத்தின் ஊட்டத்தையும் உரத்தையும் அதிகரிக்கவல்ல சத்துக்கள் இருப்பது உண்மைதான். அச்சத்துக்களைப் பிரித்து ஒருவன் சரீரத்துக்கு வேண்டியவைகளை மட்டும் வேண்டிய அளவில் கிரஹித்து ஊட்டிப் பேணுவது அவன் சரீரத்தில் அடங்கியுள்ள இயற்கையின் சக்தியாகும். இந்த இயற்கைச் சக்தி, இயங்கி இயங்கி அனுபவம் பெற்றுள்ள வகையிலேயே இயங்குவதற்காக, ஒவ்வொருவனும் தான் உண்டு பழகிய ஆகாரங்களையே உண்ண வேண்டும். இதுவே அவனுக்கு 'இதமான ஆகாரமாகும்.'

செந்நெல், அறுபதாம் நாள் சம்பா, கார், குறுவை, கோதுமை, பார்லி, பச்சைப்பயறு இவையும்; எல்லாவிதக் கீரைகளும், முக்கியமாக முளைக்கீரையும், அரைக்கீரையும்; மற்றும் புடலங்காய், பிஞ்சு முள்ளங்கி, அவரைப் பிஞ்சு, முருங்கைப் பிஞ்சு ஆகியவற்றைக் கறிகளாகச் சமைத்தும்; சமையலில் புளிப்புக்காகப் புளியாரை, புளிப்பு மாதுளை, நெல்லிக்காய் ஆகியவைகளும்; உப்புக்காக வறுக்க இந்துப்பு அல்லது சோற்றுப்பு இரண்டிலொன்றையும்; ஊறுகாயில் நெல்லிக்காய், துரிஞ்சிக்காய் ஆகியவையையும், அசைவ வகையில், மலைப் பிரதேசங்கள் பீடபூமிகள் முதலிய பிரதேசக் காடுகளில் வாழும் மிருகம், பக்ஷிகளின் மாமிசங்களும்; சர்க்கரை, நெய், தேன், பால், மோர் ஆகியவைகளும்; பழங்களில் திராக்ஷை —இவை அனைத்தும் தினந்தோறும் உபயோகிக்கத் தக்கவையாகும். இவை யாவருக்கும் பத்தியமாகும். இவற்றை உண்டு, சரீரத்துக்குப் பழக்கப்படுத்திக் கொண்டால் இவை இதமான ஆகாரமாகும்.

இவ்வினத்தைச் சேர்ந்த இதமான ஆகாரப் பொருள்களால் சமைக்கப்பட்ட உணவேயானாலும், கைபாக, செய்பாகங்களின் குற்றங் குறைபாடுகளாலும், வேறு சில காரணங்களாலும் அவை ஏற்கத் தகாதவையாகலாம்.

மனசுக்கு அருவருப்பு தரத்தக்கது; காய்ந்து போய்ச் சமைத்த சட்டியின் அடிப்பிடித்தது; பக்குவம் கெட்டுக் கஞ்சியுடன் தொக்கிக் குழைந்து போனது; மிருதுவாயும் நெய்ப் பசையுள்ளதாயுமின்றிக் கடினமாயும் வறட்சி மிக்கதாயுமிருப்பது; அதிக உஷ்ணம் அல்லது மிகக் குளிர்ச்சி பொருந்தியது; கல், மண், புல், உமி, மயிர் இவை போன்றவை கலந்து தூய்மை யற்றதாயிருப்பது; அதிக நீரில் ஊறிப்போனது; ஒரு தரம் சமைத்தது ஆறிப்போக, அதை மறுபடியும் சூடாக்கியது; அதிக உப்பு சேர்ந்தது ஆகியவை ஏற்கத் தகாதவையாகும்.

தயிரும் இல்லாமல் மோரும் இல்லாமல் உடைந்தோ-இரிந்து போயோ இருக்கும் இரண்டுங்கெட்ட 'கிலாடம்' என்னும் பொருள்; வேகவிடாத பச்சை முள்ளங்கி, மற்றும் மிகவும் முற்றிப்போன முள்ளங்கி, மிகவும் இளைத்து மெலிந்து போன மிருகங்களின் மாமிசம், உலர்ந்து போன மாமிசம்; பன்றி, செம்மறி ஆடு, எருமை, பசு இவற்றின் மாமிசம்; மீன் ஆகியவை ஏற்கத்தக்கவை யல்ல.

உளுந்து, மொச்சைக் கொட்டை ஆகியவையும், கருணை தவிர்த்து மற்றுமுள்ள கிழங்குகளும், மாப் பண்டங்களும், உலர்ந்து போன கீரை வகைகளும் புதிய வெல்லமும் அவ்வாறே ஏற்கத் தகாதவைகளாகும்.

பருவங்கள் மாறுவதின் காரணமாக நமது தேகத்தின் நிலையிலும் சில மாற்றங்கள் ஏற்படுகின்றன. இதனால் ஆரோக்கியமும் சிறிது பாதிக்கப்படும். அவ்வித மாற்றங்களால் ஆரோக்கியம் கெடாமலிருக்க நமது ஆகாராதிகளைச் சிறிது மாற்றிக் கொள்வது அவசியம்.

சித்திரை, வைகாசி மாதங்கள் சேர்ந்த வஸந்தருது என்னும் இளவேனிற் காலத்தில் கைப்பு, கார்ப்பு, துவர்ப்புச் சுவையுள்ளதும், கொழுப்புச் சத்தில்லாத வறட்சியும் வெம்மையுமுள்ள ஆகாரங்கள் இதமானவையாகும். மேலும், இக் காலத்தில் மீசுரமுறும். கபத்தினால் செரிப்புத் தீ வன்மை குறையும். பசி இராது. ஆகவே செரிப்பதற்குக் கடினமான ஆகாரங்களைச் சாப்பிடக் கூடாது. அவ்விதமே தண்மை, அதாவது குளிர்ச்சி மிக்க ஆகாரங்களைத் தவிர்க்க வேண்டும். நெய்ப்பும் தணிப்பும் உள்ளவையும், புளிப்பு இனிப்புச் சுவையுள்ள பண்டங்களும், பகல் உறக்கமும் இதமற்றவையாகும்.

ஆனி, ஆடி மாதங்கள் சேர்ந்த 'கிரீஷ்மருது' என்னும் முதுவேனிற் காலத்தில், இனிப்புச் சுவையுள்ளதும் நெய்ப்பு மிக்கதுமான தண்மை மிகுந்த ஆகாரங்கள் இதமானவையாகும். இக்காலத்தில் தான் கோடை (மேற்காற்று) வீசுவது. கானல் தோன்றும். வறட்சி அதிகரித்து வாயுவும் மீசுரமுற்று உடல் வலிமை மிகவும் குறைந்து போய் விடும். சரீரத்தின் சகிப்புத் தன்மையும் குறையும். ஆகவே, இக் காலத்தில் உப்பு, கார்ப்பு, புளிப்புச் சுவையுள்ள பண்டங்கள் அஹிதமானவை. தேகாப்பியாசம் ஏற்றல்தகாது. வெய்யிலில் அலையக்கூடாது.

ஆவணி, புரட்டாசி மாதங்கள் சேர்ந்த 'வர்ஷ ருது' என்னும் கார் காலத்தில் வாடைக்காற்று வீசும். முதுவேனிற் காலத்தில் தினம் தினம் குறைந்து வந்த தேக பலமும் சகிப்புத் தன்மையும் முற்பகுதியில் ஓரளவு நிலை பெற்றிருந்து இப்பருவத்தின் பிற்பகுதியில் சிறிதுசிறிதாக அதிகரிக்கத் தொடங்கும். இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு என்னும் சுவையுள்ளதும் நெய்ப்பும் வெம்மையுமுள்ள ஆகாராதிகள் இக் காலத்துக்கு இதமானவை. செரிப்புத்தீ முழுதும் நன்னிலை பெற்றிராது. ஆகவே எளிதில் ஜெரிக்கக் கூடிய ஆகாரங்களைச் சிறிய அளவில் சூடாறும் முன்பு உண்பதுதான் நல்லது. புதிய மழையினால் தண்ணீர் கலங்கி இருக்கும். இதைத் தவிர்த்துத் தெளிந்த பின்னர் சூடாக்கிக் குடித்தல் இதம். ஈரத் தரையில் நடத்தல் தவிர்க்க வேண்டும். பாதக்குறடு அல்லது பாதரக்ஷை இல்லாமல் வீட்டின் உள்ளே கூட சஞ்சரித்தல் அஹிதம். உடைகளுக்கெல்லாம் சாம்பிராணி அகில் போன்றவற்றின் புகை கொடுத்துச் சூடான பிறகு உடுத்துவது நல்லது. வாடைக் காற்றினால் சீதலம் தட்டாமல் பகலில் தூங்காமல் தினசரி திட்டத்தை வகுத்துக் கொள்ள வேண்டும்.

ஐப்பசி, கார்த்திகை மாதங்கள் சேர்ந்த 'சரத் ருது' என்னும் கூதிர் காலத்தில் குளிர் காற்று வீசும். இக் கீழ்க்காற்று இதமல்ல. கார்காலத்தில் தன்னிலை பெற்றிருந்த பித்தம், இக் காலத்தில் மீசுரமுறும். இனிப்பு, கைப்பு, துவர்ப்புச் சுவையுள்ளதும், வறட்சியும் தண்மையும் கூடிய பண்டங்கள் இதமானவை. தேகபலமும் சகிப்புத் தன்மையும் சிறிது சிறிதாகப் பெருகும். பனி வெய்யில் கீழ்க்காற்று ஆகியவை அஹிதமானவை. விருந்துச் சாப்பாடு, வயிறு புடைக்கப் புசித்தல் இவற்றையும் நெய்மை மிகுந்த ஆகாராதிகள், தயிர், நல்லெண்ணெய் போதை தரும் பானங்கள் ஆகியவற்றையும் அறவே தவிர்க்க வேண்டும்.

மார்கழி, தை மாதங்கள் சேர்ந்த 'ஹேமந்த ருது' என்னும் முன் பனிக் காலத்திலும், மாசி, பங்குனி மாதங்கள் சேர்ந்த 'சிசிர ருது' என்ற பின்பனிக் காலத்திலும், ஏறத்தாழ ஒரேவிதமான ஆகார விஹாரங்கள் இதமானவை.

இக்காலங்களில் முறையே கொண்டல் என்னும் கீழ்க்காற்றும், தென் கீழ்க் காற்றும் ஏற்படும்.

இவ்விரண்டு பருவ காலங்களிலும் இனிப்பு, புளிப்பு, துவர்ப்புச் சுவையுள்ள நெய்ப்பும் குளிர்ச்சியும் உள்ள ஆகாராதிகள் இதமானவை. சகல காரியத்துக்கும் வெந்நீரையே உபயோகித்தல் அவசியம். இவ்விரு பருவங்களை 'சீத காலம்' என்பர். இக் காலத்தில் சரீர பலமும் சகிப்புத் தன்மையும் மிகுந்திருக்கும்.

பொதுவாகச் சொல்லப்போனால் அவரவருக்கும் பழக்கப்பட்ட ஆகாரங்களை—அறுசுவையுமுள்ளதாகத் தான் எல்லாக் காலத்திலும் ஏற்பது நல்லது. ஆயினும், பருவங்களின் நிலைமைக் கேற்ப ஒவ்வொரு பருவத்திலும் முக்கியமாக இதமெனத் தெரிவிக்கப்பட்டவைகளை அந்தந்தப் பருவங்களில் அதிகமாக ஏற்பதுதான் இதம்.


இதமான ஆகார விஷயத்தை இம்மட்டோடு நிறுத்தி, அளவோடு உண்ணல் என்னும் விஷயத்தை அடுத்த கட்டுரையில் காண்போம். (தொடரும்)


ஸ்நானத்தின் புதுமை யின்பத்தை
நாள் முழுதும் அனுபவித்திட
ஹிமாலயா புக்கே
டால்கம் பவுடர்
Himalaya Bouquet
TALCUM POWDER
Erasmic
Himalaya Bouquet
TALCUM POWDER
வாங்கும்போது ரெக்ஸோனா
மேலுரைகளைக் கொடுத்தால்
விலை குறைவு
வியாபாரியைக் கேளுங்கள்!
லண்டனிலுள்ள இராஸ்மிக் கம்பெனி
லிமிடெடுக்காக இந்தியாவில் தயாரித்தது
HB. 16A-50 TM

கல்கெமிகோவின்

காந்தரிடைன்

கூந்தல் தைலம்



மிகவும் சுத்தமான ஆலிவ் ஆயிலும் மற்ற தாவர எண்ணெ களும் சிறந்த தரமான காந்த ரிடைனுடன் விஞ்ஞானமுறை யில் கலக்கப்பட்டிருக்கின்றன. இந்தைலம் அழுக்கை நீக்கி முடிவளர்ச்சியைத் துரிதப் படுத்துகிறது.


இதன் நறுமணம் அலாதி யானது. மிகச் சிறந்தது.

5 அவுன்ஸ் அழகான சீசா

கல்கத்தா கெமிகல் கோ. லிட்., கல்கத்தா-29.

CAN-TM-1

தென் இந்திய ஆபீஸ் : 5/149, பிராட்வே, சென்னை-1



FOLDELUXE

போல்டிலக்ஸ்

நாற்காலிகள்

★ நிமிஷத்தில் மடிக்கக் கூடியவை ★ நீடித்து உழைக்கக் கூடியவை

★ உயர்ந்த எஃகு குழாய் சட்டங்கள் ★ பல வர்ணங்களில் கிடைக்கும்

ஹோட்டல்கள், கிளப்புகள், ஆஸ்பத்திரிகள், சினிமா, நாடகக் கொட்டகைகள், நூல் நிலையங்கள், வீடுகள் முதலான இடங் களுக்கு உபயோகமாகும்படி பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்டவை.

தென்னிந்தியாவுக்கு விற்பனை ஏஜண்டுகள் :

அடிஸன் & கம்பெனி பிரைவேட் லிமிடெட்

மதராஸ் - - பெங்களூர்

மறதி

முன்ஷி

“அப்படியானால் எல்லாருக்கும் இன்றைக்கே எழுதி விட வேண்டியதுதானே, அப்பா?” என்று கேட்டாள் வைதேகி. மனம் சஞ்சலமாயிருக்கும் போது சடபட வென்று ஏதாவது செய்தால் அவளுக்கு ஓரளவு ஆறுதலாக இருக்கும்: அது அவள் சுபாவம்.


“ஆம், அம்மா! எழுத வேண்டியதுதான். அன்று ‘உண்டு, உண்டு’ என்று எழுதியவர்களுக்கெல்லாம் இன்று ‘இல்லை’ ‘இல்லை’ என்று எழுத வேண்டும். வெட்கக்கேடு. கார்டு, கவர் வாங்கியாக வேண்டும். சின்னம்பி எங்கே!” அவர் குரல் துக்கத்தால் அலுத்துப் போயிருந்தது.

அதைக்கேட்ட தாயார் “என்ன அவசரம், இரண்டு நாட்கள் பொறுத்து எழுதலாம் என்று நான் சொன்னேன். தேன் குடித்த நரிபோல், உற்சாகப்பட்டீர்கள். என் வார்த்தையை லட்சியம் செய்தால்தானே!” என்று அங்கலாய்த்துக் கொண்டாள்.

“சாதாரண சந்தர்ப்பத்தில் நீ சொல்வது சரிதான். ஆனால், முக்கியஸ்தனும் அவன் தாயாரும் பார்த்து, விசாரித்துக் கொண்டு, ‘எங்களுக்குப் பூர்ண சம்மதம்; உங்களுக்குச் சம்மதம்தானா? இரண்டொரு நாட்களில் இதர பந்துக்கள் வந்து பார்ப்பார்கள். ஆனால் அது நமக்குள் பரஸ்பரமாகத் தெரிந்து கொள்வதற்காகத்தான். முகூர்த்தம் சீக்கிரமே வைத்தால் நல்லது’ என்று சொன்ன பிறகு, மணமகனின் தம்பியின் அபிப்பிராய பேதத்தால் எல்லாம் தலைகீழாக மாறும் என்று யார் எதிர்பார்த்தார்கள்? நம் குடும்பத்தில்தான் எல்லாரும் பம்பாய், கல்கத்தா, சிம்லா என்று சிதறிக்கிடக்கிறார்களே! நமக்கும் அவசரம். ூஅவர்களும் அவசரப்பட்டார்கள். பதினைந்து நாட்களுக்குள் சௌகர்யமான முகூர்த்தமும் கிடைத்திருக்கிறது. இந்தச் சமயத்தில் ஒரு நாள்கூடத் தாமதிப்பதற்கில்லை. ஆபீசுகளில் லீவு கேட்டு வாங்க நான்கு நாட்களாவது வேண்டாமா? இல்லாவிட்டால், நமக்கென்ன இவ்வளவு உலக அனுபவம் இல்லையா? ...சரி, சின்னம்பி எங்கே?”

“போங்கப்பா, ‘சின்னம்பி’ வேண்டாம். நாராயணா என்று கூப்பிடுங்கள். பையன்கள் கேலி செய்கிறார்கள். ‘உயரம் ஐந்து அடி ஆறு அங்குலம்; பெயர் சின்னம்பியாம்’ என்று அந்த வடக்கத்தியான் சோட்டேலால் கூடப்பரிகாசம் செய்கிறான்...”

வைதேகி சிரித்துக் கொண்டே, “சோட்டேலால்தானே சிரிக்கிறான்? நீ அவனைச் ‘சோட்டே லால்!’ என்று அழைத்துச் சிரித்து விடு! அவன் பெயருக்கும் ‘சின்



ணம்பி' என்றுதான் அர்த்தம்...அது போகட்டும் நாராயணு, எட்டு கார்டும் நாலு இன்லண்டு லெட்டரும் வாங்கிவா'' என்ருள்.

''சரி கொடு, எண்ணஞ்சு நாற்பது. நாலு பத்து நாற்பது. எண்பது நயே பைஸே—மூன்று கால் ரூபாய், ஐந்து நயே பைஸே'' என்ருன் நாராயணன்.

* * *

''அப்பா, லக்ஷ்மி அக்காவுக்கு இன்லண்டு லெட்டரிலேயே எழுதுங்கள். பாக்கி இடத்தில் நான் எழுதுகிறேன்'' என்று வைதேகி கேட்டுக் கொண்டாள்.

வெகுநேரம் வரையில் பேணுவில் மை உலர்ந்து கொண்டிருந்தது; எப்படி ஆரம்பிப்பது என்று வைதேகிக்குத் தெரியவில்லை; கடைசியில்பரபரவென்று அதில் வரைந்து தள்ளி விட்டாள்.



''...அப்பா வேண்டுமென்றே 'நமது நிருபர்' அனுப்பும் பத்திரிகைச் செய்தி போல் பாவமில்லாமல் எழுதியிருக்கிருர். உண்மையில் என்னதான் நடந்தது என்று அறிய, நீ ஆவலாய் இருப்பாய். தவிர, ஏன் இப்படி அவசரப்பட்டு எல்லாருக்கும் எழுதினுர்கள், ஜோஸியரைக் கூப்பிட்டு ஏன் முகூர்த்த நாட்களின் ஜாப்தா தயாரித்தார்கள் என்று எல்லாரும் கேட்கக் கூடும். நீயே கேட்பாய். நடந்ததை வரிசைக் கிரமமாகச் சொல்கிறேன், கேள்:

நம் குடும்பத்தைப் பற்றித் தீர விசாரித்துத் தங்கள் அந்தஸ்துக்குத் தகுந்தது என்று நிர்மானித்த பிறகே, பிரியப்பட்டு ஜாதகம் கேட்டார்கள்.

பலவிதத்திலும் தங்கள் திருப்தியை அறிவித்து, நம் சம்மதத்தையும் தெரிந்து கொண்டு, 'சீக்கிரம் முகூர்த்தம் வைத்தால் நல்லது, பிற்பாடு இதர பந்துக்கள் வந்து பார்ப்பது பெயரளவுக்குத்தான். எங்கள் சம்மதந்தான் நிச்சயம்' என்று சொல்லி விட்டுப் போனுர்கள்.

நாங்கள் எல்லாக் காரியங்களுக்கும் ஜாபிதாக்கள் தயாரித்துக் கொண்டு உங்களுக்கெல்லாம் எச்சரிக்கையாக எழுதினேம்.

நேற்று அவருடைய தம்பி, அக்கா, தங்கை, சித்தி உள்படப் பல உறவினர்கள் வந்தார்கள். அவர் வரவில்லை; தாய் கூட இருந்தாள். தாயின் களையற்ற முகமும் அவர்களுடைய ஜாடைகளும், கச-புச சம்பாஷணைகளும் சந்தேகத்தைக் கிளப்பின.

இன்று தம்பி மகாநுபாவன் வந்து, அவர்களுக்கு இஷ்டமில்லை என்பதைப் பாடம் ஒப்புவிப்பது போல் இங்கிலீஷில் சொன்னுர்.

அப்பா, 'நல்ல வேளை! சீக்கிரம் சொல்லி விட்டீர்கள்! சந்தோஷம். ஆனல் அன்று முக்கியமானவர்கள் கொடுத்த வாக்குக்கு என்ன மதிப்பு?' என்று தமிழில் கேட்டார், அம்மாவை உத்தேசித்து. ஸ்ரீமான் இளைய ராஜா இங்கிலீஷில், 'எனக்குத் தான் சம்பாத்தியம் அதிகம்; நான் தான் குடும்பத்துக்காக அதிகம் செலவிடுகிறேன்; குடும்பத்தில் என் வார்த்தைதான் முக்கியம். அம்மா ஒரு அப்பாவி. அவளுக்கு வெளுத்ததெல்லாம் பால், அவளுக்குப் பேசத்தெரியாது' என்ருர். 'கல்யாணம் செய்து கொள்ள வேண்டிய உங்கள் தமையன் மிஸ்டர் லக்ஷ்மணனும் சம்மதித்தாரே' என்று அப்பா கேட்டதற்கு, 'அண்ணு சம்மதிக்கவேயில்லை. நாங்கள் பார்த்தபிறகு தான் அபிப்பிராயம்சொல்லுவதாகச் சொன்னுர். அவர் வாக்களித்ததாக நீங்கள் சொல்கிறீர்கள்; அளிக்கவில்லை என்கிருர் அவர். அவர் வார்த்தையை நான் நம்புகிறேன். அதற்குமேல்...' என்ருர். அப்பா 'அதற்கு மேல் வியாக்யானம் வேண்டாம். தெளிவாயிருக்கிறது' என்று பேச்சை நறுக்கி நிறுத்தினுர். அவர்விடை பெற்றுக்கொண்டு போய் விட்டார். அந்தப் பதற்றத்தில் அவருக்காகப் போட்டிருந்த காப்பியையும் தரமறந்து போய் விட்டோம். நாங்களே குடித்தோம். திக்காய் நன்ருக இருந்தது.


இது நாங்கள் கற்பனை செய்யாத அநுபவம். இன்னெரு எதிர் பாராத சங்கதி. தாயையும்மகனையும் பார்த்ததும் எனக்கு அவர்களைப் பிடித்துப் போய் விட்டது. அவருடைய சம்பளம் குறைவு; அபிவிருத்திக்கும் அதிக இடம் இல்லை. சிரமப்பட்டுத்தான் குடித்தனம் நடத்த வேண்டும். பிரதிகூலமாக இவ்வளவு இருந்தும், நான் பிரியப்பட்டு அவர்களுடன் குடித்தனம் செய்வது போல் மனம் திரும்பத் திரும்பச் சித்திரங்கள் தீட்டிக் கொண்டே இருந்து விட்டது, இந்த மூன்று நான்கு நாட்கள். இந்த அசட்டுக் கிறுக்குத்தனம் எனக்கே விந்தையாக இருக்கிறது. 'இந்தத் தொல்லை உனக்கு எதற்கு?' என்றுதான் நீயும் சொல்லுவாய். இதற்கெல்லாம் காரணம் சொல்வது கஷ்டம். அவர்கள் வசிக்கும் ஹனுமான் ரோடு கறுப்பா, சிவப்பா என்று எனக்குத் தெரியாது; அவர்களுடைய 8-ம் நம்பர் வீடு கிழக்குப் பார்த்ததா, வடக்குப் பார்த்ததா என்றும் எனக்குத் தெரியாது. அப்படியிருந்தும் நான் என்னை அடிக்கடி அந்த வீட்டில் காண்கிறேன். ஏன் என்பதுதான் எனக்குத் தெரியவில்லை...


இப்பொழுது எனக்குத் தம்பியின் மேல் அருவருப்பாகவும் அண்ணன் மேல் மிகவும் அனுதாபமாகவும் இருக்கிறது. குடும்பங்களில் சிலருக்கு இந்தமாதிரி அதிக மதிப்பு ஏற்பட்டு விடுகிறது. முன்பு எழுதின சேலத்துக்காரர் விஷயத்தில் கூடத் தம்பிதான் இடையில் நின்ருனும். அங்கேயும் சம்பாத்திய வித்தியாசமும் சின்னவனின் ரயில்வே பாஸ் தாயாருக்குக் கிடைப்பதும் தான் சலுகைக்கு முக்கிய காரணம். இதையெல்லாம் நினைக்கும்போது, அண்ணனைவிடத் தம்பிக்கு அதிகச் சம்பளம் இருக்கக்கூடாது என்று சட்டம்



பாருங்கள்!
சொத்தையைத்
தடுக்க விசேஷ
பாதுகாப்பு*
TEST K.42
KOLYNOS
கோலினஸ்
ஸூப்பர்-
வொய்ட்
டூத்பேஸ்ட்
உங்கள் நகையழகைப் பாதுகாக்கும்
* 'கோலினஸ் ஸூப்பர்-வொய்ட்' டூத்பேஸ்ட் (படத்தில் வெள்ளை பாகம்) சொத்தைக்குக் காரணமான கிருமிகளைத் (கருப்பு பாகம்) தடுக்கிறது (சாம்பல்நிற வட்டம்) என விஞ்ஞான பரீட்சை K. 42 நிரூபித்துள்ளது.
பெப்பர்மின்டின் குளுமை வாய்ந்த இனிய சுவையை அனுபவியுங்கள்!
Kolynos TOOTHPASTE
Koly
Kolynos SUPER WHITE TOOTHPASTE
பாருங்கள்! பிடிப்பதற்கு சௌகரியமான பிரத்தியேகவித மூடி
ஜெப்ரி மானேர்ஸ் அண்ட் கோ. பிரைவேட் லிட்.
GK 4776 (A)

சுகமான எழுதும் முறையை
அனுபவிக்கும் லட்சக்கணக்
கினர் குழுவில் சேருங்கள்.





Plato

பேனாவின் முனை பார்க்க மெல்லிய தாக இருந்தாலும், அது கூர்மையை இழக்காமல் ரீம் கணக்கான காகிதத் தில் எழுதும் உறுதி பெற்றிருக்க வேண் டும். ப்ளாடோ நிப் மென்மையான தோற்றத்துடன் உழைக்கும் தன்மை யும் பெற்றுள்ளது.

விலை ரூ. 4 முதல் ரூ. 18 வரையில்.

ஒரு மாத்ரே தயாரிப்பு PLATO REGD.

சகல வியாபார விவரங்களுக்கும்
கீழ்க்கண்ட எங்கள் பூர்ண விநியோக
உரிமையாளர்களுக்கு எழுதவும்.
பெஸ்ட் பௌண்டன் பென் டிபோ,
79, தேவ்கரன் மான்ஷன்,
ப்ரின்ஸெஸ் தெரு, பம்பாய்-2

SH/LPI-MP-427 A.

வந்து விட்டால்கூட நல்லது! சும்மா விளையாட்டுக்குச் சொல்கிறேன்.....நம்ம சீனு மாமா, கிருஷ்ணன் முதலியவர்களெல்லாம் தம் சித்தப்பா மாமா வகையருக்களின் குடும்பங்களை எப்படிக் காப்பாற்றுகிறார்கள்! இப்படியா தங்கள் அபிப்பிராயங்களைப் பிறர் மேல் சுமத்துகிறார்கள்!

தற்சமயம் ஹனுமான் ரோடு எட்டாம் நம்பரிலும், பாவம், சந்தோஷம் இருக்காது என்று நினைக்கிறேன். தாயாருக்கும் 'அண்ணனு'க்கும் ஏமாற்றமாகத் தானிருக்கும். நம் சம்பந்தம் பல விதத்திலும் அவர்களுக்குப் பொருத்தமானது, சாதகமானது; அது அவர்களுக்கும் தெரியும். மொத்தத்தில் லாபம் அவர்களுக்குத்தான். 'அவர்' ஏன் இப்படித் தாழ்ந்து போகிறார் என்று தெரியவில்லை. சொந்த சம்பாத்தியத்தில் காப்பிக்குக் காணவிட்டால் கஞ்சி; கஞ்சிக்கும் காணவிட்டால் குழாய் ஜலம்; சுயமரியாதை கலந்த குழாய் ஜலம் உடலுக்கும் மனத்துக்கும் புஷ்டிகரமானது. நான் அந்த எட்டாம் நம்பர் வீட்டில் குடித்தனம் செய்தால் தம்பியின் மாதப் பணத்தை ரூபாய் 35, 40 க்குள் நிறுத்தி விடுவேன். சமாளிக்க முடியாமலே போனால், நான் இனி பள்ளிக்கூட வேலைசெய்ய முடியாமல் போனாலும், ஒன்றிரண்டு ட்யூஷன் வைத்துக் கொண்டு, குறைவைப் பூர்த்தி செய்வேன். அப்பாவிடம் கேட்டுக் கொஞ்சம் நெல்லும்—என் பங்குக்கு—வாங்கிக்கொள்ளலாம். கொடுத்து வைக்காதவர்கள்.

அக்கா! அகாரணமாய் மனம் உடைந்து பிதற்றுகிறாளே என்று அநுதாபத்துடன் நினைக்கிறாயா? அப்படியொன்றுமில்லை. இந்த ஆபத்திலிருந்து தப்பித்துக் கொண்டதற்கு சந்தோஷப்பட வேண்டும். 'சாதுவான கணவரும், அதிகாரப் பிரியரான மைத்துனரும், காற்றுப் பக்கம் சாயும் மாமியாரும் - அப்பப்பா, எவ்வளவு கஷ்டம்!

கடிதம் வந்து சேர்ந்ததற்குப் பதில் எழுது. இங்கே எல்லாரும் சௌக்யம். சின்னம்பி - தப்பு, தப்பு,-நாராயணன் (அவன் ஐந்து அடி 6 அங்குலம் உயரம் இருக்கிறானம் - இனி சின்னம்பி, குட்டிப் பாப்பா என்றெல்லாம் யாருக்கும் பெயரிடக் கூடாதாம்!) இன்னும் விளையாட்டுப் புத்தியாகத்தான் இருக்கிறான். நல்லவேளை, எப்படியோ பரீக்ஷைகள் பாஸ் செய்து விடுகிறான். இந்தக் காலத்தில் பையன்கள் இப்படித்தான் இருக்கிறார்கள்.

ஷீலாவுக்கு என்ன பாட்டு சொல்லித் தருகிறார்கள்?

வேறு விசேஷமில்லை.

இப்படிக்கு உன் அன்புள்ள
வைதேகி

குறிப்பு: இந்தக் கடிதத்தை வேறு யாரும் படிக்க வேண்டாம். சுக்குநூறாய்க் கிழித்துப் போட்டு விடு.

சில நாட்களுக்குப் பிறகு, லக்ஷ்மணன் சில மத்தியஸ்தர்கள் மூலம் தான் எல்லாச் சங்கதிகளையும் பற்றி மறுபடியும் சிந்தித்ததாகவும் இந்தச் சம்பந்தத்தை மிகவும் கோருவதாகவும் தெரிவித்து, பெண் வீட்டாருக்கு இதில் ஏதாவது ஆட்சேபம் உண்டா என்றும் விசாரித்திருந்தார்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

அருள்வாக்கு

இக் காலத்தில் நவீன சாஸ்திரங்களைக் கற்றவர்கள் அநேக விசித்திரமான வஸ்துக்களைச் செய்கிறார்கள். ஆனால் சிருஷ்டியில் உள்ள வஸ்துக்களை வைத்துக் கொண்டுதான் அவர்கள் வேறு வஸ்துக்களைச் செய்ய முடிகிறது. ஈசுவரன் சிருஷ்டித்த இந்த வாழை இலையை அவர்கள் செய்ய முடியாது. ஈசுவரனுடைய வல்லமையை இந்த ஒரு விஷயமே காட்டுகிறது.

ஸ்ரீ சங்கராச்சாரியார், காமகோடி பீடம்

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

வைதேகியின் தகப்பனார் தக்க மனிதர்களைக்கூட வைத்துக்கொண்டு, தம் சந்தேகங்களையெல்லாம் தெளிவாக்கி, சகோதரர்களிடையே மனத்தாங்கல் உண்டாக்கிக் கொண்டே புது இல்லற வாழ்க்கை ஆரம்பமாகக் கூடாது என்றும் வற்புறுத்தினார். அதற்குத் திருப்திகரமான சமாதானங்கள் கிடைத்தன. தம்பிக்கு வேறு ஊருக்குச் சென்று சுயேச்சையாக இருக்க விருப்பம்; ஆனால் குடும்பத்தின் பொருளாதார நிலையை உத்தேசித்து அது உசிதமில்லாமல் இருந்தது; இப்பொழுது அண்ணனே செல்வாக்குள்ள மனிதர்கள் மூலம் சிபார்சு செய்ததில் தம்பிக்கு ஊர் மாற்றம் நிச்சயமாகி விட்டது; சமீபகால நிகழ்ச்சிகளால் அண்ணனும் ஓரளவு மனப் பக்குவம் பெற்றான்—என்பன தெளிவாயின. மறுபடியும் கடிதங்களும் தந்திகளும் பறந்தன. விவாகம் சந்தோஷகரமாக நிகழ்ந்தது. வைதேகி திறமையோடும் நல்ல மனத்தோடும் திருப்திகரமாக இல்லற வாழ்க்கை நடத்தலானாள்.

இப்படி யிருக்கையில் ஒருநாள், வைதேகி தன் தமக்கை லக்ஷ்மிக்கு எழுதின விஸ்தாரமான கடிதத்தை அலமாரியில் கணவரின் துணிகளுக்கிடையே கண்டெடுத்தாள். அவளுக்குச் சுரீர் என்றது. அது அங்கே எப்படி வந்து சேர்ந்தது என்று புரியவில்லை. அதிர்ச்சியாகவும் விளங்காத புதிராகவும் இருந்தது. சாதுர்யமான கற்பனைக் கதையாக இருந்தால் வைதேகி அக்கடிதத்தைத் தந்திரமாக லக்ஷ்மணன் கைக்கு எட்டுமாறு செய்திருக்கலாம். ஒருவேளை, யாராவது, நல்ல எண்ணத்துடன், வக்காலத்துப் பேசும் அந்தக் கடிதத்தை இவ்விடம் சேர்த்திருப்பார்களோ? மேல் விலாசத்தைப் பார்த்தாள்.

ஸ்ரீமதி லக்ஷ்மி,
8, ஹனுமான் ரோடு,
தியாகராயநகர், சென்னை-17

என்ற விலாசம் தெளிவாய்த் தன்னுடைய கையெழுத்தில் இருப்பதைக் கண்டு வைதேகி அதிசயித்தாள்.

"என்ன மறதி! குழப்பத்தால் ஏற்பட்ட ஒரு சிறு கைப்பிசகு எப்படி இருவர் வாழ்க்கையின் போக்கையே மாற்றி விட்டது!" என்று நினைத்து அவள் வியந்தாள்.

"மனமாற்றத்தின் காரணம் நீயேதான்" என்று லக்ஷ்மணன் மழுப்பியதன் கருத்தும் இப்பொழுது அவளுக்குத் தெளிவாயிற்று.

"பஞ்சவடி !"

" ஹோல்டான் !"

மெல்லியலாளின் மெல்லிய குரல் எழவே, பஸ் கிறீச்சிட்டுக் கொண்டு நின்றது. நைலான் சில்க் நழுவி நழுவிவிழ வைதேகி வெகு ஒய்யாரமாகப் பஸ்ஸி லிருந்து இறங்கினாள். 'அதுவே விசாரம், அன்ன விசாரம்' என்பது போல் அப்பொழுது அவள் உள்ளத்தைச் சுற்றி ஒரே சிந்தனை வட்டமிட்டுக் கொண் டிருந்தது.

வயது வந்த ஒரு மங்கையின் சிந்தனை விவாக விஷயத்தைத் தவிர்த்து வேறு எதுவாக இருக்க முடியும்? சிந்தனையில் ஒன்றிப் போய் விட்டிருந்த அவள் அவ சரம் அவசரமாக அடி எடுத்து வைத்த வண்ணம் தோழி திலோத்தமாவின் வீட்டை நோக்கி நடந்தாள்.



ஹோல்டான், பஞ்சவடி !

விஷ்ணு

வாசல் கேட்டைத் திறந்து கொண்டு காம்பவுண்டுக்குள் நுழைந்த அவள், பழகிப் போன வழக்கப்படி கையில் கட்டி யிருந்த கடிகாரத்தை ஒரு முறை பார்த்தாள். பஸ்ஸிலிருந்து இறங்கியபொழுது நான்கு அடிக்க ஐந்து நிமிஷம் இருந்தது. இப்பொழுது பார்த்தால் நான்கு அடிக்க ஒரு நிமிஷம் பாக்கி யிருந்தது.

தினமும் அந்தத் தூரம் நடக்க ஐந்து நிமிஷம் ஆகி வந்தது. இன்று ஒரு நிமிஷம் குறைவாகப் பிடித்தது.

ஏன்?

இந்தக் கேள்விக்கு ஒரு கணக்கு போட்டு அவளே சமாதானம் கூறிக் கொண்டாள்.

விவாக விஷயமான சிந்தனை மனிதனின் மனத்தை ஆட்கொண்டு விட்டால், அவனது நடை வேகம் நூற்றுக்கு இருபது சத விகிதம் அதிகரித்து விடுகிறது என்பதுதான் அவள் கண்ட முடிவு.

எந்த விஷயமாக இருந்தாலும் சத விகிதக் கணக்கு போட்டுப் பதில் சொல்லும் வழக் கம் வைதேகியினிடம் படிந்து போயிருந்தது. " சாதம் பதமாகி விட்டதா ?" என்று அவள் தாயார் அவளை ஒரு சாதாரணக் கேள்வி கேட்டால் கூட அவள் அளிக்கும் பதில் விசித் திரமா யிருக்கும்.

'பதம் ஆகிவிட்டது !' 'இல்லை!' 'பதமாக இன்னும் கொஞ்ச நேரம் பிடிக்கும்!' இது போன்ற பதிலைத் தானே யாரும் சொல்லு வார்கள்? ஆனால் அவள் வாயிலிருந்து மறந்து போய்க்கூட இத்தகைய பதில் வராது. 'தொண்ணூற்றைந்து சத விகிதம் பதமாகி விட்டது !'

'அதற்குள்ளாகவா ? இப்பொழுதுதானே பதி னைந்து சத விகிதம் பதமாகி யிருக்கிறது!' என்பது போன்ற பதில்கள்தாம் அநாயாச மாக வரும்.

கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக அவள் சென்னை சர்க்கார் புள்ளி விவர இலாக்காவில் உத்தியோகம் வகித்து வந்தாள். அநேக இடங்களிலிருந்து வெவ் வேறு விஷயங்களைப் பற்றிப் புள்ளி விவரங்கள் வந்து குவிந்த வண்ணமா யிருந்தன. அவற்றை யெல்லாம் சேகரித்துச் சேகரித்துச் சத விகிதம் கண்டு பிடிப்பதுதான் அவளது தினசரி வேலை. அந்தப் பழக்கமே அவளது வாழ்க்கையிலும், எண்ணச் சுழல்களிலும் கூடப் படிந்து விட்டன. நாளடைவில் ஒவ்வொரு விஷயத்தையும் அவள் கணி தத்தை ஆதாரமாகக் கொண்டே சிந்தனை செய்யும் வகையில் தன்னைப் பழக்கப் படுத்திக் கொண்டு விட்டாள்.

மனிதன் தனது அக்கம்பக்கத்துச் சூழ் நிலையைத் தனக்கேற்ப சிருஷ்டித்துக் கொண்டு விடுகிறான் என்னும் உண்மை ஒருபுறம் இருக்க அக்கம்பக்கத்துச் சூழ்நிலை அவனைத் தனக்கு ஏற்ப வார்த்துக் கொண்டு விடுகின்றது என்பதும் மறுக்க முடியாத உண்மைதானே ?

கதவைத் திறந்து கொண்டு வைதேகி உள்ளே நுழைந்தாள். திலோத்தமா தினப்

படி உட்காரும் இடத்தை நோக்கி அவள் கவனமும் கருத்தும் தன்னை அறியாமலே சென்றன. தோட்டத்தின் ஒரு மூலையில் மாமரம் ஒன்று இருந்தது. அதனடியில் ஒரு ஜமுக்காளத்தை விரித்து ஒரு திண்ணைப்



போட்டுக் கொண்டு திலோத்தமா தினம் போலவே உட்கார்ந்திருந்தாள். கையில் இருந்த புஸ்தகத்தில் அவள் கவனம் பதிந்து போயிருந்தது.

காலடி ஓசை கேட்டுத் திலோத்தமா தலையைத் தூக்கினாள். உடனே கையிலிருந்த புஸ்தகத்தைக் குப்புறப் போட்டு விட்டு, "அடே! ராணியம்மா இன்றைக்குச் சீக்கிரம் வந்துவிட்டாற் போலிருக்கிறதே!" என்றாள்.

செருப்பைக் கழற்றி ஒருபுறமாகப் போட்டு விட்டு வைதேகி அவளருகில் சென்று விரிப்பில் உட்கார்ந்தாள். "இன்று சனிக்கிழமை. இது மகாராணிக்கு மறந்து விட்டாற் போலிருக்கிறது. ஆபீஸ் சீக்கிரம் விட்டு விட்டார்கள்!" என்றவள், "உனக்கு என்ன? நீ கொடுத்து வைத்தவள். கவிதை, கதை, நாடகம், நாவல் என்று ஏதாவது படித்துக் கொண்டேயிருக்கலாம். நூற்றுக்கு நூறு பங்கு நீ 'ஸ்டுடியஸ்' அம்மா! படிப்பில் மூழ்கி விட்டால் நாளும் கிழமையும் உனக்கு எங்கே நினைவிலிருக்கப் போகிறது? அடேடே! மறந்தே போய்விட்டேனே! இன்று உன்னிடம் ஒரு விஷயம் சொல்லிப் போக அல்லவா வந்தேன்!" என்றாள்.

"என்ன?"

"இன்று இரவு ஏழரை மணிக்குச் சிவராமன் என்னுடைய வீட்டுக்குச் சாப்பிட வரப்போகிறார்!"

"அப்படியா? சிவராமனா வரப் போகிறார்? முந்தாநாள் யாரோ தாசரதி என்பவரைக் கூப்பிடப் போவதாக அல்லவா நீ சொல்லிக் கொண்டிருந்தாய்?"

"ஆமாம். ஆனால் அவருக்குக் கல்யாணம் நிச்சயமாகி விட்டது என்பது அப்புறம்தான் தெரிந்தது! மற்றப்படி என் காரியாலயத்தில் இருக்கும் நான்கைந்து பேர்வழிகளில் சிவராமன்தான் இருப்பதற்குள் நல்லவர்!" என்றாள் வைதேகி.

"ஏண்டி அம்மா! உனக்குச் சிவராமனைப் பிடித்திருந்தால், உன் அப்பாவிடம் சொல்லி முயற்சி பண்ணிப் பார்க்கச் சொல்வது தானே?" என்றாள் திலோத்தமா.

"எத்தனை தடவைதான் உன்னிடம் வந்து மண்டையை உடைத்துக் கொள்ளுவாள் ஒருத்தி! ஆயிரம் தடவை சொல்லியிருக்கிறேன் உனக்கு. பெண்ணும் பிள்ளையும் கலந்து பேசித் தாங்களாகவே தங்கள் திருமணத்தைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும் என்பது தீர்மானமான என் அபிப்பிராயம். அப்பா அம்மா கல்யாணம் நிச்சயிக்கப் போனால், பணம் - காசு, சீர் செனத்தி என்றெல்லாம் பேச்சு கிளம்பும். எனக்கு இதெல்லாம் கட்டோடு பிடிப்பதில்லை. சிவராமன் என்னை மணந்து கொள்ள விரும்பினால், என்னைப் பற்றி யோசிக்க வேண்டுமே யொழியப் பணங்காசைப் பற்றி மூச்சு பிரியக் கூடாது!"

"அது சரி..."—பக்கத்தில் கிடந்த துரும்பை எடுத்துப் பற்களால் பதம் பார்த்துக்கொண்டே, "நீ சிவராமனைச் சாப்பிடக் கூப்பிட்டிருப்பதாகச் சொல்கிறாயே, உன் அப்பா - அம்மாவுக்கு இந்த விஷயம் தெரியுமோ?" என்று கேட்டாள் திலோத்தமா.

"ஓ, பேஷாக! அப்பா - அம்மா இரண்டு பேருக்குமே நன்றாகத் தெரியும். ஆனால் நான் சிவராமனை எந்த நோக்கத்தோடு விருந்துக்கு அழைத்திருக்கிறேன் என்பது அவர்களுக்குத் தெரியாது. எங்கள் காரியாலயத்து உத்தியோகஸ்தர் ஒருவர் விருந்துக்கு வருவதாக மட்டுமே அவர்களுக்குச் சொல்லியிருக்கிறேன். ஆனால் அவர்கள் இன்று ஆறரை மணி ஆட்டத்துக்கு ஒரு படம் பார்க்கப் போவதாக முன்பே திட்டமிட்டிருக்கிறார்கள். அதனால் சிவராமன் வரும்போது நான்மட்டும் தான் வீட்டில் தனியாக இருப்பேன். அதோடு இன்னொரு விஷயம். ஆண்களுக்குப் பிடித்தது, பிடிக்காதது, அவர்களுடைய விருப்பு - வெறுப்பு இவற்றையெல்லாம் புள்ளி விவரப்படி கணக்கு போட்டுப் பார்த்து நன்றாக அலசி ஆராய்ந்து தெரிந்து கொண்ட பின்தான் நான் இன்று விருந்து வரிசைகளைக் கணித்திருக்கிறேன்!"

"என்ன? கணித்திருக்கிறாயா? நீ சொல்வது ஒன்றும் எனக்குச் சரியாக விளங்கவில்லையே!" என்று வியப்புடன் கேட்டாள் திலோத்தமா.

பர்ஸிலிருந்து ஒரு காகிதத்தைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டு வெகு உற்சாகமாக வைதேகி பேச ஆரம்பித்தாள்.

உலகில் முதல் ஸ்தானம்

உலகத்தில் உள்ள எல்லா நாடுகளையும் விட, எல்லா மகா சமுத்திரங்களையும் விட மிக மிகப் பெரியது பசிபிக் மகா சமுத்திரம்தான். ஆழத்திலும் பசிபிக் மகா சமுத்திரம்தான் முதல் ஸ்தானம் வகிக்கிறது. மற்ற சமுத்திரங்களைக் காட்டிலும் அதிகமாகப் பசிபிக் மகா சமுத்திரத்தில் பதினாயிரக்கணக்கான தீவுகளும்,



கணக்கில் அடங்காத மீன் வகைகளும் இருக்கின்றன. ஆறரைக் கோடி சதுர மைல் சுற்றளவு உள்ள பசிபிக் மகா சமுத்திரம் உலகத்தின் மொத்த சுற்றளவில் மூன்றில் ஒரு மடங்கு ஆகும்! பசிபிக் மகா சமுத்திரம் ஆயிரக்கணக்கான மைல் நீளமும் அகலமும் உள்ள அட்லாண்டிக் சமுத்திரத்தைப் போல் இரண்டு பங்கு பெரியது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்! உலகத்துக்கு ஆபத்து ஏற்படாமல் இருப்பதற்காக இதுவரை உற்பத்தியாகியுள்ள அணு குண்டு சாதனங்களைக் கடலில் கொட்ட வேண்டுமாயின், அவற்றை மிகவும் ஆழமான பசிபிக் மகா சமுத்திரம்தான் தாங்கிக் கொள்ளும் என்று விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். பசிபிக் மகா சமுத்திரத்தின் அடியில் பெரிய மலைகளும் அதிசயமான குகைகளும் பள்ளத்தாக்குகளும் இருப்பதாக ஆராய்ச்சி நிபுணர்கள் கூறுகின்றனர்.

ஒரு முறை வைதேகியைப் பார்த்தாள். "இதென்ன கண்ணறாவி! பைத்தியம் போல என்னவெல்லாமோ புள்ளி விவரங்கள் சேகரிக்கத் தொடங்கி விட்டாயே!" என்று கடிந்து கொண்டாள்.

"உனக்கு ஏதாவது தெரிந்தால்தானே? மனிதன் ஒரு கொள்கையை வரையறுத்துக் கொண்டால், அதை நிறைவேற்றிக் கொள்ள சாஸ்திர சம்மதமான சுத்த மார்க்கத்தைத் தேட வேண்டியது மிக மிக அவசியமாகும்! இன்று இந்தப் புள்ளி விவரங்கள் மட்டும் கிடைக்க வில்லையென்றால், சிவராமனுக்குப் பிடித்த சமையலாக என்னால் இலேசில் சமைக்க முடியும் என்று எண்ணுகிறாயா? இதெல்லாம் உனக்குச் சொன்னால் புரியாது; செய்துபார்த்தால் தான் தெரியும்!" என்று அடித்துக் கூறினாள் வைதேகி.

"என் ஆருயிர்த் தோழியான உனக்குத் தெரிந்திருந்தாலே போதுமடியம்மா! அது எனக்குத் தெரிந்தாற் போலத்தான்!" என்று கேலியாகப் பதில் சொன்னாள் திலோத்தமா.

"விளங்கச் சொல்கிறேன், கேள்! இன்று நான் சூர்யபவன், ராதாகிருஷ்ணா, புராதன் கபே முதலிய இடங்களுக்குச் சென்றிருந்தேன். அவ் வவற்றின் முதலாளிகளைச் சந்தித்தேன். ஆண்களுக்குப் பொதுவாக என்ன என்ன இன்பண்டங்கள் பிடிக்கும், என்ன என்ன பிடிக்காது என்பதன் புள்ளி விவரங்களை அவர்கள் வாய்மொழியாகவே கேட்டுத் தெரிந்து கொண்டேன். அவர்கள் கொடுத்த கணக்கு மூலம் பெரும்பாலான ஆடவர்களுக்கு - அதாவது சத விகிதக் கணக்குப்படி பார்த்தால், 99.08 பேர்வழிகளுக்குப் பகவடா, உருளைக் கிழங்கு சிப்ஸ், போண்டா, அவல் மிக்ஸ்சர் போன்ற பண்டங்கள்தாம் அதிகமாகப் பிடிக்கின்றன என்று தெரிய வருகிறது. அதோடு சர்பத், சோடா முதலியவை சாப்பிடும் ஆடவர்கள் 28.32 சத விகிதமும், தேநீர் அருந்துகிறவர்கள் 35.46 சத விகிதமும் மற்றவர்கள் காப்பி குடிக்கிறவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதையும் தெரிந்து கொண்டேன். லேட் டிபன் சாப்பிடச் செல்லும் ஆடவர்களில் ஹல்வா, பர்பி, ஜிலேபி போன்ற இனிப்புப் பதார்த்தங்கள் சாப்பிடுகிறவர்களைக் காட்டிலும், தயிர்வடை, போண்டா, உருளைக் கிழங்கு சிப்ஸ், அவல், மிக்ஸ்சர் போன்றவை சாப்பிடுபவர்களின் எண்ணிக்கைதான் அதிகமாக இருக்கிறதாம்!"

இவ்வளவையும் பொறுமையாகக் கேட்ட திலோத்தமா, வியப்பும் மதிப்பும் தோய,


"கேள், இன்று அவர் வந்ததும், முதலில் காரசாரமாக நல்ல அவல் உசிலியும், காப்பியும் கொடுக்கப் போகிறேன். அரைமணி நேரம் உரையாடல்; அப்புறம் சாப்பாடு. 'மெனு' என்ன தெரியுமா? உருளைக் கிழங்கு வறுவல் கறி, வெங்காய சாம்பார், ஆமவடை, தக்காளி தயிர்ப் பச்சடி, காரட் கோசமலி, சாதம்...."

"சாம்பார்! மோர், ரஸம், உப்பு, ஊறுகாய்! 'மெனு' சொல்கிற அழகைப் பாரு! நல்ல கணக்குக்காரி!"

"வரிசையாகச் சொல்ல வில்லையென்றால் அதற்கு இப்படிப் பரிகாசமா பண்ணச் சொல்லியிருக்கிறது? பெயருக்குத் தித்திப்பு வேண்டும் என்பதற்காகக் கோதுமை ஹல்வா கற்கண்டு போட்டுப் பண்ணப் போகிறேன். இம்மாதிரி 99 சத விகிதம் ருசியான சாப்பாட்டைச் சாப்பிட்டபின், சிவராமன் என்னை மணந்து கொள்ள நூற்றுக்கு நூறு விகிதம் தீர்மானித்து விடுவார் என்றே நம்புகிறேன். எப்படி என் 'ஐடியா'?"

"ஒன்னும் கிளாஸ் ஐடியா, போ! நீ இத்தனை கணக்கு போட்டுப் பார்த்தபின் நான் இதுகூடச் சொல்லாமல் இருந்தால் நன்றாயிருக்குமா?" என்றாள் திலோத்தமா. வைதேகியின் பர்ஸுக்கு அருகில் ஒரு புது கிராமபோன் ரிக்கார்டு வைத்திருந்தது. அதைச் சுட்டிக் காட்டிய திலோத்தமா, "ஆமாம், அது என்ன 'ரிக்கார்டு' வாங்கிக் கொண்டு போகிறாய்?" என்று கேட்டாள்.





காந்தியை நீங்
கள் தேர்ந்
தெடுப்பீர்கள்.
புதிய அலங்
கார உடையில்
பளிச்சிடும்
வெண்மையான
சோப், காலை
இளங்காற்றைப்
போல் நறு
மணமும் புதிது.

காந்தி
டாய்லெட் சோப்

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிட்., பம்பாய்

உயர்தர சோப், வாசனை சாமான்கள் தயாரிப்பவர்கள்

(இந்திய மூலதனம், நிர்வாகத்துடன்
இந்தியாவில் தயாரிக்கப்பட்டது)

S. O. M - 384 - A TAM

ஒரு இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்டின் டயரியிலிருந்து

அவனுக்கு வீட்டை விற்கும் நிலை ஏற்பட்டது...

மனோஜ் ஸென் சொன்னான்: "வேண்டாம், எனக்கு ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் தேவையில்லை. நான் ஒரு வியாபாரி. எனக்குக் கிடைக்கும் அதிகப்படியான வருவாயை என் வியாபாரத்தில் மீண்டும் மடக்கினால், லைப் இன்ஷ்யூரன்ஸைக் காட்டிலும் அதிகப்படியான லாபம் கிடைக்கும்." ஆனால் அவன் என் தகப்பனாரின் நண்பன். என் வாலிபத் துடிப்பையும்; உற்சாகத்தையும் அவன் கண்டிருக்க வேண்டும். ஆகவே தானாகவே என்னிடம் ஒரு பாலிஸி எடுத்துக் கொண்டான்.

சில ஆண்டுகளுக்குப் பின் அவன் அதிர்ஷ்டம் மாறியது. அவன் வியாபாரம் படுத்தது. அவன் பங்காளி வியாபாரத்திலிருந்து விலகிக் கொண்டான். ஆகவே வியாபாரத்தை ஆரம்பத்திலிருந்து துவங்கும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஆனால் அவன் இதற்குத் தேவையான முதலுக்கு எங்கு போவான்? ஏக்கத்தினால் அவன் வீட்டை விற்கத் தீர்மானித்தான்.



விஷயம் அறிந்த நான், அவனை ஓடோடியும் சென்று பார்த்தேன். அன்றுதான் அவன் வீட்டை விற்பதற்கான பத்திரத்தை கையொப்பமிடுவதாக இருந்தான். அவன் இன்ஷ்யூரன்ஸ் பாலிஸி அடமானத்தின் பேரில் ஒரு கணிசமான தொகையை கடனாக வாங்கமுடியும் என்பதை விரைவில் அவனுக்கு ஞாபகமூட்டினேன். அதைக் கேட்டதும் அவன் உற்சாகத்தினால் துள்ளி எழுந்தான். ஏனெனில் அந்நிலையில் அவனுக்குத் தேவையானது திரவிய சகாயம்தானே! பிறகு கடனைத் தீர்த்து, பாலிஸியை மீட்க அவனால் முடிந்தது.

நான் மீண்டும் வாலிபனாக மாறி ஒரு தொழிலை தேர்ந்தெடுக்கும் அவசியம் ஏற்பட்டால் இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்டாக இருப்பதையே விரும்புவேன். அது சுற்றியிருப்பவர்களுக்கு தொண்டு புரிவதின் மூலம் ஏற்படும் திருப்தியை அளிக்கிறது.

- இந்த சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்களின் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே. ஆனால் இந்த சம்பவம் உண்மையில் நடந்தது.

Life Insurance Corporation of India

ASP/LIC 12

''எல்லாம் சினிமா சங்கீதம்தான்! இந்தக் காலத்திலே எங்கே போனாலும் இதே பாட்டுத்தானே? நகம் முளைக்காத குழந்தையிலிருந்து வழுக்கை விழுந்த தாத்தா வரையிலும் இதைத்தானே பாடுகிறார்கள்!''

''அதற்காக இதைப் போய்க் காசு கொடுத்து வாங்குவானேன்?''

''சிவராமனுக்கு சினிமாப் பாட்டு ரொம்பப் பிடித்திருக்கிறது. எப்பொழுது பார்த்தாலும் சினிமாப் பாட்டையே முணு முணுத்துக் கொண்டிருக்கிறார்! அவர் காப்பி சாப்பிடும் பொழுது இந்தப் பாட்டை வைத்து விடலாம் என்றிருக்கிறேன். அவருக்குப் பின்னணி கீதமாக ஒலிக்கட்டுமே!''

''ரொம்ப சரி!'' என்று சொன்ன திலோத்தமா சிறிது நேரம் பேசாமல் இருந்தாள். என்ன இருந்தாலும் அவளும் பெண்தானே? சிவராமனைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆசை அவளை உந்தித் தள்ளியது. ''என், வைதேகி! உன் சிவராமன் எப்படியிருக்கிறார்? நீ ஒன்றுமே சொல்லவில்லையே!'' என்று ஆரம்பித்தாள்.

''எப்படி இருக்கிறா ரென்றால்....? நான் எப்படி வேண்டும் என்று நினைக்கிறேனோ, அப்படி இருக்கிறார். நல்ல கட்டுமஸ்தான தேகம். ஒற்றைநாடியான உடல். உடலுக்கேற்ற உயரம். கம்பீரத் தோற்றம். கூரிய அறிவு. அறிவுக்கேற்ற பணம். பணத்துக்கேற்ற வீடு...''

''இவையெல்லாம் ஒன்றும் நான் கேட்கவில்லை. பார்ப்பதற்கு எப்படியிருக்கிறார் என்று கேட்கிறேன்!''

''பார்ப்பதற்கு ஒன்றும் மோசம் இல்லை. நான் சேகரித்திருக்கிற புள்ளி விவரப்படி பார்க்கப் போனால், 98.7 சத விகிதக் குடும்பங்களில் கணவன்மார்கள் சர்வ சாதாரணமாகத்தான் இருக்கிறார்கள். என்னைக் கேட்டால், நீட்டுப் போக்கான முகமும், கூரிய மூக்கும்தான் எனக்குப் பிடித்திருக்கின்றன. ஆனால் சிவராமனின் முகம் உருண்டையாக இருக்கிறது. மூக்கு சப்பட்டையாக இருக்கிறது. சப்பட்டை மூக்கு 94.7 சத விகிதம் பிடிவாத குணத்தைக் காட்டுகிறதாம். அதற்காக என்ன செய்ய முடியும்? மனிதனுடைய ஆசைகள் நூற்றுக்கு நூறு பங்கு எங்கேயாவது பூர்த்தி யடைகின்றனவா?'' என்று கேட்டாள் வைதேகி.

''அப்படியானால் உனக்கு அவரிடம் அபாரமான அன்பு ஏற்பட்டு விட்டது என்று சொல்லு!'' என்றாள் திலோத்தமா.

''இது என்ன அசட்டுக் கேள்வி? எனக்கு அவரிடம் அன்பு ஏற்படுவதா பெரிசு? அவருக்கு என்னிடம் அன்பு ஏற்படுவது அல்லவா முக்கியம்! புள்ளி விவரத்தைக் கொண்டு பார்த்தோமானால், 99.07 ஆடவர்களின் ஆசை, தங்கள் மனைவிமார்கள் அழகாயிருக்க வேண்டும், உடல் அமைப்பு வாளிப்பாயிருக்க வேண்டும், நற்குணங்கள் நிறைந்தவர்களாக இருக்க வேண்டும் என்பதுதான். இக்குணங்கள் எல்லாம் என்னிடம் இருக்கின்றன. அதனால் நூற்றுக்கு நூறு அவரை வெற்றி கொள்ள முடியும் என்று நான் நம்புகிறேன். இதில் தவறில்லையே!'' என்றாள் வைதேகி.

வைதேகி, திலோத்தமா இருவரும் ஒரே வயதினர். இருவரும் ஒரே கல்லூரியில் ஒன்றாகச் சேர்ந்து பட்டம் பெற்று வெளியே வந்தவர்கள். இருவரது குடும்பங்களும் உயர் நிலையில் இருந்தன. ஆயினும் வைதேகி, தானே சம்பாதிக்க விரும்பினாள்; தன் கால்களிலேயே நிற்க முயன்றாள். அதனால் அவள் உத்தியோகம் ஏற்றாள். இன்று பிறர் உதவியின்றித் தன் பலத்தைக் கொண்டே, தன் இரு மணத்தையும் முடித்துக் கொள்ள முயற்சி எடுத்துக் கொண்டிருந்தாள்.

இதற்கு நேர்மாறாகத் திலோத்தமா வீட்டிலேயே அடைந்து கிடந்தாள். இரண்டு வேளைகளும் சமைப்பது, வீடுவாசலைக் கவனித்துக் கொள்வது, மிகுந்த நேரங்களில் கவிதை, கதை, நாவல், நாடகம் என்று ஏதாவது படிப்பது—இதுதான் அவளது உலகம். இவற்றைத் தவிர, அவள் வேறு ஒன்றும் செய்வதில்லை; சிந்திப்பதும் இல்லை.

''இவள் வருங்கால வாழ்வு என்ன ஆகும்?''

திலோத்தமாவைப்பற்றி வைதேகி சிந்திக்கலானாள். அதோடு அவளைப் பார்த்து, ''என், திலோத்தமா! உன் கல்யாணத்தைப் பற்றி நீ ஒரு முயற்சியுமே எடுத்துக் கொள்ளக் காணோமே, ஏன்?'' என்றும் கேட்டாள்.

திலோத்தமா சிரித்து, ''முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமா? எதற்கு? கல்யாணம் என்பது இன்று நேற்று ஏற்பட்ட தொடர்பு அல்ல; ஜன்ம ஜன்மாந்தரமாக ஆடவர்-பெண்டிரிடையே ஏற்படும் ஒரு பிணைப்பு. அதனால் ஆண்டவன், என்னை எப்பொழுது சிருஷ்டித்து விட்டானோ, அப்பொழுதே **அவரையும்** எனக்காகச் சிருஷ்டித்திருப்பான் என்ற பரிபூரணமான நம்பிக்கை எனக்கு இருக்கிறது. எனக்கு வாழ்க்கைத் துணையாக வரப்போகிறவர் எங்கேயோ பிறந்து வளர்ந்து கொண்டிருக்கிறார். என்றைக்காவது ஒருநாள் திடுதிப்பென்றுவந்து என்னைக் கொத்திக் கொண்டு போகப் போகிறார். எங்கள் இருவர் கண்களும் ஒன்றோடு ஒன்றிய நோக்கும். உடனே காதல்



பிறக்கும். 'இத்தனை நாட்களும் உன்னைத் தான் தேடிக் கொண்டிருந்தேன்!' என்று சரசசல்லாபமிடும். நிஜமாகச் சொல்கிறேன், வைதேகி! என் கனவு நிகழ்ச்சியாகப் பரிணமித்து விட்டால், எவ்வளவு நன்றாக இருக்கும், தெரியுமா?'' என்றாள்.

'' கனவு நனவாகி விட்டால் நன்றாகத்தான் இருக்கும். அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பாதான்! ஆனால் முளைக்க வேண்டுமே! எனக்குத் தெரிந்தவரை இம்மாதிரி எதுவும் அதிசய சம்பவம் நிகழ்ந்திருப்பதாகத் தெரியவில்லை. நான் நமது சமூகத்தில் நிகழ்ந்துள்ள திருமணங்களைக் கணக்கிட்டுப் புள்ளி விவரம் சேகரித்து வைத்திருக்கிறேன். 'கண்டதும் காதல்' என்ற முறையில் முதல் சந்திப்பிலேயே நடந்த கல்யாணங்கள் எனக்குத் தெரிந்தவரையில் .0003 சத விகிதத்துக்கு மேல் போகவில்லை!'' என்றாள் வைதேகி.

'' அதாவது லக்ஷத்தில் மூன்று என்று சொல்கிறாய். அவ்வளவுதானே? என் திருமணம் நான்காவதாக இருந்து விட்டுப் போகட்டும். நான் கல்யாணம் செய்து கொள்வதாயிருந்தால் காதல் திருமணம்தான் செய்து கொள்ளப் போகிறேன். இப்பொழுதுதான் நான் ஒரு கவிதை படித்துக் கொண்டிருந்தேன். அதில்....'' என்று சொன்ன திலோத்தமா அந்தக் கவிதையை எடுத்துப் படிக்கலானாள்.

'' போதும், போதும்! இந்தக் காதலைப் பற்றி யெல்லாம் இப்படி அநாவசியமாகப் புகழ்வது எனக்குக் கட்டோடு பிடிக்கவில்லை!'' என்று சொன்ன வைதேகி எழுந்து தன் செருப்பை மாட்டிக் கொண்டாள். பிறகு, ''ஐம்பது சத விகிதம் பொய்யையும் ஐம்பது சத விகிதம் பைத்தியக்காரத்தனத்தையும் தான் கவிதை என்று சொல்லுகிறார்கள். இது என் திட்ட வட்டமான அபிப்பிராயம். வாழ்க்கையில் அடிபட்டு அநுபவப் படாமல் உனக்கு நான் சொல்வதில் நம்பிக்கை ஏற்படாது. சரி, நான் போய் வரட்டுமா?'' என்று சொல்லி விட்டுப் புறப்பட்டாள்.

'' உன் கணக்கு காதல் விஷயத்திலும் மெய்யானால் எனக்குச் சரியே!'' என்று விடை கொடுத்தாள் திலோத்தமா.

வைதேகி வேகமாக எட்டு எடுத்து வைத்த வண்ணம் தன் வீட்டை நோக்கி நடந்தாள்.

''**ப**ஞ்சவடி!''

''ஹோல்டான்!''

மாலை ஆறரை மணிக்குப் பஞ்சவடியில் பஸ் நின்றது. சிவராமன் ஜம்மென்று மாப்பிள்ளை போல் இறங்கினான். பத்து நிமிஷம் நடந்தால் அவன் வைதேகியின் வீட்டை அடைந்து விடலாம். ஆனால் விதியின் கணக்கு வேறாக இருந்தது.

''இன்று வானம் நிர்மலமாயிருக்கும். காற்றுக் கூட வறண்டதாக வீசும்!'' என்று வானிலை இலாக்கா வெளியிட்ட அறிக்கையைப் பத்திரிகைகள் அப்படியே பிரசுரித்திருந்தன. வானிலை இலாக்காவின் கணக்கு சரியாகவே இருக்க வேண்டும் என்ற நம்பிக்கை பத்திரிகைகளுக்கு!

சிவராமன் ஒன்பதாம் நம்பரைப் பாரிஸ் கார்னரில் பிடித்த பொழுது வானிலை அறிக்கைப் பிரகாரம் வானம் சுத்தமாகத்தான் இருந்தது. பஸ் புறப்பட்ட சிறிது நேரத்துக்கெல்லாம்தான் வானத்தில் இங்கொன்றும் அங்கொன்றுமாக மேகங்கள் பவனிவரத் தொடங்கின. எழும்பூரை அடையும்பொழுது காற்றும் மைல் கணக்கில் அடிக்கத் தொடங்கியது. சிவராமன் பஞ்சவடியில் இறங்கிய பொழுது பொட்டுப் பொட்டென்று பெரிய தூற்றலாக விழத் தொடங்கியது.

மழையில் எத்தனைக் கெத்தனை முடியுமோ, அத்தனைக் கத்தனை குறைவாக நனையவேண்டும் என்பதற்காகச் சிவராமன் ஓட்டமும் நடையுமாக நடக்கலானான். ஆனால் மழை பெரிதாக ஆரம்பித்து விட்டது. இந்த மழையில் மேலும் நடந்தால், வைதேகியின் வீட்டை அடைவதற்குள் அவன் தெப்பமாக நனைந்து விட வேண்டியதுதான். எனவே, மழை சற்றுக் குறையும் வரையில் எங்கேயாவது ஒண்டிக் கொள்வது என்ற தீர்மானத்துடன் அவன் ஒரு வீட்டின் வாசற் கதவைத் திறந்தான்.

அவசரமாக உள்ளே நுழைந்த அவன், அறியாமல் ஏதோ ஒரு பொருளின்மேல் காலை வைத்து விட்டான். அது வழுக்கிவிடவே 'தொபுகடீர்' என்று கீழே விழுந்தான். ஆனால் நல்ல வேளையாக முதலில் வலது கையைக் கீழே ஊன்றிக் கொண்டான். அவன் கை காலைச் சரி செய்து கொண்டு எழுந்திருக்க முயன்றபொழுது, வீட்டின் எதிர்ப்புறத்துக் கதவு திறந்தது. ஒரு இளம் பெண் அவனது அலங்கோல நிலையைப் பார்க்கலானாள். அவளைக் கண்டதும் சிவராமனுக்கு எழுந்திருக்க வேண்டும் என்பது மறந்துவிட்டது. அந்த நிலையிலேயே அவளை வைத்த கண் வாங்காமல் பார்க்கத் தொடங்கிவிட்டான்.

அத்தனை அழகிய பெண்ணை அதற்கு முன்னால் அவன் பார்த்ததே இல்லை. தாழம்பூ மேனி. பிளந்த மாங் கொட்டை போன்ற பெரிய கருவிழிகள். வில்லொத்த புருவங்கள். மல்லிகை மொட்டை நிகர்த்த மூக்கு. கோவைப் பழமெனச் சிவந்த உதடுகள். வியப்பினால் அவை சற்று விரியவே, உள்ளே பல முல்லைகள் மலர்ந்து காட்சியளித்தன. 'ஆகா! எத்தனை அடக்கமான தோற்றம்!' அழகைப் பருக ஆரம்பித்து விட்ட அவனுக்கு எழுந்திருக்கத் தோன்றினால்தானே?

'' உங்களால் எழுந்திருக்க முடியவில்லையா? நான் வேண்டுமானால் ஒரு கை கொடுத்துத் தூக்கி விடட்டுமா?''

அவளுடைய குரலில் தேனின் இனிமை ததும்பி நின்றது.

இதைச் சொன்னவள், சொன்னதோடு தன் காரியமும் முடிந்து விட்டதாகப் பேசாமல் நின்ற இடத்திலேயே நின்றிருக்கலாம் அல்லவா? அப்படிச் செய்யாமல் முன் வந்து ஒத்தாசைக்குக் கையையும் நீட்டி விட்டாள். பார்க்கப் போனால், சிவராமன் தானாகவே கூட எழுந்திருப்பான். அவனுக்கு என்ன, பெரிய அடியா பட்டு விட்டது? இருந்தாலும் எழிலும் இனிமையும் ஒருங்கே கூடிய ஒரு பெண் உதவிக்குத் தானாக முன் வந்து கை நீட்டிக் கூப்பிடும் பொழுது, 'வேண்டாம்' என்று மறுத்து விட்டு எழுந்திருந்தால் நன்றாயிருக்குமோ? அது அவளை அவமதிப்பதாக முடியாதா? எனவே, அவள் கையை அத்துக்குப் பிடித்துக் கொண்டு அவன் எழுந்து நின்றான். (அடுத்த இதழில் முடியும்)

Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10
for the Proprietors Messrs Bharathan Publications Private Limited
Managing Editor: T. Sadasivam.



ஆரோக்கியமான குழந்தைகள் தவறாமல் லைப்பாய் சோப் உபயோகித்துக் குளிக்கின்றனர்

*அன்றாட அழுக்கிலுள்ள கிருமிகளை அது கழுவிக் களைகிறது!



*தினசரி நம்மீது படியும் அழுக்கிலுள்ள கிருமிகள் வாயிலாக நாம் ஒவ்வொருவரும் தொற்று நோய் அபாயத்துக்கு ஆளாகிறோம். அதன் காரணமாகவே, ஆரோக்கியமுள்ள பலர் வழக்கமாக லைப்பாய் சோப் உபயோகித்து அழுக்குடன் கிருமிகளையும் கழுவிக் களைந்து தம் ஆரோக்கியத்தைப் பாதுகாத்துக் கொள்கின்றனர்—ஆரோக்கியமான அத்துடன் புத்துணர்ச்சியை அது அளிக்கிறது!

L. [illegible] TM

இந்தியாவில் தயாரித்தது

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

உங்கள் மனதிற்குகந்த பவுடர்

வசீகர நறுமணங் கமழ்வதான...

பியர்ஸ் டால்கம்



கொள்ளைகொள்ளும் நறுமணம், சருமத்தோடு குலவும் இன்பம், பியர்ஸ் மேன்மை — இவ்வனைவையும் உங்களுக்கு அளித்திடுவது **பியர்ஸ் டால்கம்!** உன்னதமாக நறுமணமூட்டப் பெற்ற இந்தப் பவுடரை உபயோகித்தால் கோடையின் உச்சநிலையிலும் நீங்கள் மாறாத புது மலர்ச்சியுடன் நாள் முழுவதும் மிளிர முடியும். இள மஞ்சள் நிறமும் பச்சை நிறமும் எடுப்பாக அமையப்பெற்ற டின்களில் வரும் **பியர்ஸ் டால்கம்** பவுடரை வாங்குங்கள்.





மேனியின் பராமரிப்புக்கு, க்ளிஸரின் அடங்கிய **பியர்ஸ் சோப்** உபயோகியுங்கள். தூய்மையே உருவான சிறந்த சோப் பியர்ஸ் தான் என்பது உங்களுக்கே புலப்படும்!